பல்கலைக்கழக மானியக்குழு (UGC) அங்கீகாரம் பெற்ற மாதஇதழ்
New Centurian Ungal Noolagam ISSN 2394-7535-115

நியூ செஞ்சுரியின்

# உங்கள் நூலகம்


மாத இதழ்

New Centurian Ungal Noolagam (Tamil English - Bilingual Monthly)



| | | | | | |
|---|---|---|---|---|---|
| மலர் : 16<br>Vol : 16 | இதழ் : 09<br>Issue : 09 | www.ncbhpublisher.in | டிசம்பர் 2024<br>December 2024 | விலை<br>Price ₹ 45/- | ஆண்டு சந்தா<br>Annual Subscription ₹ 540/- |






## வானம்பாடிக் கவிஞர் சக்திக்கனல்

- பேராசிரியர் சிற்பி பாலசுப்பிரமணியம்

## எதார்த்த எழுத்தாளர் ராஜம் கிருஷ்ணன்

- பொன்னீலன்






## பீடு நடைபோடும் பாடநூல் கழகம்

- டாக்டர் சங்கர சரவணன்

## எனது நண்பர் ராஜ்கௌதமன்

- மாற்கு



# நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின்

## புதிய வெளியீடுகள்





₹ 690/-




₹ 130/-




₹ 200/-




₹ 160/-

**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,**
41-பி,சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600 050.
☎ 044 - 26251968, 26258410, 48601884 www.ncbhpublisher.in | email: info@ncbh.in



கற்றது கைம்மண்ணளவு
கல்லாதது உலகளவு

**நியூ செஞ்சுரியின்**

# உங்கள் நூலகம்

**மாத இதழ்**

*திருவள்ளுவராண்டு 2055*

*மலர் - 16 இதழ் - 09 - டிசம்பர் 2024*


ஆசிரியர்

**த.ஸ்டாலின் குணசேகரன்**

பொறுப்பாசிரியர்

**சண்முகம் சரவணன்**

ஆசிரியர் குழு

பேராசிரியர் ஆ.சிவசுப்பிரமணியன்
முனைவர் ச.சுபாஷ் சந்திரபோஸ்
முனைவர் ந.முத்துமோகன்
முனைவர் மு.இராமசுவாமி
முனைவர் நா.இராமச்சந்திரன்
முனைவர் பா.ஆனந்தகுமார்
முனைவர் ஞா.ஸ்டீபன்
ப.கு.ராஜன்
முனைவர் இரா.அறவேந்தன்
முனைவர் இரா.காமராசு
முனைவர் உ.அலிபாவா

இதழ் வடிவமைப்பு

*கா. குணசேகரன்*



நியூ செஞ்சுரி வாசகர் சங்கம்
பதிவு எண் : 21/2005/ 11/2/2005
16 (142). ஜானி ஜான்கான் ரோடு.
இராயப்பேட்டை. சென்னை - 600 014
ungalnoolagam@gmail.com
இணைய தள முகவரி: www.ncbhpublisher.in

தனி இதழ் ₹ 45.00. ஆண்டு சந்தா ₹ 540.00
மாணவர்களுக்கு ₹ 500.00
ஆயுள் சந்தா ₹ 5400.00
அயல்நாடு (ஆண்டு சந்தா) ₹ 4050.00

சந்தா தொகையை
**New Century Reader's Sangam**
**Central Bank of India**
**Ambattur Branch. Chennai - 600 050**
**A/c.No. 1035249018**
**IFSC Code : CBIN0282161**
என்ற வங்கிக் கணக்கில் செலுத்தலாம்.

---

உங்கள் நூலகம் பற்றிய விமர்சனக் கடிதங்கள்,
உங்கள் நூலகத்திற்கான படைப்புகள், கட்டுரைகள்,
நூல் விமர்சனங்கள், மதிப்புரைக்கான நூல்கள்
ஆகியவற்றைக் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்புமாறு வேண்டுகிறோம்.

**பொறுப்பாசிரியர்**
**உங்கள் நூலகம்**
**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், (பி) லிட்.,**
**41-பி. சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்.**
**அம்பத்தூர். சென்னை - 600 050.**
**தொலைபேசி எண் : 044-26251968, 26258410**


உள்ளே...


1. ஒவ்வொரு தமிழனும் கட்டாயம் படிக்க வேண்டிய நூல்
ஆசிரியர் குழு........ 04

2. எனது நண்பர் ராஜ்கௌதமன்
மாற்கு........ 07

3. வானம்பாடிக் கவிஞர் சக்திக்கனல்
பேராசிரியர் சிற்பி பாலசுப்பிரமணியம்........ 10

4. வீரமாமுனிவர் ஒரு சித்த மருத்துவரா?
டாக்டர் சு.நரேந்திரன்........ 14

5. மார்க்சியத்தில் தொடங்கி பவுத்தத்தில் மங்களம் பாடிய கவிஞர்
சிகரம் ச.செந்தில்நாதன்........ 17

6. பீடு நடைபோடும் பாடநூல் கழகம்
டாக்டர் சங்கர சரவணன்........ 21

7. உயர்ந்த ஓர் மரபு கீழிறங்கிய கதையா?
பேராசிரியர். சி. மௌனகுரு........ 26

8. சிகரங்களைச் செதுக்கிய சிற்பி ஜெயகாந்தன்
பேராசிரியர் ஜெயந்தஸ்ரீ பாலகிருஷ்ணன்........ 33

9. எதார்த்த எழுத்தாளர் ராஜம் கிருஷ்ணன்
பொன்னீலன்........ 40

10. இரு தன்வரலாறுகள்
பாவண்ணன்........ 42

11. தமிழ் எழுத்து மரபின் தோற்றம் குறித்த ஆய்வுக் களஞ்சியம்
அ. சதீஷ்........ 46

12. சிறுவர் பருவ சிறார் இலக்கியம் ஒரு பார்வை
சுகுமாரன்........ 49

13. மனித உறவுகளை வளர்க்கும் உணர்வுப் பெட்டகம்
பேராசிரியர் இரா.காமராசு........ 54

14. காலம் யாவும் ஒளிரும் மாமணி
முனைவர் ந.கவிதா........ 58


15. சங்க கால வாழ்க்கை வட்டச் சடங்குகள்
முனைவர் சு. தீபலட்சுமி........ 61

16. சூழலியல் விழிப்புணர்வு நாவல்
முனைவர் ச. கண்ணதாசன்........ 65

17. சங்க இலக்கியம் காட்டும் தலைவியின் வாழ்வு
பொ. அபிராமி & முனைவர் ச. இராமலட்சுமி........ 68

18. Professor Y.Subbarayalu Felicitation to his contribution to south Indian History
Prof. K.R.Sankaran & N.Kathiravan........ 72






# ஒவ்வொரு தமிழனும் கட்டாயம் படிக்க வேண்டிய நூல்

ராகுல சாங்கிருத்தியாயன் 1942 இல் ஹஜாராபாக் மத்திய சிறையில் அடைக்கப்பட்டிருந்தபோது, சிறைக்குள்ளேயே எழுதி முடித்த நூல்தான் 'வால்காவிலிருந்து கங்கைவரை'

இந்நூல் பதிப்பிக்கப்பட்டு வெளி வந்து குறுகிய காலத்திலேயே கண. முத்தையா அவர்களால் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு அவரின், தமிழ்ப் புத்தகாலயம் மூலம் 1949இல் பதிப்பிக்கப்பட்டது. அந்நூல் இதுவரை 37 பதிப்புகள் வந்து பல்லாயிரம் வாசகர்களைச் சென்றடைந்துள்ளது.

கண. முத்தையா நேதாஜியின் ஐ.என்.ஏ வில் இருந்து கைதாகி 1945-46 இல் பர்மாவில் யுத்தக் கைதியாக சிறையிலிருந்தபோது ராகுல்ஜியிடம் கடிதம் மூலம் அனுமதிபெற்று இந்நூலை சிறைக்குள்ளேயே மொழிபெயர்த்து முடித்துள்ளார்.

இந்நூல் வெளிவந்த சில நாட்களில் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பேசிய அறிஞர் அண்ணா 'ஒவ்வொரு தமிழனும் கட்டாயம் படிக்க வேண்டிய நூல்' என்று இதனை அழுத்தமாகக் குறிப்பிட்டுள்ளார்.

'பொதுவுடைமை தான் என்ன?' என்ற ராகுல்ஜியின் நூலையும் கண. முத்தையா தான் மொழிபெயர்த்துள்ளார். இந்நூல் 1946 லேயே வெளியிடப்பட்டது.

இந்நூலும் தமிழ் வாசகர்களிடையே பெரும் தாக்கத்தை உருவாக்கிற்று. அப்போது சென்னை மாகாணத்தில் பிரகாசத்தின் தலைமையிலான ஆட்சி. கம்யூனிஸ்ட் கட்சி தடைசெய்யப்பட்டிருந்த காலம். அன்றைய ஆளுங் கட்சி உறுப்பினர் 'பொதுவுடைமைதான் என்ன?' என்ற நூலை மாகாண அரசு தடை செய்ய வேண்டும் என்று சட்ட சபையில் பேசினார். அதற்கு பதில் அளித்த அன்றைய கல்வியமைச்சர் டாக்டர் ப.சுப்பராயன் 'அந்த நூல் வெளிவந்ததுமே நான் அதை வாங்கிப் படித்துவிட்டேன். அது கட்சிப் பிரச்சார நூலல்ல; ஒரு நல்ல தத்துவ விளக்க நூல். தத்துவ விளக்க நூல்களை தடை செய்ய இயலாது' என்று கூறினார்.

செக் நாட்டுப் புரட்சியாளரும் ஊடக வியலாளருமான ஜூலியஸ் பூசிக் எழுதிய 'தூக்கு மேடைக் குறிப்புகள்' என்ற நூல் எம்.இஸ்மத் பாஷா அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டு தமிழ்ப் புத்தகாலயத்தால் 1949 இல் வெளியிடப்பட்டது.

இந்நூலும் இத்தகைய நூல்கள் அனைத்துமே அக்காலத்தில் பல்லாயிரம் பிரதிகள் விற்றுத் தீர்ந்ததோடு அடுத்தடுத்து பல பதிப்புகள் கண்டன.

'தமிழ் மொழிபெயர்ப்பில் உலக இலக்கியம்' என்ற தலைப்பில் திறனாய்வாளர் ந.முருகேசபாண்டியன் எழுதிய நூல் 2010இல் வெளிவந்துள்ளது. அது அவரது முனைவர் பட்ட ஆய்வேடு. அதற்கு அணிந்துரை எழுதியுள்ள எழுத்தாளர் பிரபஞ்சன் "என் உலக இலக்கிய அறிவு, ஆங்கிலத்தால் வந்தது அன்று; மொழிபெயர்ப்பால் நேர்ந்ததே ஆகும். புதுவையில் ஆட்சியாளர்கள் பிரஞ்சியராய் இருந்தமை காரணமாக எனக்குப் பிரஞ்ச் இலக்கிய வாதிகளே முதல் படைப்பாளர்கள். எங்கள் ஊர் ரொமென் ரொலான் நூலகத்தில் இருந்த பிரஞ்ச் தமிழ் மொழியாக்க நூல்கள் என் வாசிப்பில் முதலிடம் பெற்றன. மாப்பசான், பால்சாக், தூமாஸ், ஆந்த்ரே மீத், ரஷ்ய இலக்கிய ஆசான்கள் செகாவ், கார்க்கி, தால்ஸ்தோய், தாஸ்தாவ்ஸ்கி, துர்கனேவ், சோகல், புஷ்கின், அலக்சி டால்ஸ்டாய், சிங்கிஸ் ஐத்மாத்தவ் என்று வளர்ந்து தாமஸ்மன், ஹெர்மென், ஹெஸ்ஸே எனப் படர்ந்து அமெரிக்க, பின் லத்தீன் அமெரிக்க ஆசிரியர்கள் என வளர்ந்த வாசிப்பு என்னுடையது. என் படைப்பால் சத்தான பகுதிகள் ஏதேனும் இருக்குமானால் அது, மேற்சொன்ன ஆசான்கள் தந்தது" என்று குறிப்பிட்டுள்ளார்.

தனது ஆய்வு நூலில் தமிழில் வெளிவந்துள்ள உலக அளவிலான கீர்த்தி மிக்க பிறமொழி நூல்கள் பற்றி மிக விரிவாகவும் துல்லியமாகவும் விளக்கியுள்ளார் ந.முருகேச பாண்டியன்.

தமிழ் மொழிபெயர்ப்பு நூல்கள் வெளியீட்டில் ஆங்கில நூல்கள் எண்ணிக்கையால் முதலிடத்தைப் பெறுவதாகவும், ரஷ்ய மொழி நூல்கள் இரண்டாம் இடத்தைப் பெறுவதாகவும் பிரஞ்ச் மொழி மூன்றாம் இடத்தைப் பெறுவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

'உலக மொழிகளில் எழுதப்பட்டுள்ள உன்னதமான இலக்கியப் படைப்புகள், தமிழில் மொழிபெயர்க்கப்படும் போது, ஒரு வகையில் அவை தமிழ்ப் படைப்புகளாக மாறும் விந்தை நிகழுகின்றது.

தமிழில் வெளியாகும் அசலான படைப்புகளுக்கு எந்த வகையிலும் குறையாத இடத்தை மொழிபெயர்ப்புப் படைப்புகள் பெற்று வருகின்றன. என்றும் தனது முன்னுரையில் குறிப்பிட்டுள்ளார்.

உலகெங்கும் வெளியாகியுள்ள தரமான நூல்கள், தகுதிமிக்க நூல்கள், தமிழ்ச் சமூகத்தை முன்னோக்கி இட்டுச் செல்லும் அறிவார்ந்த நூல்கள், மக்களை சிந்திக்கத் தூண்டும் அறிவியல் கண்ணோட்டத்துடன் படைக்கப்பட்டுள்ள அரிய நூல்கள் அவை எந்த மொழியில் வெளிவந்திருந்தாலும் அவையனைத்தும் தமிழில் கொண்டுவர சிறப்பு முயற்சிகள் மேற்கொள்ளப்படவேண்டும்.


தமிழில் அசல் நூல்களுக்குத் தான் அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும் என்பதில் இரண்டு கருத்துகள் இருக்க முடியாது. தனித்தன்மை மிக்க தமிழ் நூல்கள் உலக மொழிகளுக்கு எடுத்துச் செல்லப்பட வேண்டும் என்பதிலும் மாற்றுக் கருத்து இல்லை.

இவற்றுக்கு அடுத்தபடியான முக்கியத்துவம் மொழிபெயர்ப்பு நூல்களுக்கு இருக்குமெனில் தமிழ் மண் அறிவுத்தளத்தில் செழித்தோங்கும் என்பதில் சந்தேகமில்லை. மொழிபெயர்ப்புக்கான நூல் தேர்வுகளும் அத்தகைய திசை நோக்கியதாக இருத்தல் வேண்டும். மொழிபெயர்ப்புகளும் அதற்கேற்ற முழுத்தரத்தோடு விளங்க வேண்டும்.


அரசு, பல்கலைக்கழகங்கள், பதிப்பகங்கள் சமூக நலப்பொது அமைப்புகள், ஆர்வமும் ஈடுபாடும் மிக்க தனி நபர்கள் எனப் பன்முக மொழிபெயர்ப்பு முயற்சிகள் அவசியப்படுகின்றன.

**ஆசிரியர் குழு**


# நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் புதிய வெளியீடுகள்




₹ 215/-




₹ 130/-




₹ 450/-




₹ 285/-




₹ 290/-





₹ 90/-


**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,**

41-பி.சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600 050.

☎ 044 - 26251968, 26258410 | www.ncbhpublisher.in | email: info@ncbh.in



# எனது நண்பர் ராஜ்கௌதமன்



மாற்கு

புஷ்பராஜ் என்ற ராஜ்கௌதமனும் நானும் விருதுநகர் மாவட்டம் வத்திராயிருப்புக்கு அருகிலுள்ள புதுப்பட்டியில் பிறந்த கத்தோலிக்கக் கிறிஸ்தவர்கள். ஒன்றாகப் படித்தவர்கள். நண்பர்கள். அவரது இலக்கிய ஆளுமை பற்றி நான் எழுதவில்லை. மாறாக அவரைப்பற்றிய சில நினைவுகளை நண்பனாகப் பதிவு செய்கிறேன். கௌதமனின் தந்தை ராணுவத்தில் லெப்டினட் கர்னலாகப் பணியாற்றியவர். ஓய்வு பெற்றபின் தனது வரலாற்றை எழுதியுள்ளார். அதன் கையெழுத்துப் பிரதியை அவரது மகள் பாஸ்டினா என்ற பாமா சில ஆண்டுகளுக்கு முன்பு என்னிடம் காட்டினார். வாசித்த நான் வியந்தேன். சிதைந்த நிலையிலிருந்த பிரதியை கணினியில் பதிவு செய்ய உதவினேன். இவ்வாண்டு ஏப்ரலில் பாமாவுக்கு இயக்குநர் ப. ரஞ்சித்தின் நீலம் அமைப்பு ‘வேர்ச்சொல் விருது' வழங்கியது. 'பாமா: தமிழ் இலக்கியத்தின் திசைவழி' என்ற நூலையும் நீலம் வெளியிட்டது. அதில் ‘சுபேதார் சூசைராஜ் சரித்திரம்' என்ற தலைப்பில் அவரது தந்தையின் சரித்திரமும் இடம்பெற்றது.

“

சில குறும்புகள் செய்வார். அதற்காக விடுதிக் கண்காணிப்பாளரிடம் உள்ளங்கையில் பிரம்படி வாங்குவார். அடி வலிக்கவில்லை என்று மற்றவர்களிடம் காட்ட ‘ப்பூ...’ என்று கையில் ஊதி பகடி செய்வார். அனைவரும் சிரிப்போம். அதற்காக மறுபடியும் அடி வாங்குவார்.

”




மூத்த மகன் கௌதமன் பிறந்தபோது அவரது தந்தை ராணுவத்தில் இருந்தார். மூன்று மாதங்களுக்குப் பின்பே மகனைப் பார்த்தார். மகனைப் பார்த்த மகிழ்வை அவரது சரித்திரத்தில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். 'தன் பிள்ளையைப் பார்த்து எவ்வளவு சந்தோஷப்பட்டான் தெரியுமா? தன்னைப்போல் இருந்தான் பிள்ளை. பார்க்க அழகாயிருந்தான். தூக்கித் தூக்கி முத்தம் கணக்கில்லாமல் கொடுத்தான்.’ இது ஒரு தந்தையின் மனநிலை என்று எளிதாகக் கூறலாம். ஆனால் தற்போது கௌதமனின் நிழல்படத்தையும் தந்தை சூசைராஜின் நிழல்படத்தையும் பார்த்தால் வித்தியாசம் பெரிதாகத் தெரியாமல் இருவரும் ஒன்றுபோல் இருப்பதாகத் தோன்றும்.

இன்னொரு ஒற்றுமையும் உண்டு. தந்தை தனது சுயசரிதையை எழுதியதுபோல மகன் கௌதமன் ‘சிலுவைராஜ் சரித்திரம், காலச்சுமை, லண்டனில் சிலுவைராஜ்' என மூன்று சுயசரிதை நூல்களையும், மகள் பாமா 'கருக்கு, மனுஷி, விருட்சங்களாகும் விதைகள்' என மூன்று சுயசரிதை நூல்களையும் எழுதியுள்ளனர். தந்தை, மகன், மகள் என மூவரும் சுயசரிதைகள் எழுதியுள்ளது சரித்திரச் சாதனை.

கௌதமனும் நானும் புதுப்பட்டியில் திரிங்கால் ஆரம்பித்த திரிங்கால் நடுநிலைப் பள்ளியில் படித்தோம். இருவரும் மதுரையில் திரிங்கால் ஆரம்பித்த புனித மரியன்னை உயர்நிலைப் பள்ளியில் கல்வியைத் தொடர்ந்தோம். ஆங்கிலம், தமிழ் பாடங்களைச் சிறப்பாகப் படிப்பார். கணிதம் கற்கச் சற்றுக் கஷ்டப்படுவார். பகடி செய்வது, பகடியாகப் பேசுவது அவரது தனிச் சிறப்பு. சில குறும்புகள் செய்வார். அதற்காக விடுதிக் கண்காணிப்பாளரிடம் உள்ளங்கையில் பிரம்படி வாங்குவார். அடி வலிக்கவில்லை என்று மற்றவர்களிடம் காட்ட ‘ப்பூ...' என்று கையில் ஊதி பகடி செய்வார். அனைவரும் சிரிப்போம். அதற்காக மறுபடியும் அடி வாங்குவார். விடுதி மாணவர்கள் பெரும்பாலோர் அவரைச் சூழ்ந்துகொண்டு அவரது பகடியை ரசிப்பர்.

பள்ளிப் படிப்பிற்குப் பின் அவர் பாளையங்கோட்டை தூய சவேரியார் கல்லூரியில் பி.யூ.சி.யும் அதன்பின் விலங்கியல் பட்டப் படிப்பும் முடித்தார். நான் சாத்தூரிலுள்ள தூய தனிஸ்லாஸ் ஆசிரியர் பயிற்சிப் பள்ளியில் படித்தேன். இருவரும் கடிதங்கள் வழியாக நட்பை வளர்த்தோம். அவரது கடிதங்கள் வித்தியாசமானவை. முழுவதும் எண்களால் நிறைந்திருக்கும். ஆங்கில எழுத்துக்கள் ஒவ்வொன்றிற்கும் ஒரு எண். அவற்றை ஆங்கில எழுத்துக்களாக மாற்றி எழுதிய பின்தான் வாசிக்க முடியும். எதையும் படைப்பாற்றலுடன் செய்யும் பண்பு அப்பொழுதே அவரிடம் நிறைந்திருந்தது.

கல்லூரியிலேயே டியூட்டராகப் பணிபுரிந்தார். ஆங்கிலப் புத்தகங்கள்மூலம் ஆங்கில அறிவை வளர்த்துக்கொண்டார். அதனால் பிற்காலத்தில் சில ஆங்கில நூல்களைத் தமிழில் மொழிபெயர்த்தார். அப்போது கல்லூரியில் தமிழ் முதுகலைப் பட்டப் படிப்புத் தொடங்கியது. அதில் சேர்ந்து தமிழில் முதுகலைப் பட்டம் பெற்றார். தமிழைச் சிறப்பாகக் கற்றார். தமிழில் மாற்றுச் சிந்தனையுடன் பேச, எழுத ஆரம்பித்தார்.



**1988இல் உத்திரமேரூர் அருகில் உள்ள ஓங்கூரில் ராஜ்கௌதமன் அவரது குடும்பத்துடன் மாற்கு அடிகளாரை சந்தித்தபோது எடுத்த புகைப்படம்**

கல்லூரிப் படிப்பு முடிந்ததும் சில ஆண்டுகள் புதுப்பட்டியில் வாழ்ந்தார். அதிகம் வாசித்தார். மார்க்சிய சிந்தாந்தத்தைக் கற்றார். வாசிக்கும் வழக்கம் எங்களது நட்பை ஆழப்படுத்தியது. வாசிப்பு வழக்கமுள்ள வெவ்வேறு சித்தாந்தங்களுடைய நண்பர்கள் சாதியைக் கடந்து இணைந்தோம். படித்தவற்றை விவாதித்தோம். அதனால் நட்பு வட்டம் பெரிதானது. நட்பை உயர்வாக மதித்தார். தலித் பார்வையை முன்னெடுத்தாலும் அதற்குள் முடங்காமல் பரந்த பார்வையை வளர்த்துக்கொண்டார். அதனால் அவரது நட்பு வட்டம் இன்னும் விரிந்து பல தரப்பினரையும் அரவணைத்தது.

இயேசு சபையினரின் கல்வி நிறுவனங்களில் முதுகலைப்பட்டம் வரை படித்த அவர் முடிவில் கடவுள் மறுப்பாளராகவும், மார்க்சிய சிந்தனையாளராகவும் மாறினார். சாதி மறுப்பு, சாதி ஒழிப்பை இயேசு சபையினர் வலியுறுத்தாதது காரணமாக இருக்கலாம். தலித் கிறிஸ்தவர் என்பதால்தான் தனக்கு இடஒதுக்கீட்டில் அரசு வேலை கிடைக்கவில்லை என்று ஆதங்கப்பட்டார். நிறுவனத் திருஅவையில் ஈடுபாடு இல்லாத அவர் நேர்மையுடன் புஷ்பராஜ் என்ற பெயரை ராஜ்கௌதமன் என்று மாற்றி கெஜட்டில் பதிவு செய்தார். இந்த மாற்றம்தான் அவருக்கு புதிய வாழ்வு அளித்தது. சிலுவைராஜ் சரித்திரம் அவரது பெயர் மாற்றத்தோடு முடிவடையும். இருப்பினும் அவர் கிறிஸ்தவத்தை அதிகம் விமர்சிக்கவில்லை. தனது இறுதிப் படைப்பாக 'இயேசுவும் நானும்' என்ற தலைப்பில் ஒரு நூலை எழுத விரும்புவதாக நண்பர்களிடம் கூறினார். அதை நிறைவேற்றாமல் சென்றது மிகப் பெரிய இழப்பு.

சமூகத்தில் பல்வேறுவிதமான கட்டமைப்புகள் நம்மை அடிமைப்படுத்துகின்றன. அவற்றில் மிகச் சிறிய கட்டமைப்பு குடும்பம். ஆனால் மிகவும் வலுவான கட்டமைப்பு. இதுதான் சரியானது, நீதியானது, நேர்மையானது, உண்மையானது, மாற்றத்தகாதது, அனைவரும் ஏற்றத்தக்கது என்ற நம்பிக்கை உலகம் முழுவதும் பரவியுள்ளது. இதை உடைக்காமல் சமூக மாற்றம் ஏற்படுவது சாத்தியமில்லை என்பது இவரது கருத்து. இதைப்பற்றி அவரோடு நான் பலமுறை விவாதித்தேன். மாற்றாக எதை முன் வைக்கிறீர்கள் என்றேன். குடும்ப அமைப்பை உடைக்கும்போது இயல்பாகவே புதிய கட்டமைப்பு மலரும். எப்படி இருக்கும் என்று இப்போது கணிக்க இயலாது என்பார்.

குடும்ப அமைப்பை உடைக்க முடியாத சூழலில் அந்த அமைப்பிலேயே அடைபட்டார். உடன் பிறந்தவர்கள், நண்பர்கள், ஒத்த கருத்துடையவர்கள் தொடர்பில்லாமல் வீட்டிலேயே ஒரு கைதிபோல முடங்கி தனது வாழ்வை முடித்துக்கொண்டார். ஒரே ஆறுதல் இக்காலத்தில் பல படைப்புகள் வெளிவந்ததே. இருப்பினும் சுதந்திரமாக வாழ்ந்திருந்தால் இன்னும் சிறப்பான, ஆழமான பல படைப்புகள் வெளிவந்திருக்கும்.


●

**கட்டுரையாளர்: எழுத்தாளர்**

கட்டுரை



# வானம்பாடிக் கவிஞர்
# சக்திக்கனல்



பேராசிரியர் **சிற்பி** பாலசுப்பிரமணியம்

எழுத்தாளர் சுஜாதா புகழின் உச்சியில் இருந்த நேரம், பத்திரிகைகள் போட்டி போட்டுக் கொண்டு அவரிடம் தொடர் கதைகளைக் கேட்டுக் கொண்டிருந்த காலம், வானம்பாடிக் கவிஞர்களிடம் அன்பு கொண்டிருந்த அவர் அந்தச் சமயத்தில் கோவைக்கு வந்திருந்தார். கவிஞர் புவியரசு, சி.ஆர். ரவீந்திரன் ஆகியோருடன் என்னையும் அழைத்துக் கொண்டு ஒரு காரில் கோவையைச் சுற்றியுள்ள கிராமங்களினூடே பயணம் செய்யப் புறப்பட்டார் சுஜாதா. தம் தொடர்கதையில் ஒரு வித்தியாசமான கிராமத்தின் பெயரைப் பயன்படுத்துவதற்கான ஒரு தேடல் பயணம். சின்னக் குயிலி என்ற ஊரின் பெயர் அவருக்குப் பிடித்துப் போனது. அந்தப் பயணத்தில் நாங்கள் செட்டிபாளையம் என்ற ஊரைக் கடந்து போனோம்.

ஊர்ப் பெயரைக் கேட்டதும், ‘அடடே, இது சக்திக்கனல் கவிதையில் வருகிற ஊரல்லவா?’ என்று வியந்து கூறினார் சுஜாதா.

**‘திருமணங்கள்**
**சொர்க்கத்தில்**
**நிச்சயிக்கப்படுகின்றனவாம்**
**அப்படியானால்**
**என் கண்ணே**
**நம் திருமணம் மட்டும் ஏன்**
**செட்டிபாளையத்தில்**
**நிச்சயிக்கப்பட்டது?’**

*என்ற நகைச்சுவைக் கவிதையைத்தான் சுஜாதா நினைவு கூர்ந்தார். இப்படி தேர்ந்த வாசகர்களையும் சுண்டி இழுக்கக் கூடிய கவிதைகளை வரைந்தவர் கவிஞர் சக்திக்கனல்.*

*வானம்பாடிகள் கோவையில் சிறகு விரிப்பதற்கு முன்பே அழகிய மரபுக் கவிதைகள் படைத்த மூத்த கவிஞராக விளங்கியவர் சக்திக்கனல். வானம்பாடி இயக்கம் அவரைப் புதுக்கவிதைகளின்பால் ஈர்த்து அணைத்துக் கொண்டது. முற்போக்குச் சிந்தனைகளை நோக்கி சக்திக்கனல் அடியெடுத்து வைப்பதற்கும் வானம்பாடியே காரணமாக அமைந்தது.*

***1931*** *ஆம் ஆண்டு ஈரோடு மாவட்டம் கல்வெட்டுப்பாளையம் என்ற சிற்றூரில் பிறந்த சக்திக்கனலின் இயற்பெயர் க.பெ.பழனிசாமி. அமெரிக்கன் கல்லூரியிலும் பின்னர் மதுரைக் கல்லூரியிலும் பயின்று வணிகவியலில் பட்டம் பெற்றார். கூட்டுறவுத் துறையில் ஒன்பதாண்டுகள் பணியாற்றிய பின் அருட்செல்வர் மகாலிங்கத்தின் சக்தி குழும நிறுவனமான ஏ.பி.டியில் முப்பத்தைந்தாண்டுகள் தணிக்கையாளராகப் பணிபுரிந்தார். மாணவப் பருவத்திலேயே ‘பாரதி தொண்டன்’, ‘இளந்தூரன்’ என்ற புனை பெயர்களில் கலைக்கதிர், தூரனின் காலச்சக்கரம் இதழ்களில் எழுதத் தொடங்கினார். இவருடைய ஆதர்ச எழுத்தாளராக விளங்கிய பெரியசாமித் தூரனே இவருக்கு ‘சக்திக்கனல்’ என்ற புனைபெயரைச் சூட்டினார் என்பது குறிப்பிடத்தக்கது.*

*மிக இளம் பருவத்திலேயே கோவைக் கவிஞர்களை ஒன்று திரட்டி (சென்ற நூற்றாண்டின் அறுபதுகளில்) தமிழ் எழுத்தாளர் மன்றம் கண்டார். மார்க்சியப் பேராசான் ஜீவா நடத்திய கலை இலக்கியப் பெருமன்ற அமைப்பு மாநாட்டில் (1961) கவியரங்கில் பங்கு கொண்டார். அந்தக் காலத்தில் தாம் கண்ட தமிழ் எழுத்தாளர் மன்றத்தின் சார்பில் 48 கவிஞர்களின் தொகுப்பாக ‘எழுக கவிஞ’ என்ற நூலை வெளியிட்டார். நண்பர்கள் சிலருடன் இணைந்து ‘பணி’ என்ற மாத இதழை நடத்துவதிலும் பங்கு கொண்டார்.*

*‘கனகாம்பரமும் டிசம்பர் பூக்களும்’, ‘ஒரு ரோடு ரோலரின் பவனி’, ‘நீங்கள் கேட்டவை’, ‘தீரன் சின்னமலை காவியம்’ உள்ளிட்ட பதினைந்துக்கும் மேற்பட்ட நூல்கள் தொடர்ந்து வெளிவந்தன. சக்திக்கனல் பதிப்பித்த ‘அண்ணன்மார் சுவாமி கதை’ பல பதிப்புகள் கண்ட நூல்.*

*தணிக்கையாளர் பதவியிலிருந்து 2001 ஆம் ஆண்டு ஓய்வு பெற்ற பின் கோவையில் சில காலமும் தம் சொந்த ஊரில் சில காலமுமாக மாறி மாறி வசித்து வந்தார். 2024 ஆம் ஆண்டில் தம் 96 ஆம் வயதில் காலமானார்.*

*கண்டிப்பும் கட்டுப்பாடும் மிகுந்த வாழ்வு என்றாலும் எளிமையும் அன்பும் மிகுந்த பண்பாளர் சக்திக்கனல். மிகச் சிறந்த படைப்பாளியாக இருந்தும் பாரத வங்கிப் பரிசு, தமிழ் நாடு அரசு தந்த தீரன் சின்னமலை காவிய விருது போன்ற மிகச் சில விருதுகளே அவருக்குக் கிடைத்தது என்பது வருந்தத்தக்க ஒரு குறை என்றே கருதலாம். பொது வாழ்விலிருந்து சலனங்களின்றி ஒதுங்கி வாழ்ந்தது ஒரு காரணமாக இருக்கலாம்.*

***வா****னம்பாடி இதழின் 22 வெளியீடுகளில் பெரும்பாலானவற்றில் சக்திக்கனலின் (17 கவிதைகள்) கவிதைகளைக் காண முடியும். பிற்காலத்தில் வசன கவிதையின் வீச்சு அவருக்குக் கைவந்த கலையாகிவிட்ட போதிலும் தொடக்கத்தில் மரபின் தடங்கள் அவரிடம் இருக்கவே செய்தன. முதல் இதழில் ‘காலக் கனவுகள்’ என்று கவிதை பற்றி ஒரு கவிதை எழுதியிருந்தார்.*

**‘காலக் கனவுகள் முடிவிலாச் சிந்தனை**
**கட்டவிழ் குதிரைகள் தொட்டதும் துடிக்கும்**
**நீலக் கடல் அலைப் புரவியின் பாய்ச்சல்கள்**
**நெட்டைக் கனவுகள் நீண்ட கோடுகள்’**

*என்று தொடங்கும் கவிதையில் மரபின் எதிரொலிகளைக் காணலாம்.*

*தொடக்கத்திலிருந்தே சக்திக்கனலின் கவிதைகளில் நகைச்சுவையின் இழைகள் படர்ந்திருந்தன, அர்த்தமுள்ள கிண்டலும் கேலியும் அவருடைய தனித்துவம் மிக்க கவிதைக் கலையின் அடையாளங்களாக இருந்தன. ‘கோழி முட்டை’ என்றொரு கவிதை:*

**‘அதிகாரி வீட்டுக்**

**கோழி முட்டை ஒன்று**

**குடியானவன் வீட்டு**

**அம்மியை உடைத்து விட்டது**

**உடைந்த அம்மியை எடுத்து**

**ஓரத்தில் போட்டுவிட்டு**

**பலத்த போலீஸ் பாதுகாப்போடு**

**கோழி முட்டையை**

**மியூசியத்துக்கு அனுப்பி வைத்தோம்.’**

*ஒரு திறனாய்வுக் கட்டுரையில் அனிதா இக்கவிதையைக் குறிப்பிட்டு, சக்திக்கனலின் ஊசி முனைத் தாக்குதல் ஆன்டன் செகாவ் அதிகாரத்தைக் கேலி செய்வது போல் அமைந்திருக்கிறது என்று கூறுவது மிகமிகப் பொருத்தமானது. ‘பச்சோந்தி’ என்ற கதையில் ஒரு நாய் ஓர் ஏழையைக் கடித்து விடுகிறது, அந்த நாய்க்குத் தண்டனை தர முன் வந்த காவல் அதிகாரி அது தளபதியின் நாய் என்று தெரிகிறபோது நாயைக் கொண்டாடுகிறார். அதே சமயம் கடிபட்ட மனிதனைப் பார்த்து எச்சரிக்கிறார். அதிகாரத்தின் பச்சோந்தித் தனத்தையே சக்திக்கனலின் கவிதையும் தோலுரித்துக் காட்டுகிறது.*

*மாபெருந் தலைவர் பாலன் விபத்தில் மறைந்த போது கோவைக் கவியுலகம் செலுத்திய அஞ்சலி மறக்க முடியாதது. சக்திக்கனல் எழுதினார்:*

**‘மார்க்சிய மெனும் நந்தவனத்தில் ஓர்**

**மலைத்தேன் கூட்டில் வழிந்த தேன் அவன்**

**கிழவனின் கைத்தடி கிழித்த கோடுகளை**

**அரண்களாய் மாற்றிய அற்புதம் அவனது**

**தரையில் உன்னை வெல்ல முடியாதென்று**

**மரணம்**

**ஆகாய விபத்தை அனுப்பி வைத்ததா?’**

*வானம்பாடி இதழில் சக்திக்கனல் எழுதிய கவிதைகளில் மிகவும் வரவேற்பும் பாராட்டும் பெற்ற கவிதை ‘ஒரு ரோடு ரோலரின் பவனி’, புரட்சியின் எழுச்சியையே ரோடு ரோலரின் பவனியாகச் சித்தரிக்கிறார் கவிஞர்.*

**‘குளிர்காலப் பணிக்குக்**

**கும்பகர்ணனாய்**

**கம்பளிக்குள் மார்கழி மாதச் சைவனாய்**

**சோம்பிக் கிடந்த அந்த ரோடுரோலர்**

**புதுக் கதிரவனின் நெருப்பு விரல்**

**தீண்டவும் விழித்துக் கொண்டது.’**

*என்று தொடங்குகிறது கவிதை. அதன் பயணத்தில் மனித மனச் சிறைகளின் சாளரம் நொறுங்குகிறது; கறுப்புப் பணக்காரி கார் இடுகுழியில் சாய்கிறது; நாற்சந்தியில் பிரமுகரின் சிலை வழி மறிக்க அதை வெந்த கிழங்காக விழும்படி செய்கிறது.*

**‘நடைபாதை எருமையெலாம்**

**வழியோரம் சாய்ந்து விழ**

**உல்லாச மண்டபங்கள்**

**உதிர்ந்து விழ**

**இருளின் தடித்த திரை**

**இடம் பெயர்ந்து வெளிச்சம் வர’**

*அழுத்த மிக்க பாதையிலே அதன் பயணம் தொடர்கிறது. சென்ற நூற்றாண்டின் எழுபதுகளில் மாற்றத்தை அவாவிய கவிதை அது.*

*மெல்லிய நகையரும்ப மக்களின் வாழ்க்கை வேடிக்கைகளைத் தன் கவிதைகளால் வெளிப்படுத்துவதில் வல்லவர் சக்திக்கனல். ஒரு சமயம் கவிஞர்களுக்கிடையே காவடிச் சிந்து மெட்டில் எழுதிப் பார்த்தால் என்ன என்று கருதி ஆளுக்கொரு கவிதை எழுதினோம். ‘குறும்பா?’ என்ற தலைப்பில் சக்திக்கனல் எழுதினார்:*

**‘தங்கக் கம்பி, பக்கத்தூட்டுத் தம்பி-அந்தத்**

**தரகுக் கடைக் காரன் பேச்சை நம்பி-அட**

**எங்க வீட்டுப் பாத்திரத்தை இருட்டினிலே திருடி விட்டு**

**எண்ணுகிறான் ஜெயிலில் இப்போ கம்பி’**

*மேடையில் படித்த கவிதை கைதட்டல்களை அறுவடை செய்யாமல் போகுமா என்ன?*

*பழைய கதைகளுக்குள் புதிய கருத்துக்களை மிக நயமாக இணைக்கிற வித்தையிலும் தனக்கு ஓர் அடையாளம் தேடிக் கொண்டவர் சக்திக்கனல். ஔவைப் பாட்டி நாவல் பழம் பொறுக்கிய கதையும் நமக்குத் தெரியும். சாதியைப் பற்றி அவர் சொல்லிய கருத்தும் நமக்குத் தெரியும். இந்த இரண்டு செய்திகளையும் இணைத்து நம் சமுதாய அவலம் ஒன்றையும் உணர வைக்கிறார் ‘பாட்டியுடன் ஒரு பேட்டி’ என்ற கவிதையில்.*

*ஔவையார் கவிஞரின் ஊர்ச் சாவடியில் நாவல் மரத்தடியில் சுட்டபழம் பொறுக்கிக் கொண்டிருந்தார். அவரிடம் கவிஞர் கேட்கிறார்.*

**‘பாட்டி, பாட்டி, சாதிகள் எத்தனை?**

**பாட்டி சொன்னாள்**

**சாதி இரண்டொழிய வேறில்லை**

**சாற்றுங்கால்**
**மீதி மிச்சம் இல்லாமல்**
**ஊர் நிலத்தைத் தான் சுருட்டிக்**
**கட்டினார் மேல் சாதி**
**பறி கொடுத்தார் கீழ் சாதி**
**பட்டாவில் உள்ளபடி - நிலப்**
**பட்டாவில் உள்ளபடி'**

சமகாலச் சமூக அழுக்குகளைக் கவிதை நீரில் அலசிப் பிழிந்து காயப் போடுகிற கவிதை சக்திக்கனல் கவிதை.

வைரக்கல், கோமேதகக்கல், புஷ்பராகக்கல் விற்பனை செய்பவரின் உண்மைத் தொழில் பதுக்கல் என்று ஒரு கவிதையில் நகை முத்திரை பதிப்பார். இப்படி சிரிக்கவும் சிந்திக்கவும் கவிதை தீட்டிய சக்திக்கனலை தமிழ்க்கவியுலகும் முற்போக்கு உலகும் மறந்துவிட முடியாது.

சக்திக்கனலில் நிகரற்ற மற்றொரு பங்களிப்பு அண்ணன்மார் சுவாமி கதைப் பதிப்பு. பொன்னர் சங்கர் கதை என்றும் கள்ளழகர் அம்மானை என்றும் குன்றுடையான் கதை என்றும் வாய்மொழிப் பாடலாக உடுக்கடித்துப் பாடப்பட்டு வந்த கதை இது. பிருண்டா இளப்பெக் என்ற கனடா நாட்டு ஆய்வாளர் காங்கயம் அருகிலுள்ள ஓலப்பாளையத்துக்கு வந்து தங்கி உடுக்கடிப் பாடலைப் பதிவு செய்தார். '*The Peasant Society in Kongu Country*', *The Three Twins – the telling of a South Indian Epic* என்று ஆங்கிலத்திலும் இந்தக் கதையை உலகறியச் செய்தார்.

பாராட்டுக்குரிய இந்தப் பணியை அவர் செய்திருந்தாலும் மொழியையும் பண்பாட்டு அசைவுகளையும் அறியாததால் சில பிழைகள் அவர் ஆய்வில் நேர்ந்துள்ளன. அறியாமை காரணமாக சக்திக்கனல் பதிப்பையும் குறை கூறியுள்ளார்.

நாட்டார் வழக்காற்றுக் காப்பியம் என்று கொண்டாடத்தக்க அண்ணன்மார் சுவாமி கதையைப் பிச்சன் என்ற ஒரு புலவர் 17 ஆம் நூற்றாண்டில் காவியமாகப் பாடியிருக்கிறார். அந்தக் காப்பியத்தை திருச்சி மாவட்டம் மணப்பாறை கடவூர் எஸ்டேட் தரகம்பட்டியில் இருந்த ராஜலிங்க பண்டிதரிடமிருந்து பெற்று 1971 இல் சக்திக்கனல் பதிப்பாசிரியராக இருந்து வெளியிட்டுள்ளார். இது தமிழ் இலக்கியத்துக்குச் செய்த மகத்தான திருப்பணி என்பதைக் குறிப்பிட்டாக வேண்டும்.

பொன்னர், சங்கர், அருக்காணி நல்ல தங்கம் என்ற மூவரும் இன்றும் கொங்கு நாட்டிலும் மணப்பாறைப் பகுதியிலும் தெய்வங்களாக வழிபடப்படுகிறார்கள். இன்றும் உடுக்கடிப் பாடல் கலைஞர்கள் கிராமப் புறங்களில் இந்தக் கதையைப் பல நாட்கள் தொடர்ந்து பாடி வருகின்றனர். குறிப்பாக 'படுகளம்' என்ற பகுதியைப் பாடும்போது மக்கள் பரவசமும் மயக்கமும் அடைவதைக் காண முடிகிறது.

இந்தக் காவியத்தில் கவிதை கொஞ்சி விளையாடுகிறது. அண்ணன்மாரைத் தேடி வரும் தங்கை குரலெழுப்பி வீரமலைக் காட்டுக்குள் வருகிற போது செழுந்தமிழால் கவிதை மயக்குகிற அழகே அழகு!

**'உத்தமியாள் குரல் கேட்டுப் பறவை இரை எடுக்காது**
**ஆடுகளும் மேயாதாம் அரவம் இரை தீண்டாதாம்**
**மாடு புல்லு மேயாதாம் மரங்கள் இலை ஆடாதாம்**
**பட்சி இரை எடுக்காது பசுங்கன்று ஊட்டாது**
**பட்டமரம் அத்தனையும் பாலாய்ப் பொழித்திடுமாம்**
**உளுத்தமரம் அத்தனையும் ஓங்கித் தழைத்திடுமாம்'**

நெஞ்சம் நெகிழப் படித்து உருகும்படியான இலக்கிய வனப்புகளின் களஞ்சியம் சக்திக்கனல் பதிப்பித்துள்ள அண்ணன்மார் சுவாமி கதை. பலப்பல பதிப்புகள் கண்ட பசுந்தமிழ்க் காப்பியம் இது.

இதனை அழியாமல் காத்துத் தந்த கவிஞர் சக்திக்கனலைக் காலம் கொண்டாடிக் கொண்டே இருக்கும்.

'பறந்து போன பாட்டுக் குயில்' என்று ஒரு கவிதையை யாருக்காகவோ எழுதியிருக்கிறார் சக்திக்கனல். நேற்றைய கவிதையைத் தம் படைப்புகளால் அணி செய்து, தமிழ் உள்ளவரை வாழும் அண்ணன்மார் சுவாமி கதையை அருமையாகப் பதிப்பித்து அருந்தொண்டு புரிந்த கவிஞரை அவருடைய வரிகளாலேயே நினைந்து உருகுவோம்.

**'பாட்டு வனத்திலே கீதம் இசைத்திட்ட**
**பச்சைக் கிளி எங்கு போயினதோ? - அது**
**பூட்டைத் திறந்தெங்கள் நாட்டைத் துறந்தொரு**
**பொன்னுலகம் தேடிப் போயினது'**

(நன்றி: நூல்கள் தந்து உதவிய கவிஞரின் திருமகன் ப.சிவக்குமார் அவர்களுக்கு)

●

**கட்டுரையாளர், படைப்புக்கும் மொழிபெயர்ப்புக்குமாக இரண்டு சாகித்ய அகாடமி விருதுபெற்ற படைப்பாளுமை.**

கட்டுரை

# வீரமாமுனிவர் ஒரு சித்த மருத்துவரா?



‘கான்ஸ்டான்சோ பெஸ்க்கி,’ எனும் வீரமாமுனிவர் இத்தாலி நாட்டுக் கிறித்தவ மத போதகர். 1710ஆம் ஆண்டு தனது 30ஆவது வயதில் தமிழகத்துக்கு வந்து 23 நூல்களைத் தமிழில் எழுதியதுடன் இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கை தொடர்பான நிகழ்ச்சிகளைத் தமிழ்ப் பண்பாட்டுக்கேற்ப ‘தேம்பாவணி’ என்ற பெரும் காப்பியத்தை எழுதி 'தமிழர் அல்லாத ஒருவர் இயற்றிய' என்ற பெருமையைப் பெற்றார். இத்துடன் தமிழ் எழுத்துச் சீர்திருத்தம், தமிழ்-லத்தீன் அகராதி, நிகண்டுக்கு மாற்றாகச் சதுரகராதி, திருக்குறள்-இலத்தீன் (அறத்துப்பால், பொருட்பால்) மொழிபெயர்ப்பு, பரமார்த்த குருவின் கதை என்ற நகைச்சுவை நூல், உரைநடை நூல்கள் தொன்னூல் விளக்கம், கொடுந்தமிழ் இலக்கணம் ஆகியவைகளை உருவாக்கியவர் என்பது தமிழ் கூறும் நல்லுலகத்திற்கு நன்கு தெரிந்தவைகள். இது தவிர வீரமாமுனிவரின் மற்றொரு சிறப்பு, சித்த மருத்துவத்தைக் கற்று நூல்களை எழுதி உள்ளார் என்பது ஆகும். ஆனால் இந்நூல்கள் இவர் எழுதியிருக்க வாய்ப்பில்லை என்று கூறுவோரும் உண்டு.



**டாக்டர் சு.நரேந்திரன்**

## வீரமாமுனிவரின் மருத்துவ நூல்கள்

நசகாண்டம், நவரத்தின சுருக்க மாலை, மகாவீரிய சிந்தாமணி, வைத்திய சிகாமணி, சுரமஞ்சரி, பூவரசங்காய் எண்ணெய் (கலிவெண்பா), மேகநாதத் தைலம் (கலிவெண்பா), பஞ்சாட்சர மூலிகை எண்ணெய் (ஆனந்தகளிப்பு), சத்துரு சங்கார எண்ணெய் (நொண்டிச்சிந்து), வீரமெழுகு, முப்பு சூத்திரம் (நொண்டிச்சிந்து), அனுபோக வைத்திய சிகாமணி, வீரிய சிந்தாமணி இரண்டாம் பாகம், குணவாகடம், நிலைக் கண்ணாடி ஆகிய நூல்கள் வீரமாமுனிவரால் எழுதப்பட்டவை.

## நூல்களின் சிறப்பு

### வயிறும் வாதமும்

**"வாதி வழுவி வைத்தியன் ஆனான்' என்பர்.**

வாத வித்தையிலும் முயன்றுள்ளார் என்பது அவர்தம் நூலால் தெரியவருகிறது. வாதம் படித்தாலின்றிப் பாசனங்களின் இயல்புகளைத் தெரிந்து கொள்ள இயலாது.

### இயங்களில் (இணைப்பு)

உடலிலுள்ள ஓர் உறுப்போ சில உறுப்புகளோ இயங்க வேண்டிய முறையில் இயங்காமல் தடைபடும் போது வாத நோய்களாக ஏற்படுகின்றன. எனவே வாய்வு வயிற்றில் தங்காமல் பாதுகாப்பது முக்கியமாகும். வயிற்றினைத் தூய்மையாக வைப்பதற்கு வீரமாமுனிவர் தரும் சிறப்பான மருந்து 'மலபந்த நிவாரணி' ஆகும் (வைத்திய சிந்தாமணி, ப,45).

### சுரம்

சுரம் என்பது தனியாக ஏற்படக்கூடிய நோயன்று. அது நோய்களின் வெளிப்பாடே ஆகும். இச்சுரம் வயிற்றில் ஏற்படும் மாற்றங்களினாலும் ஏற்படலாம். இதற்காக, சுரமஞ்சரி என்னும் நூலைப் படைத்துள்ளார். அதிலுள்ள கௌரி மாத்திரை, விஷ சுரக் குளிகை, பூபதி மாத்திரை, ஆனந்த பைரவன் போன்றவை, பல்வேறு சுரங்களுக்கும் சிறந்த பலன் தருவதாய் அமைந்துள்ளன. வீரமாமுனிவரின் தமிழ்-இலத்தீன் அகராதியில் காய்ச்சல், விடுங் காய்ச்சல் (விட்டு விட்டு வருவது), விடாக் காய்ச்சல் (தொடர்ந்து வருவது), குளிர்க்காய்ச்சல், சுரக் காய்ச்சல், உட்காய்ச்சல், பித்தக் காய்ச்சல், மந்தக் காய்ச்சல், கடுங்காய்ச்சல், தோஷக் காய்ச்சல், பெருவாரிக் காய்ச்சல், (கொள்ளை நோய்) என 15 வகையான காய்ச்சலைக் குறிப்பிட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

### ஆஸ்துமா

இந்நோய்க்கு வீரமாமுனிவர் குறிப்பிட்டுள்ள "சுவாசக் குடோரி'என்னும் மாத்திரை நல்ல பயன் தருகிறது (வைத்திய சிந்தாமணி,ப.14).

### வீரமெழுகு

பதினான்கு சீர்க் கழி நெடிலடி ஆசிரிய விருத்தத்தில் வீரமெழுகு பற்றி வீரமாமுனிவர் உரைத்துள்ளார். உடம்பின் அளவறிந்து இதனை அளவுப்படி உண்டுவரக் கைகால் குடைச்சல், சூலை, கால் பிடிப்பு, கால் முடக்கு, புண்வகைகள், சிலந்திப் புண்கள் தீரும் என்கிறார்.

வீரமாமுனிவர் நசகாண்ட வெண்பா நூறு, உரையாசிரியர் மாங்காட்டு வடிவேலர் நோய்களை நீக்கும் மருத்துவ நூல் என்று விளக்கம் வழங்கியுள்ளார். இறுதி ஆறு வெண்பாக்கள் நோய்வினை நீக்கம் பற்றிப் பேசுகின்றன. நாகச் செந்தூரம் முதல் வாத நீக்க உருண்டை வரை முப்பது மருந்து செய்முறைகள் மொழியப்பட்டுள்ளன.

### விஷசஞ்சீவி மருந்து

இம்மருந்து புகையிலை, பனைவெல்லம் ஆகியவைகளைப் புடமிட்டுச் சாம்பலாக்கிப் பயன்படுத்தப்படுகிறது. இது நாகப்பாம்பு விஷங்களையும் குறைத்து ஆளைப் பிழைக்கச் செய்யும். இது மலிவானது. எளிதாய் செய்யக்கூடியது.

### தமிழ் மருத்துவம்

மேற்கண்ட நூல்கள் அனைத்தும் தமிழ்நாட்டுச் சித்த மருத்துவ மரபினையொட்டிப் பிற நூல்களில் கூறப் பெற்றுள்ள மருந்தினையும் மருந்து செய்முறையினையும் வீரமாமுனிவர் கூறியுள்ளார். நசகாண்டம் நூலின் மூன்றாம் பாடல் காப்புச் செய்யுளில் வீரமாமுனிவர் இம்மருத்துவத்தைச் சிறப்பாகக் கூறியுள்ளார்.

**"தாதறிந்தோ னாகிற் றனைப் பயந்த தாயாக**
**மாதா வென் றெண்ணி மகிழுவார்-வேதநெறி**
**பக்திக்கு மாதிப் பரனைப் பணிவோர்க்குச்**
**சித்திக்கு மிந்நூல் திறம்"**

**(நசகாண்டம் பாடல்.3)**

மாதா மற்றும் ஆதி பரனை வேதநெறியின் அடிப்படையில் பணிவோர்க்கு இந்நூல் கைவரப்பெறும் என்று குறிப்பிடுகிறார்.

வீரமாமுனிவர்-நூலில் தன் பெயரை வெளியிடுகிறார்

**"பார்த்திடு வீரமாமுனிவன்-சொன்ன**
**பழுதில்லாத் தயிலத்தின் பாகமதனை**
**ஆர்க்கும் வீணாக விடாமல்-இங்கே**
**யமைதியுடையவர்க் காராய்ந்து உதவவே"**

இப்பாடலில் தமது பெயரை வெளியிடுகிறார் வீரமாமுனிவர். மேலும் சத்துரு சங்கார எண்ணெய் சொல்லப்படும் பாடல்கள் அன்னை மரியைப் பணிந்து என்ற வரியும் ''வீரமாமுனியென்றன் முறையிதுவே' என்று கூறும் சொற்றொடரும் கிறித்துவராகிய வீரமாமுனிவர் இந்நூற்களை இயற்றினார் என்பதற்குச் சான்றாகும்.

## வீரமாமுனிவரின் மருத்துவச் சிறப்பு

'வீரமாமுனிவர் வாகடத்திரட்டு' என்ற பெயரில் சுமார் 100 வருடங்களுக்கு முன்பு வீரமாமுனிவரின் மருத்துவ நூற்கள் பக்கீர் பா.மு.அப்துல்லா சாயபு அவர்கள் முதன்முதலாக வெளியிட்டுள்ளார். பதிப்புரையில் இந்நூலானது ராஜரிஷியும், மகா சாதுவும் ஆங்கிலம் மற்றும் தமிழ் முதலியவைகளில் மிகவும் தேர்ச்சியுற்று தமிழில் பல நூற்கள் இயற்றி கீர்த்தி பெற்றவருமாகிய வீரமாமுனிவரால் செய்யப்பட்டது என்றும், நசகாண்டம், நவரத்தினச் சுருக்கமாலை, மகாவீரியச் சிந்தாமணி என்னும் மூன்றினையும் ஒருங்கு சேரத் திரட்டிய காரணத்தால் வாகடத்திரட்டெனும் திருநாமம் பெற்று விளங்கும் பெருமை வாய்ந்தது என்றும் அப்துல்லா அவர்கள் குறிப்பிடுகிறார்.

வீரமாமுனிவர் வாகடத்திரட்டின் இரண்டாம் பதிப்பின் ஆசிரியர் இராமச்சந்திரன் அவர்கள் இந்நூலின் பெருமையைப் பின்வருமாறு குறிப்பிடுகிறார். வீரமாமுனிவர் வாகடத்திரட்டு என்னும் இந்நூல் அளவுகடந்த சிறப்பினையுடையதாகும். இதை டாக்டர் பக்கீர் பா.மு.அப்துல்லா அவர்கள் பதிப்பித்துள்ளார்கள் என்பதே தனிச்சிறப்பை விளக்கும். அப்துல்லா அவர்கள் வீரமாமுனிவரின் பாடல்களுக்கு விரிவான விளக்கம் எழுதியதோடல்லாமல் ஒவ்வொரு மருந்துக்கும் அனுபவப்பூர்வமான செய்முறை விளக்கத்தையும் எழுதியுள்ளார். அது எவ்வளவு அற்புதமாகப் பலன் அளிக்கிறது என்பதையும் மிகவும் பாராட்டி எழுதியிருக்கிறார் என்று குறிப்பிட்டுள்ளார்.

வீரமாமுனிவர் நசகாண்டம் மூலமும்-உரையும் கோவிந்தசாமி என்பவரால் 1980இல் வெளியிடப்பட்டது. இதற்கு அந்நாள் புதுவை அரசின் வருவாய்த்துறைச் செயலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் சாமி என்பவர் வழங்கிய அணிந்துரையில் புதுவையில் வீரமாமுனிவரின் வைத்திய முறைகள் வழங்கி வந்ததாக நான் கேள்விப்பட்டிருக்கிறேன். சித்த வைத்தியத்தைக் கடைப்பிடித்து வந்த கத்தோலிக்கக் கிறிஸ்தவர்கள் வீரமாமுனிவரைக் குருவாகக் கொண்டு, வைத்தியத்தைச் செய்து வந்தனர் என்று கேள்விப்பட்டிருக்கிறேன். வீரமாமுனிவரே பொதியில் புத்தோளான அகத்திய முனிவரையே தம் குருவாக முதற்பாட்டிலேயே கூறியுள்ளார் என்று குறிப்பிடுகிறார்.

வீரமாமுனிவர் வாகடத்திரட்டின் இரண்டாம் பாகத்தை வெளியிடும்போது அச்சிடுவோரின் கடவுள் வணக்கம் என்ற தலைப்பின் கீழ்

**"பூதலத்தில் வாழ்வோர் புதிய நலமெய்துதற்கு**
**மாதவத்தோராம் வீரமாமுனிவர்-ஆதரத்தால்**
**வெய்தவுயர் நன்முறைகள் சேர்ந்தபன் நூலச்சிடவே**
**துய்யவொருவன் றுணை"**

என்ற பாடல் மூலம் வீரமாமுனிவரே இந்நூலைச் செய்தார் என்று அப்துல்லா சாயபு அவர்கள் கூறுகிறார்.


இந்த மருத்துவ நூற்களைச் செய்த விதம் பற்றிக் கூறும் போது முனிவர் தாமே பின்வருமாறு கூறுகிறார்.

**"திசைமேவுந் தென்கிரியிற் சேருமுனி நூலாய்ந்து**
**நசகாண்ட மென்று நவில'**


பக்கீர் முகமது பா.மு.அப்துல்லா சாயபு வீரமாமுனிவரின் நூலை வெளியிட்டு, தக்க ஆதாரங்களை முன்வைத்தாலும் சித்த மருத்துவ நூல்களை எழுதியிருக்க வாய்ப்பில்லை என முனைவர் மறைதிரு இராசமாணிக்கம் ''வீரமாமுனிவர் தொண்டும் புலமையும்' என்ற தன் நூலில் குறிப்பிடுகிறார். அதற்கான காரணங்களை அவர் கூறுகையில் ''நூற்களின் நடையும், கருத்தும் பிற்காலத்தவையாக உள்ளது. இல்லறத்தில் ஈடுபட்ட புலவர்கள் கூடப் பயன்படுத்த விரும்பாத சில மகடூஉ முன்னிலைகள் இங்கு வருகின்றன. கருத்துக்கள் முற்றிலும் முரண்பட்டு, கருத்துக்கள் மேல்வாரியாகவும் விளம்பரமாகவும், சிற்றின்பப் போக்கிலும் அமைந்துள்ளன. மற்ற நூல்களைப் போல முனிவரும் அவர்தம் கூட்டாளிகளும் இம்மருத்துவ நூல்களில் சான்று பகரவில்லை' என்று கூறி இறுதியாக இந்நூல்களையும் முனிவர் எழுதிய பிற நூல்களையும் ஊன்றிப்படிப்போர் மேற்கூறிய கருத்துக்களைக் கண்டுணரலாம்' என்று விளக்கம் அளிக்கின்றார். ஆனாலும் இன்றைய நிலையில் மதுரையில் உள்ள ''தேம்பாவணி' என்ற மருத்துவமனையில் வீரமாமுனிவரின் சித்த மருத்துவம் கையாளப்பட்டு, பல நூறு பேர்கள் பயனடைந்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

●

**கட்டுரையாளர் எழுத்தாளர்,**
**சென்னை டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப்**
**பல்கலைக்கழக சிறப்புநிலைப் பேராசிரியர்**




# மார்க்சியத்தில் தொடங்கி பவுத்தத்தில் மங்களம் பாடிய கவிஞர்



சிகரம் ச.செந்தில்நாதன்

*என்னுடைய நீண்டகால, நெருக்கமான, தோழர் கவிஞர் தணிகைச்செல்வனின் மறைவு (30.10.24) என்னுள் பல நினைவு அலைகளை எழுப்பின. அவருடைய பயணத்தை அவருடைய படைப்புகளின் வழியே திரும்பிப் பார்க்கிறேன். 2001 ஆம் ஆண்டு அவருடைய 7 கவிதைத் தொகுப்புகள் "தணிகைச் செல்வன் கவிதைகள்" என்ற தலைப்பில் ஒரே தொகுப்பாக வெளிவந்தது. முதல் தொகுப்புக்கு அணிந்துரை எழுதிய தோழர் A. பாலசுப்பிரமணியம் "நிகழ்கால நடப்புகளே அவரது கவிதைகளின் கருப்பொருள்" என்று குறிப்பிட்டார். அது முற்றிலும் சரிதான். 1975 ஆம் ஆண்டு முதல் தொகுப்பு வெளிவந்து. 26 ஆண்டுகள் கழித்து எல்லாத் தொகுப்புகளும் இணைந்த தொகுப்பு 2001ஆம் ஆண்டு வெளிவந்தது, அதற்குள் பல மாற்றங்கள் நடந்துவிட்டன. 1985 ஆம் ஆண்டு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியிலிருந்தும், தமிழ் நாடு முற்போக்கு எழுத்தாளர்கள் சங்கத்திலிருந்தும் அவர் விலகிப்போனார். தன்னுடைய நிலை மாறிவிட்டது என்பதை 2001 ஆம் ஆண்டு தொகுப்புக்கு எழுதிய முன்னுரையில் தணிகை ஒப்புக்கொள்கிறார்.*

“என் அரசியல் கோட்பாட்டின் பழைய நிலைக்கும் புதிய நிலைக்கும் உள்ள வேறுபாடு - முரண்பாடல்ல - சில கவிதைகளில் தெரியக்கூடும். என்றாலும் என் வர்க்கக் கண்ணோட்டமும், இனப்பற்றும், மொழிக் கோட்பாடும் அன்றும் இன்றும் நாளையும் ஒன்றே தான். அடிப்படையில் ஒரு கவிஞன் என்பதை விடவும் கவிப் போராளியாகவே என்னை என் கவிதைகளில் காண முடியும்.

தன்னுடைய புதிய நிலை என்ன என்பதை அவர் குறிப்பாக விளக்கவில்லை என்றாலும் நமக்குத் தெரியும்.

“பூபாளம்” என்ற கவிதைத் தொகுதிக்கு பேராசிரியர் கா. சிவத்தம்பி ஓர் அணிந்துரை எழுதியிருக்கிறார். தமிழ்க் கவிதையின் போக்கு, வளர்ச்சி நிலைகளைக் குறிப்பிட்ட கா.சிவத்தம்பி அந்தப் பின்னணியில் தணிகையின் கவிதைகளை மதிப்பிடுக்கிறார்.

“தணிகைச் செல்வனின் இந்தக் கவிதைத் தொகுதி அந்த இணைப்புச் சேவையின் கணிசமான ஓர் எடுத்துக்காட்டாக அமைகின்றது. இதிலே மரபுக் கவிதையும் உண்டு. புதுக்கவிதைகளும் உண்டு. ஆனால் அவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு திசை நோக்கிய மூர்த்தங்களாக நில்லாமல், ஒரு பேருயிர்ப்பின் இணைந்த அம்சங்களாக பல்லியத்தின் ஒரே சுருதியாக இணைகின்ற ஒரு நிலைமையினைக் காண்கின்றோம்”.

“தணிகைச்செல்வனின் இக்கவிதைத் தொகுதி நாம் இதுவரை பார்த்த நவசங்கமமாக விளங்குகின்றது என்பதிலே கருத்து வேற்றுமை யிருக்கவே முடியாது.”

“மரபுக் கவிதையும், புதுக்கவிதையும், நாட்டார் பாடல் மரபு ஆக்கங்களும் ஒரு புறமாகவும், பாரதியின் குரலும், பாரதிதாசன் குரலும், பட்டுக்கோட்டையின் பண்பும், வானம்பாடிகளின் தொழிற் பாடும் மறுபுறமாகவும் தணிகைச்செல்வனிடத்தே ஏன் இணைகின்றன. எவ்வாறு இணைகின்றன என்பதற்கான விடை பற்றிச் சிந்திக்கும் பொழுதுதான் தணிகைச்செல்வனின் ஆளுமையும் அவரது கவிதைகளின் முக்கியத்துவமும் புலனாகின்றன”.

கா. சிவத்தம்பி தன்னுடைய அணிந்துரையை இவ்வாறு முடிக்கிறார்.

“தணிகைச்செல்வன் அவர்கள் குறிப்பிடுவது போன்று மரபு அவருக்கு எருவாகின்றது. அந்த மண் வளத்தின் அடிப்படையில் தான் அவரது முற்போக்குப் பயணம் தொடங்குகின்றது. பாரம்பரிய தமிழ்ச் செய்யுள் மரபின் சொல் அலங்காரச் சிறப்பும் ஓசையமைதியும் புதிய இலக்கிய பரிமாணங்களைக் கோடிட்டுக் காட்டுவதற்கு “ஞான ரதமே” என்ற கவிதையின் தலைப்பும், அதன் ஓசைச் செம்மையும், பொருள் தெளிவும் நல்ல உதாரணமாகும்”.

“உடனடியான விஷயங்களைப் பற்றிக் கூறும் அதே வேளையில் கவிதைக்குரிய உயர்நிலை விழுப்பத்தையும் சுட்டி நிற்பனவாகவும் அவர் கவிதைகள் அமைவதே இவரது கவிதைகளில் கவர்ச்சிக்கான காண காரணம் என்று கூறலாம்”.

இதற்கு ஒரு அடிப்படையான காரணம் உண்டு. தணிகைச் செல்வனின் கவிதையின் கருத்துக்கள் ஏட்டுச் சுரைக்காய்கள் அல்ல. அவை இயக்கத்தின் அடியாகப் பிறந்துள்ளவை. இயக்கத்தாற் புடம் போடப் பெற்றவை”.

“தணிகைச் செல்வனின் வளர்ச்சி ஊன்றிக் கவனிக்கப்பட வேண்டியது. அந்த வளர்ச்சியில் தமிழ்நாடு முற்போக்கு இலக்கிய இயக்கத்தின் கவிதை வரலாறும் தொக்கி நிற்கின்றது”.

கோஷலிச எதார்த்த வாதம் தான் தன் கவிதைகளின் கோட்பாடு என்கிறார் தணிகைச் செல்வன். அவர் அக்கோட்பாட்டின் எல்லைகளைத் தான் விரிவாக்கி அப்படியே எழுதுகிறேன் என்கிறார்.

“மகிழ்வூட்டுவதும் - அறிவூட்டுவதும் - நம்பிக்கையூட்டுவதும் - என்ற மூன்று சக்கரங்களோடு தான் சோஷலிசயதார்த்த வாதக்கோட்பாடு துவங்குகிறது. இன்றைய சகாப்தத்தில் அது மேலும் விரிந்து “எழுச்சியூட்டுவது” என்ற போர்ப்பண்பையும் தன் கலைப் பண்பாக ஏற்றுக்கொண்டு நான்கு சக்கரங்களோடு நடை பயில வேண்டும் என்பது இதற்குப் பொருளல்ல. ஆனால் என்னைப் பொறுத்தவரை எனக்கு நாலாவது சக்கரம் தேவைப்படுகிறது. அந்தப் பின்னணியில் என் கவிதைகளைப் பரிசீலிக்க வேண்டுகிறேன். அவைகளின் பலவீனம் என்று கருதப்படுவது எதுவோ, அதுதான் அவற்றின் பலமாகவும் இருப்பதைக் காண்பீர்கள்”. (முன்னுரை - சிவப்பதிகாரம்)

*கவிதை என்பது ஏதாவது ஒரு செய்தியைச் சொல்ல வேண்டும் என்பதும் அவருடைய கவிதைக் கோட்பாடு. அது பற்றிய விவாதம் பற்றி அவர் குறிப்பிடுகிறார்.*

*"இலக்கியச் சர்ச்சைகளில் ஆயிரம் தலை வாங்கிய அபூர்வ சிந்தாமணி கேள்வி ஒன்று அடிக்கடி தலை தூக்குவதுண்டு."*

*"ஒரு கவிதை ஏதோ ஒரு செய்தியைச் சொல்லித்தான் ஆக வேண்டுமா?"*

*"எந்தச் செய்தியையும் சொல்லாமல் ஒரு படைப்பு இருக்க முடியுமா?*

**முடியாது என்பதல்ல -**

**கூடாது - என்பதே என் பணிவான பதில்.**

**அசையாமல் காற்று இருக்கக் கூடாது.**

**அலையாமல் கடல் இருக்கக் கூடாது.**

**ஓடாமல் நதி இருக்கக்கூடாது.**

**பூவாமல் மலர் இருக்கக் கூடாது.**

*இவையெல்லாம் இயற்கை செயல்பாட்டுகள். கலைப் படைப்பின் இயற்கையே அதனுள் பொதிந்த செய்தி தான். செய்திதான் இலக்கியத்தின் செயல்பாடு, செய்தி இழந்த இலக்கியம் செயலிழந்து போகும்; அல்லது உயிரிழந்து போகும்". (தணிகையின் முன்னுரை - உலக்கையிலும் பூமலரும்)*

*1985 ஆம் ஆண்டுக்குப் பிறகு தணிகைச் செல்வனின் குரல் மாறுகிறது. தமிழ்த்தேசியமும், தலித்தியமும் முன்னுக்கு வருகின்றன. மார்க்சியத்திற்கு "புதிய புரிதலை" "கொடையாக" வழங்குகிறார் தணிகைச் செல்வன்.*

**"சாதியத்தைக் களையாத**

**மார்க்சியமும்**

**தேசியத்தைப் பேசாத**

**சிவப்பியமும்**

**இந்தியாவின்**

**எழுபதாண்டு அதிசயங்கள்"!**

*இன்னொரு கவிதையில் இப்படி பிரகடனம் செய்கிறார்.*

**ஒதுக்கப்பட்ட**

**இழிவினத்துக்கும்**

**ஒதுக்கப்பட்ட**

**மொழியினத்துக்கும்**

**சுரண்டப்பட்ட உழைப்பினத்துக்கும்**

**கிட்டும்**

**முப்பரிமாண**

**விடுதலை தான்**

**தமிழ்த் தலித்தின்**

**விடுதலை!**

**தமிழ்க்குலத்தின்**

**விடுதலை!**

**தமிழ்ப்பாட்டாளியின்**

**விடுதலை!**

*தணிகைச் செல்வனின் சிந்தனை மாற்றம் கவிதைகளில் தெரிவதை விடத் அவருடைய உரைநடை நூல்களில் துல்லியமாகத் தெரிகிறது. இன்னும் சொல்லப்போனால், தன்னுடைய சிந்தனை மாற்றத்திற்குப் பிறகு அவர் கவிதைகளைவிட, அதிகமாகக் கட்டுரைகளே எழுதியிருக்கிறார். கட்டுரைகளில் தான் அவர் புத்தர் கூறியதைத் தான் மார்க்ஸ் கூறியிருக்கிறார் என்றும், பவுத்தத்தை நிலை நாட்டும் தலைமை நாட்டிற்கு வேண்டும் என்றும் திருமாவளவனை மதிப்பீடு செய்ய வைக்கிறார்.*

*ஜனநாயகப் புரட்சியை முன் வைக்கும் கவிஞர் அது மும்முனைப் போராக இருக்கும் என்கிறார்.*

*"தமிழ்நாட்டில் நடைபெறவுள்ள மக்கள் ஜனநாயகப் புரட்சி ஒரு முனைப் போராகவோ இருமுனைப் போராகவோ அமையாது. அது மும்முனைப் போர்".*

*"ஆளும் வர்க்கங்களை முறியடிக்கப் பாட்டாளி வர்க்கம் நடத்தவுள்ள வர்க்கப் போர்; இந்திய தேசியத்தை வீழ்த்தக் கிளர்ந்தெழும் தமிழ்த் தேசியப் போர்";*

*"பார்ப்பனியத்தையும் அதன் வேதிய வேர்களையும் சாதிய வேர்களையும் வெட்டி எறியும் சமூக நீதிப் போர்;*

*என்ற மூன்று போர்கள் மூன்று முனைகளில் நடக்கும் என்பதால் அவை மும்முனைப் போர்". (தத்துவத் தலைமை - பக்கம் 252)..*

*தன் கட்டுரையை இவ்வாறு முடிக்கிறார்.*

*"இந்தியா என்ற பொய்யியலையும், பார்ப்பனம் என்ற மெய்யியலையும், காங்கிரஸ் என்ற கை இயலையும் தாமரையின் காவி இயலையும் சேர்த்து எதிர்க்கும் சிந்தனையில் உரமேறிய செந்தமிழ்ச் சேனையே தமிழ்த் தேச விடுதலையை வென்றெடுக்கும்".*

*"அதற்கான கருத்தியல் வல்லமையும் துருப்பியல் வல்லாண்மையும் பெற்ற தமிழ்த்தலைமையே*

தேசியப் போரை முன்னெடுக்கும். அந்தத் தலைமையைக் கண்டறிந்து நம்மிடம் கொண்டு வந்து சேர்க்கும் நாளைய வரலாறு".

தணிகை என்னதான் சொல்ல வருகிறார்? அவர் சொற்களிலேயே அவரைச் சந்திப்போம். ''பாட்டாளி வர்க்கத்தைச் சேர்ந்த தலைவர்கள் தாம் பாட்டாளி வர்க்கக் கட்சிக்கும், இயக்கங்களுக்கும் தலைமை தர வேண்டும் என்பதில் எந்தச் சமரசத்துக்கும் இடமில்லை.

''தத்துவத் தலைமை'' என்ற நூலை இவ்வாறு முடிக்கிறார் கவிஞர் தணிகைச் செல்வன்.

''சமூக விடுதலைக்கு தலித்துகள் தலைமை ஏற்பதில் ஞாயமுண்டு. ஆனால், வர்க்க விடுதலை, தேச விடுதலை ஆகியவற்றிற்குக் கூடத் தலித் தலைமை தேவையா? எனக் கேட்கப்படலாம். நமது விடை: ஆம், தேவையே! வர்க்கத்தளத்தில்.

''தலித்தல்லாதாரிடம் சமூகப் புரட்சியின் சிந்தனைகளைப் பாய்ச்சவும், தேசியத் தளத்தில் தலித்தல்லாத் தமிழரிடம் சமூக நீதியைப் பரப்பவும், அந்தத் தளங்களின் புரட்சிப் போரில் தலித் தலைமை கொள்வதன் மூலம் ஒருங்கிணைந்த சனநாயகப் புரட்சியில் உருவாக்கக்கூடிய உளவியல் தடைகளை எழாமல் தகர்த்துச் சமன் செய்யும் இயந்திரமாக தலித்தியம் செயல்படும். மேல் நோக்கில் இது தவறாகத் தோன்றலாம். ஆனால், தொலை நோக்கில் தான் இந்த ஏற்பாட்டின் அருமை புலப்படும். இதுவே முடிவன்று; ஒரு முன்மொழிவு. அவ்வளவே. முடிக்கும் முன், நூலின் தத்துவத்திரட்சியை இரண்டே வரிகளில் கொடுக்க விழைகிறேன். இந்த இரு வரியே, நூலின் முகவரி'':

**"வழிந்தது போதும் நம் ரத்தம் -**


**இனி வாளேந்த வேண்டும் பவுத்தம்".**

**"ஒடுக்கப்பட்ட மக்களுக்கு விடுக்கப்பட்ட காலத்தின் கட்டளை இது'.**

கவிஞர் தணிகைச்செல்வன் எழுச்சியூட்டும் கவிஞர் மட்டும் அல்ல; வாதம் புரிவதிலும் சட்டம் பயிலாத வழக்கறிஞர். மார்க்சியம் பேசும் போது அதன் சிறந்த வழக்கறிஞர், தலித்தியம் பேசும் போதும் அதன் சிறந்த வழக்கறிஞர். ஆனால் நீதிபதியாக இல்லையே! எல்லாம் அவர் போட்ட கோலம். ஆனால் அழியாத கோலங்கள்.

●

**கட்டுரையாளர், எழுத்தாளர், வழக்கறிஞர்**



24–12–24 அன்று திருப்பூர் டாப்லைட் நூலகத்தில் சுப்ரபாரதிமணியனின் வெப்பம் சிறார் நாவல் (என்சிபிஎச் பதிப்பகம் வெளியீடு) வெளியீட்டு விழா நடைபெற்றது. என்சிபிஎச் நிறுவனத் தலைவர் ஸ்டாலின் குணசேகரன் அவர்கள் வெளியிட கேபிகே செல்வராஜ் (தலைவர் முத்தமிழ்ச்சங்கம்), ராமகிருஷ்ணன் ( செயலாளர் திருப்பூர் கம்பன் கழகம்) ஆகியோர் பெற்றுக்கொண்டார்கள். இதில் கவிஞர் மணிநாதன், டாப்லைட் பின்னலாடை குழும அதிபர் வேலுச்சாமி, சுப்ரபாரதிமணியன் மற்றும் ராமகிருஷ்ணன் ஆகியோர் கலந்துகொண்டனர்.



# பீடு நடைபோடும் பாடநூல் கழகம்

நிறுவனங்களின் நாயகர் 'கலைஞர்' என்று கொண்டாடப்படும் மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் 1970-இல் தொடங்கப்பட்டது. 1993இல் "தமிழ்நாட்டுப் பாடநூல் கழகம்" என்று பெயர் மாற்றம் கண்டு, 06.09.2013 முதல் "தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம்" என்னும் பெயரில் சிறப்புடன் இயங்கி வருகின்றது.

"பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ்மொழியில் பெயர்த்தல் வேண்டும்" என்பதை நோக்கமாகக் கொண்டு தொடங்கப்பட்ட இக்கழகம், இன்று தன் வேர்களைப் பூமிக்கடியிலும் கிளைகளை வானவெளியிலும் பரப்பி, உலகின் அத்தனை உன்னதங்களையும் அறிவியல் தொழில்நுட்பங்களையும் கலைகளையும் இலக்கியங்களையும், தமிழ் கூறும் நல்லுலகுக்குக் கொடையாக வழங்கிவரும் சீரிய பணியைச் செம்மையாய்ச் செய்து வருகின்றது.

அரிய புத்தகங்களை மறுபதிப்புச் செய்தும் ஆவணப் பதிப்பாக வெளியிட்டும் வரும் இந்நிறுவனம், மறைந்த தமிழ்ச் சான்றோர் படைத்த அறிவுப் புதையல்களை, நாட்டுடைமையாக்கப்பட்ட நூல்களை, மதிப்புக் கூடுதல் (Value Addition) செய்து வெளியிடுகின்றது. தமிழ் இலக்கியங்களின் ஆங்கில மொழிபெயர்ப்புகள், மாணவர்கள் பயன்பெறத்தக்க போட்டித் தேர்வு வினா விடை வங்கி நூல்கள் போன்றவை ஆங்கிலப்



டாக்டர் சங்கர சரவணன்

பதிப்பகங்களோடு இணைந்து கூட்டு வெளியீடாகக் கொண்டு வரப்படுகின்றன. செல்விலக்கியங்களை இன்றைய மொழியில் உரையுடன் இக்கழகம் வெளியிட்டு சிறப்பு சேர்க்கிறது. குழந்தைகளுக்கான வண்ணமயமான நூல்களை வெளியிடுகிறது.

அகராதி, அரசியல், இலக்கியம், கல்வியியல், இயற்பியல், வேதியியல், கணிதவியல், தாவரவியல், விலங்கியல், உடற்செயலியல், உயிரியல், வேளாண்மை, மருத்துவம், பொருளாதாரம், வணிகவியல், வரலாறு, நிலவியல், மனையியல், சமூகவியல், உளவியல், தத்துவம், வானியல், சிறார் நூல்கள், தமிழ்ச் செவ்விலக்கிய உரைகள் போன்ற பல்துறை நூல்களையும் மறுபதிப்பு செய்து வருகிறது.

**அரிய உயர்கல்வி நூல்கள்**

1960களில் இறுதி ஆண்டுகள் மற்றும் 1970களின் தொடக்கத்தில் கல்லூரிகளில் தமிழ் வழிக் கல்வி தமிழ்நாடு அரசால் அறிமுகப்படுத்தப்பட்டு, பெருமளவு வளர்ச்சி கண்டது. அப்பொழுது தமிழ்வழிக் கல்விக்கு போதுமான கருவி நூல்கள் இல்லை என்ற விமர்சனங்களை எதிர்கொள்ளும் வகையில் தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் கல்லூரிப் பாடநூல்கள் மொழிபெயர்ப்பில் முழுமூச்சாக ஈடுபடுத்தப்பட்டது. அப்போதைய தமிழ்நாடு முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களே, நேரடியாக அந்த முன்னெடுப்புகளை கண்காணித்து வேகமெடுக்கச் செய்தார். அதன் காரணமாக, கல்லூரிக்கல்விக்கான 32 துறை சார்ந்த 875 அரிய உயர்கல்வி நூல்களை தமிழ் வழியில் தமிழ்நாட்டு பாடநூல் கழகம் மிக குறுகிய காலத்தில் வெளியிட்டு சாதனை படைத்தது.

1976-ஆம் ஆண்டு தமிழ்நாடு பாடநூல் கழகத்தின் 600வது நூலை வெளியிடும் விழா சிறப்பாக நடத்தப்பட்டது. அந்த விழாவில், அப்போதைய தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு.கருணாநிதி அவர்கள் கலந்துகொண்டு உரையாற்றினார். அந்த விழாவில், தமிழ்நாடு பாடநூல் கழகத்தின் மேலாண்மை இயக்குநர் தமிழ்வழிப் பாடநூல்கள் ஏராளமாக வெளியிட்டும் அவற்றை வாங்குவதற்கான ஸ்காலர்ஷிப் வழங்கியும் கல்லூரி மாணவர்கள் குறைவானத் தொகைக்கே பாடநூல் கழக நூல்களை வாங்குவதாகக் குறிப்பிட்டதோடு, அச்சமயம் ரூ.2 இலட்சம் மதிப்பிலான நூல்களே விற்பனையாகியுள்ளன என கவலையுடன் தெரிவித்தார். அதுகுறித்து தனது சிறப்புரையில், ‘‘கல்லூரி நூல்கள் அந்தந்த மாநில மொழிகளில் வெளியிடப்பட வேண்டும்‘‘ என்கிற கருத்துக்கு ஏற்ப, இந்தியாவின் வேறு மாநிலங்களை ஒப்பிடும்போது, குஜராத்து மாநிலம் 104 நூல்களை வெளியிட்டிருக்கிறது. கருநாடகம் 160 நூல்களை வெளியிட்டிருக்கிறது. மத்தியப் பிரதேசம் 77 நூல்களை வெளியிட்டிருக்கிறது. ஆந்திரம் 135 நூல்களை வெளியிட்டிருக்கிறது. மற்ற மாநிலங்கள் குறைவான நூல்களைத்தாம் வெளியிட்டிருக்கின்றன. நாம் அறுநூறு நூல்களை வெளியிட்டிருக்கிறோம். இது பெருமைப்படத்தக்க ஒன்று.

ஆனால், இதே புள்ளி விவரத்தை நாம் கொஞ்சம் நீட்டிப் பார்த்தால் ஆந்திராவிலே 135 நூல்கள் வெளியிட்டாலும் சென்ற ஆண்டு மாத்திரம் 76 இலட்சம் ரூபாய்க்கு விற்பனை ஆகியிருக்கிறது. ஆனால், அதே நேரத்தில் தமிழ்நாட்டில் இரண்டு இலட்ச ரூபாய்க்குத் தான் விற்பனையாகியிருக்கின்றது என்று இங்கு இயக்குநர் அவர்கள் குறிப்பிட்டு வருத்தப்பட்டார்கள். எனக்குள்ள ஆறுதல் அந்த அளவுக்காவது விற்றதே என்பதுதான். விற்கவில்லை என்று வருந்துகிற நேரத்தில், பலரும் வாங்கவில்லையே என்று வேதனைப்படுகிற அதே நேரத்தில், இதை வாங்கத் தேவையில்லை என்று சொல்கிற ஒரு கூட்டமும் தமிழ்நாட்டிலே இருக்கிறது; அதை யாரும் மறந்து விடக்கூடாது!’’ என்றும்,

‘மாணவர்கள் தாய்மொழி வழியில் கற்க முடியும் என்ற நம்பிக்கை பெற வேண்டும், தாய்மொழி வழிக்கல்வி சிறந்தது என்ற மானம் பெற வேண்டும் என்று குறிப்பிட்டதோடு’, அதற்கான பாடநூல் கழகத்தின் முன்னெடுப்புகளை பாராட்டிப் பேசியுள்ளார். இந்த தகவல்கள் ‘கல்வி நிலையங்களில் கலைஞர்’ என்ற நூலில் பதிவாகியுள்ளன. அன்றைய முதல்வர் கண்ட கனவு நனவாவது போல, 2021 – 2024 வரை ஆன கல்வி ஆண்டுகளில், 1970களில் வெளியிடப்பட்ட நூல்களின் மறுபதிப்புகளும் கடந்த மூன்றாண்டு காலத்தில் தமிழ்நாடு பாடநூல் கழகம் கொண்டு வந்து பள்ளிப் பாடநூல் சாராத பல்வேறு நூல்களும் ரூ.6 கோடிக்கு மேல் விற்பனையாகி சாதனை படைத்திருப்பது குறிப்பிடத்தக்கது. இது மேனாள் முதலமைச்சர் கலைஞர் அவர்களின் தொலைநோக்குப் பார்வைக்கு சான்றாய் அமைகிறது என்று ஐயமின்றிக் குறிப்பிடலாம்.

தமிழ்நாடு அரசு, தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் சார்பாக நூல்கள் வெளியிடும் திட்டத்தில், பல்வேறு அறிவிப்புகளைக் கொண்டு வந்து செயல்படுத்தி வருகிறது. இந்த அறிவிப்புகளின் கீழ் வெளியான, வெளியாகவுள்ள எண்ணிக்கையிலான நூல்கள் விவரம் அட்டவணையில் இடம்பெற்றுள்ளது.

| எண் | அறிவிப்புகள் | 2022 | 2023 | 2024 | ஆகஸ்டு 2024 | வெளியிடப்பட்ட மொத்த நூல்கள் | வெளியிடத் தயாராக உள்ள நூல்கள் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | திசைதோறும் திராவிடம் (2021 - 22) | 23 | 12 | 20 | - | 55 | 13 |
| 2 | முத்தமிழறிஞர் மொழிபெயர்ப்புத் திட்டம் (2021 - 22) | - | 45 | 62 | - | 107 | 30 |
| 3 | இளந்தளிர் இலக்கியத் திட்டம் (2021 - 22) | 23 | 36 | 76 | - | 135 | 2 |
| 4 | குழந்தைகள் கலைக்களஞ்சியம் (2022 - 23) | - | 10 | 10 | - | 20 | - |
| 5 | நூற்றாண்டு காணும் ஆளுமைகளின் படைப்புகள் (2022 - 23) | - | 1 | 3 | - | 4 | 2 |
| 6 | நாளைய தலைமுறைக்கு நாட்டுடமை நூல்கள் (2022 - 23) | 18 | 6 | 9 | - | 33 | 7 |
| 7 | நாட்டுடமை & அரிய நூல்கள் (ஆங்கில மொழிபெயர்ப்பு) (2023 - 24) | - | - | 9 | - | 9 | 1 |
| 8 | உலக இலக்கியம், உலக சிறுவர் இலக்கியம் (தமிழ்) (2023 - 24) | - | - | 14 | - | 14 | 60 |
| 9 | திராவிடக் களஞ்சியம் (தொகுப்பு) (2023 - 24) | - | - | 1 | - | 1 | 3 |
| 10 | சமூகநீதி மற்றும் இடஒதுக்கீடு நூல் திட்டம் | - | - | 1 | - | 1 | - |
| 11 | சங்க இலக்கியங்கள் | - | 10 | 3 | - | 13 | - |
| 12 | பெரியார் சிந்தனைத் திரட்டு | - | - | 10 | - | 10 | 8 |
| 13 | மனதில் உறுதி வேண்டும் | - | - | - | - | 0 | - |
| 14 | வ.உ.சி. நூல் திரட்டு- (2022 - 2023) | 2 | 2 | - | - | 4 | - |
| 15 | Child book on Vaikom Struggle | - | 1 | - | - | 1 | - |
| 16 | வைக்கம் போராட்டம் – 110 முதலமைச்சர் அறிவிப்பு | - | - | 2 | - | 2 | 1 |
| 17 | இந்தோ – ஐரோப்பா அகராதி நூல் திட்டம் | - | - | 2 | - | 2 | - |
| 18 | மிளிரும் தமிழகம் (2025) | | | | 1 | 1 | - |
| 19 | பட்டயக் கணக்காளர் தேர்வு நூல்கள் (2025) | - | - | - | - | - | 6 |
| | மொத்த நூல்களின் எண்ணிக்கை | 66 | 123 | 222 | 1 | 412 | 133 |

*தொழில்நுட்ப வளர்ச்சி அனைத்து புத்தகங்களையும் அச்சடித்து இருப்பில் வைக்காமல், தேவையான புத்தகங்களை தேவைக்கேற்ப Print on Demand (PoD) முறையில் அச்சடித்துக்கொள்ளும் வாய்ப்பை வழங்கியுள்ளதால், புத்தகங்களை பதிப்பிப்பதில் தேவையற்ற பொருட்செலவை குறைக்கவும் குறைந்த இடவசதியில் ஏராளமான தலைப்புகளிலான புத்தகங்களைக் கொண்டுவரவும் ஏதுவாகியுள்ளது.*

## திசைதோறும் திராவிடம்

தமிழ் இலக்கியம், தமிழ்நாட்டு வரலாறு மற்றும் பண்பாட்டை எடுத்துக்காட்டும் நூல்களை ஆங்கிலம் மற்றும் தென்னிந்திய மொழிகளில் மொழி பெயர்ப்பதற்குச் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டமான 'திசைதோறும் திராவிடம்' என்ற திட்டம், இக்கழகத்தால் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தில், கூட்டு வெளியீடுகளாக பென்குயின், விடாஸ்டா, ரத்னா புக்ஸ், நியோகி, ரூபா பப்ளிகேஷன்ஸ், ஆலீவ் பப்ளிகேஷன்ஸ், DC புக்ஸ், மாத்ருபூமி புக்ஸ், ஹைதராபாத் புக் ட்ரஸ்ட், யூனிவர்சிட்டி பிரஸ், ஓரியன்ட் பிளாக்ஸ்வான் ஹார்ப்பர் கொலின்ஸ் மற்றும் பெர்மனென்ட் பிளாக் உள்ளிட்ட பல்வேறு உள்நாட்டு மற்றும் பன்னாட்டுப் பதிப்பகங்களோடு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

'திசைதோறும் திராவிடம்' எனும் திட்டத்தின் கீழ் மொழிபெயர்த்து கூட்டு வெளியீடுகளாக கி.ராஜநாராயணனின் 'கரிசல் கதைகள்', தாமஸ் ஹிட்டோஷி ப்ருக்ஷிமா மொழிபெயர்த்த திருவள்ளுவரின் 'திருக்குறள்', ராஜம் கிருஷ்ணனின் 'சுழலில் மிதக்கும் தீபங்கள்' (*Lamps in the Whirlpool*), நீல பத்மநாபனின் 'தலைமுறைகள்' (*Generations*), சிலப்பதிகாரம் (பெங்குயின் ராண்டம் ஹவுஸ்), 'கதா விலாசம்' (ரௌட்லஜ் இந்தியா), 'புத்தம் வீடு' (ரூபா பப்ளிகேஷன்ஸ்), 'மீரான் சிறுகதைகள்' (ரத்னா புக்ஸ்), 'தலித் சிறுகதைகள்' (விடாஸ்டா), 'உ.வே.சா கட்டுரைகள்', அறிஞர் அண்ணா குறித்த 'மாபெரும் தமிழ்க் கனவு', கல்கியின் 'பொன்னியின் செல்வன்', சுப்பிரமணிய பாரதியாரின் 'ஞானரதம்', M.V.வெங்கட்ராமனின் 'வேள்வித் தீ', பழ.அதியமானின் 'வைக்கம் போராட்டம்', அசோகமித்ரன் எழுதிய '*A Chennai Kaleidoscope*', இந்திரா பார்த்தசாரதியின் 'ஔரங்க சீப்', புதுமைப்பித்தன் எழுதிய 'புதுமைப்பித்தன் சிறுகதைகள்' உள்ளிட்ட பல நூல்கள் கொண்டுவரப்பட்டுள்ளன.

## முத்தமிழறிஞர் மொழிபெயர்ப்புத் திட்டம்

இத்திட்டத்தின் கீழ் ஆங்கிலத்திலுள்ள மருத்துவம், பொறியியல், கலை மற்றும் அறிவியல் நூல்கள் தமிழில் மொழிபெயர்ப்பதோடு, தமிழ்நாட்டு பேராசிரியர்களைக் கொண்டு மொழியாக்க முறையில் (*Trans Creation*) புதிய நூல்களும் உருவாக்கப்படுகின்றன. 2023 ஆம் ஆண்டு நடைபெற்ற சென்னை பன்னாட்டுப் புத்தகத் திருவிழாவில் தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட புகழ்பெற்ற 5 மருத்துவ நூல்களை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அரசு மருத்துவக் கல்லூரி மாணவர்களுக்கு வழங்கினார்.

தமிழ்நாட்டு பேராசிரியர்களைக் கொண்டு பன்னாட்டு நிறுவனமான *Elsevier* நிறுவனத்துடன் *Guyton & Hall*' இன் மருத்துவ உடற்செயலியல் நூல் கொண்டுவரப்பட்டு தமிழ்நாட்டிலுள்ள அனைத்து அரசு மருத்துவ கல்லூரிகளுக்கும் அனுப்பப்பட்டுள்ளது. மேலும், பல மருத்துவ நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின் கீழ் இதுவரை 107 நூல்கள் ஏற்கெனவே வெளியிடப்பட்டுள்ளன.

## இளந்தளிர் இலக்கியத் திட்டம்

பள்ளி மாணவர்களுக்கான கதைகள் புனைவிலி நூல்கள் இத்திட்டத்தின் கீழ் வெளியிடப்படுகின்றன.

இத்திட்டத்தின்கீழ் பூமிக்குக் காய்ச்சல், விதைப்பதே முளைக்கும், எலெக்ட்ரானிக்ஸ் இன்றியே விளையாடுவோம், நோய்நாடி, ஓலைச்சுவடி, என்னைத் தொடதே, இடஒதுக்கீடு என்றால் என்ன, பலூனிக்கா, பேருதவி, சுத்தம் சுகாதாரம், ஆழிப்பேரலை, முட்டையும் புவியும், திருவிழா, நூலகம், கீரை, பழங்கள், காய்கள் உணவு அறிமுகம், நாம்வாழ உதவுபவர்கள், நேர மேலாண்மை, வரைதல் பயிற்சி, ஆற்றின் கதை, போன்ற சிறார் நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

## உலக இலக்கியம், உலகச் சிறுவர் இலக்கியம் (தமிழ்)

அறிவிப்பினைச் செயல்படுத்த ஏதுவாக தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல்



பணிகள் கழகமானது, உலக இலக்கியங்களின் எளிமைப்படுத்தப்பட்ட, குழந்தைகளுக்கான நூல் வரிசையில் மலையாள பதிப்பகமான DC Books (Mango Classics), கனடா நாட்டு நிறுவனமான Wonder House, இந்திய நிறுவனமான Xact Group of Companies போன்ற நிறுவனங்களோடு ஒப்பந்தம் செய்து, 14 நூல்கள் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் அவர்களால் 2ஆவது சென்னை பன்னாட்டுப் புத்தகக் காட்சியில் 18.01.2024 அன்று வெளியிடப்பட்டன. 2024 ஆம் ஆண்டு இத்தாலியில் நடைபெற்ற பொலோனியா புத்தகத் திருவிழாவில் 160-க்கும் மேற்பட்ட குழந்தை நூல்களின் பதிப்புரிமையை 12 நாட்டைச் சேர்ந்த பதிப்பாளர்களிடமிருந்து பாடநூல் கழகம் வாங்கி அவற்றைத் தமிழில் மொழிபெயர்த்து வெளியிடும் பணியில் ஈடுபட்டுள்ளது. இவைமட்டுமின்றி சென்னையில் பன்னாட்டுப் புத்தகத்திருவிழாவிலும் கடந்த 2 ஆண்டு தமிழ்நாடு பாடநூல் கழகம் தீவிரமாக பங்களிப்பு செய்து வருகிறது.

### பிற வெளியீடுகள் (Box News)

கலைக்களஞ்சியங்கள் 10 தொகுதிகளும், சிறார் களஞ்சியங்கள் 10 தொகுதிகளும் வெளியிடப்பட்டுள்ளன.

பள்ளி, கல்லூரி மாணவர்கள், கல்வியாளர்கள் மற்றும் பொது வாசகர்களிடையே தமிழ், கலை மற்றும் பண்பாட்டு ஆர்வத்தைத் தூண்டும் வகையில் பல்வேறு அறிஞர்களின் படைப்புகளை நாளைய தலைமுறைக்கு நாட்டுடைமை நூல்கள் எனும் திட்டத்தின் கீழ் 30க்கும் மேற்பட்ட நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார் அவர்களின் 150 ஆவது ஆண்டு கொண்டாட்டத்தை முன்னிட்டு அவர் எழுதிய நூல்களை பதிப்பித்து 4 திரட்டுகள் வெளியிடப்பட்டுள்ளது.

'நூற்றாண்டு காணும் ஆளுமைகள்' திட்டத்தின் கீழ் பேரா.க.அன்பழகன், குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா, தி. ஜானகிராமன், கி. ராஜநாராயணன் மற்றும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

நாட்டுடைமையாக்கப்பட்ட நூல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டு 9 நூல்கள் வெளியிடப்பட்டுள்ளது.

வைக்கம் போராட்டம் குறித்த நூல் 3 மொழிகளில் வெளியிடப்பட்டுள்ளது.

உயர்கல்வி பயிலும் மாணவர்களுக்கான நுழைவுத் தேர்வு நூல்கள், பட்டயக் கணக்காயர் தேர்வு நூல்கள் வெளியிடப்பட்டு வருகிறது.

இரட்டைக் காப்பியமான சிலப்பதிகாரம் மற்றும் மணிமேகலை ஆகிய இரு நூல்களை 25 மொழிகளில் வெளியிடும் பணியில் ஈடுபட்டுள்ளன.

தமிழ்நாட்டின் பண்பாடு, கட்டடக்கலை, சிற்பக்கலை, நாட்டுப்புறக் கலைகள், தனித்துவமான உணவு வகைகள், புவிசார் குறியீடுகள் போன்றவற்றை புகைப்பட மற்றும் ஓவிய நூலாக 'மிளிரும் தமிழ்நாடு' என்ற திட்டத்தின் கீழும் சென்னை டு மெட்ராஸ் என்ற புகைப்பட நூல் வெளியிடப்பட்டுள்ளன.

மேலும், சென்னைப் பன்னாட்டுப் புத்தகக் காட்சியில் தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் முக்கிய பங்கு வகிக்கிறது.

தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தால் பிற துறை அறிவிப்புகளான 'திராவிடக் களஞ்சியம்' எனும் திட்டத்தின் கீழ் தந்தை பெரியார் சிந்தனைத் திரட்டு, அறிஞர் அண்ணா சிந்தனைத் திரட்டு, திராவிட இயக்க சிறுகதைகள், திராவிட இயக்க நீதிக்கட்சி வரலாறு ஆகிய 4 திரட்டுகள் வெளியிடப்பட்டுள்ளது.

'பெரியார் சிந்தனைத் திரட்டு' எனும் திட்டத்தின் கீழ் பெரியார் சிந்தனை 5 குறு நூல்களில் முதல் தொகுதியினை 10 மொழிகளில் வெளியிடப்பட்டுள்ளது.

'தமிழ், இந்தோ- ஐரோப்பிய வேர்ச்சொல் ஒப்பீட்டு அகராதித் திட்டத்தின்' கீழ் தமிழ் இந்தோ ஐரோப்பிய வேர்ச்சொல் ஒப்பீட்டுச் சுருக்க அகராதி 2 தொகுதிகள் வெளியிடப்பட்டுள்ளது.


'பிற்படுத்தப்பட்டோர் நலத்துறைக்காக' சமூகநீதி மற்றும் இட ஒதுக்கீடு நூல் திட்டத்தின் கீழ் இடஒதுக்கீட்டுக் கொள்கை மற்றும் சமூகநீதிக் கோட்பாடு குறித்த நூல் வெளியிடப்பட்டுள்ளது.

தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்திற்காக 'கல்லூரிக் கனவு' என்ற கையேடு தயாரித்து 'நான் முதல்வன்' திட்டத்தின் கீழ் 2 இலட்சம் பிரதிகளுக்கு மேல் அச்சடித்து வழங்கப்பட்டு வருகிறது.

சமூகநீதி மற்றும் பெண்கள் உரிமைத் துறைக்காக 'மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் திட்டத்தின்' கீழ் பெண்களுக்கான தொழில் வழிகாட்டி மற்றும் நிதி விழிப்புணர்வு குறித்த கையேடு என இரண்டு நூல்கள் 'புதுமைப் பெண்' எனும் புத்தகம் 1 இலட்சம் பிரதிகளுக்கு மேல் அச்சடித்து வழங்கப்பட்டுள்ளது.

●


**கட்டுரையாளர், இயக்குநர், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம்.**




# உயர்ந்த ஓர் மரபு கீழிறங்கிய கதையா?

தமிழகத்தில் தேவதாசி மரபு என்ற இந்த நூலின் ஆசிரியர் முனைவர் கே› சதாசிவன். இவர் மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழகத்தில் வரலாற்றுத் துறை மேனாள் பேராசிரியர், புதைபொருள்ஆய்வு, சமூகவியல் ஆய்வு இவரது ஆய்வுத்துறைகள். ஆங்கிலத்தில் இவரால் எழுதப்பட்ட இந்நூலினைத தமிழில் தந்தவர் கமலாலயன் ஆவார். மொழி பெயர்ப்பு சரளமாக உள்ளது. இதன் முதல் பதிப்பு 2015 இல் வந்தது. அதன் மூன்றாம் பதிப்பு 2023 இல் வந்துள்ளது. இது அகநி வெளியீடு, கிடைக்குமிடம் 3 பாடசாலை வீதி அம்மையப்பட்டு வந்தவாசி - 604498

இந்த நூல் ஒரு புலமைசார் நூல் ஆயினும் அது கூறும் கருத்துக்களை கூடுமானவரை எளிமையாகவே இங்கு தர முயல்கிறேன். இந்நூலில் முதல் எட்டு அத்தியாயாயங்களும் தேவதாசி மரபினை அறிமுகம் செய்வதாகவும் அது சமயத்தோடு இணைந்த முறையையும் சிறப்பையும் கூறுவதாகவும் அமைகிறது அதன் பின் வரும் நான்கு அத்தியாயங்களும் அந்த மரபுபிற்காலத்தில் மறு சீரமைக்கப்பட்டமையும் அதன்பின்னால் அதுசீரழிந்த விதத்தினையும் அதற்கான காரணங்களையும் கூறுகிறது.



பேராசிரியர் சி. மௌனகுரு

*முன்னுரையிலே ஆசிரியர் தென்னிந்தியாவிலே வைஷ்ணவ சமய சைவ சமய வளர்ச்சிக்குத் தாசி ஆட்டம் தான் துணை செய்தது என்று கூறுகிறார். பரதம் பற்றியும் தாசிகள் பற்றியும் இது பற்றி நூல்கள் எழுதியவர்களைப் பற்றி அவர் குறிப்பு முக்கியமானது. தொடர்ந்து இதனை படிக்க விரும்புபவருக்கு இக்குறிப்புகள் உதவும்*

*அவர் எம் பி ஏ கிருஷ்ணன், ஆச்சார்யா, பி.ஏ சால் அப்பாதுரை, யோகேந்திரன், சந்திரசோரி ஆகியோருடன் இன்னும் பல பெயர்களை யும் உள்ளடக்கி பெரியதோர் எழுத்தாளர் பெயர்பட்டியல் ஒன்று தருகிறார் இது எங்களுக்கு ஒரு பின்னணியைத் தருகிறது. அவர்கள் ஆங்காங்கே கூறியமை இங்கு ஓரிடத்தில் கூறப்படுகிறது என்கிறார்.*

## இந்த நூல் 12 அத்தியாயங்களைக் கொண்டுள்ளது

1. *அறிமுகம்*
2. *தேவதாசி முறையின் தோற்றம்*
3. *தேவதாசி முறையின் மீது ஆகமங்கள் மற்றும் பக்தி இலக்கியத்தின் தாக்கம் (கிறிஸ்துவுக்கு பின் 600 தொடக்கம் 900 வரை)*
4. *தேவதாசிகளின் வாழ்க்கை*
5. *மேலும் அதிகச் சடங்குகளும் மேலும் அதிகத் தேவதாசிகளும் (900 முதல் 1150 வரை*
6. *கடமைகளும் பரிசுகளும்*
7. *உள்ளார்ந்த முரண்பாடு*
8. *தேவதாசி முறையின்மீது படிந்த கிரகண நிழல் (கிறிஸ்துவுக்கு பின் 1310 இல் இருந்து 1378 வரை)*
9. *மீளவும் வந்தது இந்த முறை (1355 தொடக்கம் 1565 வரை)*
10. *சீர்குலைவும் வீழ்ச்சியும் (கி.பி 1565-1800 வரை)*
11. *தமிழ்நாட்டின் நுண் கலைகளும் தேவதாசிகளும்*
12. *நிறைவாக எனும் தலைப்பில் அமைந்த நிறைவுரை*

## உள்ளடக்கம்

## இதற்கூடாக இவர் சொல்ல வருவது என்ன ?

*கி, பி 600 தொடக்கம் கிபி 1800 வரை என ஒரு காலப்பின்னணியில் வரலாற்றோட்டத்தில் இந்த தாசி மரபு எவ்வாறு வளர்ந்து வந்துள்ளது என்பதும் அவர்களின் செயற்பாடுகள் எவ்வாறு அமைந்திருந்தன அவர்களுக்கான கடமைகள் என்ன என்பனவே இதில் கூறப்படுகின்றன. இதில் ஒரு வரலாற்றுப் பார்வை தெரிய வருகிறது ஆசிரியர் வராலாற்றாசிரியரானமையினால் இது இயல்பே.*

*உலகம் பூராவும் இருந்த கடவுளுக்கு அடிமையாக்கப்பட்ட பெண்கள் பற்றி ஆரம்பத்தில் அவர் கூறுகின்றார். சீனா, எகிப்து. பபிலோன் என்று பல நாடுகளில் தாசிமுறையினை உதாரணங்கள் காட்டுகிறார்.*

*ஆளும் வர்க்கம் உருவாகி அடிமை முறை தோன்றியபின் அதாவது என்று சமூகப் பிரிவினைகள் தோன்றியதோ அன்றிலிருந்து அடிமைகள் முக்கியமாக இந்த தாசி அடிமைகள் உருவாகத் தொடங்கியதை அதிலிருந்து உய்த்து உணர்கின்றோம்.*

*இத்தகைய ஒரு முறை அதாவது கடவுளருக்குப் பெண்களை அடிமைகளாக வைத்திருக்கும் முறை எப்படி இந்தியாவில் வந்தது என்று அடுத்து விளக்குகின்றார்*

*தமிழ்நாட்டில் இம்முறை சங்க காலத்தில் இருந்து வருகிறது என்று கூறிய இவர், அக் காலத்தில் இம்முறை நிறுவனமயமாக்கப்பட்டது என்பதனை சான்றுகள் கொண்டு விளக்குகின்றார். இந்த நிறுவன மயப்படுத்தலில் சைவம் வைணவம் முக்கியமாகக் கோயில் கலாசாரம் வகித்த முக்கிய பங்கினை கூறுகின்றார்.*

## ஆகமங்கள் விதித்த விதிகள்

*தேவதாசி முறையைக் கோவிலோடு சேர்த்து இறுக்கி விடுவதில் ஆகமங்களின் தாக்கம் பக்தி இயக்கங்களின் தாக்கமும் என எழுதும் பகுதி இந்த நூலில் முக்கிய பகுதியாக எனக்குப் படுகிறது பக்தி இலக்கியங்களை விட ஆகமமே மிகப் பிரதான பங்கு வைக்கின்றது என்பதை ஆதாரபூர்வமாக நிறுவுகிறார் ஆசிரியர். சிவ வழிபாட்டில் தேவதாசிகளின் இடத்தை ஆகமம் நிர் ணயிக்கிறது ஆகமம் நமக்கு தேவ வாக்கு அல்லவா?*

## ஆலய வழிபாட்டில் நடனம் ஒரு முக்கிய அம்சம் என்று ஆகமம் விதிக்கிறது

*16 வகையான வழிபாட்டுச் சடங்குகளை ஆகமங்கள் கூறுகின்றன அதிலே தாசியின் இடம் என்ன என்பதை வரையறுக்கினறன.இதில் முக்கிய இடம் வகிக்கும் ஆகமம் காமிகாகமம். பலி பூஜைகளின் போது எல்லா திசைகளிலும் இருந்து ஆடுதல், தீப ஆராதனையின் போது ருத்ர கணிகையர் ஆடுதல், பூசை முடிய அவள் பூசகரிடம் இருந்து கும்பம் பெறுதல் மூலவரைத் தரிசித்ததும் அவளே முதலில் பாடுதல் வெவ்வேறு வகையான தீப ஆராதனைகளின் போது அவள் ஆடுதல் அவள் மிருதங்கம் வாசித்தல் என்று கோயிலுக்குள் நடைபெற வேண்டிய அவளுடைய ஆடல், ஆடல் இசை என்பன ஆகமத்தால் நிர்ணயிக் கப்படுகின்றதை விவரமாகத் தருகின்றார்*

*ஒரு வகையில் நடனம் ஆகமநிலைப்படுகிறது, அது சடங்காகிறது என நாம் இதனை விளங்கிக்கொள்ளலாம்*

பதினாறு வகையான வழிபாட்டுச் சடங்குகளை அது கூறுகிறது. சுப்ர போத ஆகமம் அவள் வீணை வாசிக்க வேண்டியதைக் கூறுகிறது வீர ஆகமம் மணம் மிகுந்த மலர்கள் கொண்டு சிவ கணிகையரைக் கோயில் அதிகாரிகள் கௌரவிக்க வேண்டும் என்று கூறுகிறது.

பரத நடனத்தில் 108 கரணங்கள் சிலாகிக்கப்படுபவை. அந்த 108 சரணங்களை கை முத்திரை கொண்டு அபிநயிக்க வேண்டுமென இந்த ஆகமங்கள் கூறுகின்றன.

இவ் வகையில் தேவரடியார் முறையைக் கோயிலுக்குள் ஒரு சடங்காக வைத்து அவர்களை அடிமையாக வைத்திருந்த விடையத்தை ஆகமங்களே இறுக்கி வைத்தன என்பது தெளிவாகிறது.

இந்த அத்தியாயத்தில் ஸ்ரீ நாராயண ஐயங்கார் எழுதிய சந்தேகம் ஒன்று எழுப்பப்படுகிறது அது ஓர் முக்கியமான சந்தேகம்.

நாயன்மார் காலத்தில் சிறு சிவன் கோவில் என்றும் பெரும் சிவன் கோவில் என்றும் இரண்டுவகை இருந்திருக்கும். சிறு சிவன் கோவில்கள் தாசிமாரை வைத்திருக்கும் பொருளியல் பலமும் பண்பாட்டுப் பலமும் இன்றி இருந்திருக்க வாய்ப்புண்டு. பெரும்பாலும் இச்சிறு கோவில்கள் கிராமியம் சார்ந்தவை, அங்கு கிராமிய மக்கள் வழிபாடே இருந்திருக்கும். அங்கு பறை ஒலியே இருந்திருக்கும் அங்கு தேவரடியார் இருந்திருப்பரோ? அதனால் கிராமப்புற கோவில்களிலே என்ன நடந்திருக்கும் என்பது அவரது கேள்வி.

சம்பந்தர் தேவாரத்தை எடுத்துக் காட்டி மங்களக்குடி என்னும் ஊரில் பறை ஒலிக்கு நடுவே தேவரடியார்கள், இந்த முறைகளைச் செய்தார்கள் என்று கூறுகிறார். ஆகமங்கள் இப்படி கூறுவதற்கு அரச ஆதரவுகள் கோவில்களுக்கும் ஆகமவாதிகளுக்கும் இருந்தன.

பல்லவர் காலத்தில் புகழ் பெற்றிருந்த காஞ்சி முத்தீஸ்வரர் ஆலயக் கோவில் பரிவாரப் பட்டியலில் 32 அடிகளில் 12 கூத்தர்மார் இருந்ததாகவும் 12 கூத்திகள் இருந்ததாகவும் பல இசைக் கலைஞர்கள் இருந்ததாகவும் கல்வெட்டு குறிப்புத் தருகின்றார்.

### தேவதாசிகளின் வாழ்க்கை பற்றிக்கூற வந்த அவர்

இந்த தேவதாசிகள் ஏழு எட்டு வயதிலேயே விக்கிரகத்துக்கு முன்னே திருமணம் செய்து வைக்கப்படுவர் என்றும் அதன் பின்னர் இவர்கள் அந்தக் கோயில் இறைவனின் மனைவியாகவே கருதப்படுபவர் என்றும் இதனால் அவர்களுக்கு ஒரு கோவில் அங்கீகாரம் கிடைப்பதையும் காட்டுகிறார். கோவில் அங்கீகாரம் சமூக அங்கீகாரத்தையும் கொண்டு வந்து விடுகிறது என்பதனை நாம் உய்த்து உணரலாம்

விக்கிரகத்திலேயே இருக்கும் தாலியை எடுத்துக் கோவில் ஆச்சாரியார் அவளுக்கு அணிவிக்க வேண்டும். இத்தோடு அவள் கோவில் அதிகாரிகளிடம் அதிகாரபூர்வமாக ஒப்படைக்கப்படுகிறாள். அப்படி ஒப்படைக்கப் பட்டவர்கள்தான் வைணவ சமயத்தில் ஆண்டாளும் சைவ சமயத்தில் சுந்தரமூர்த்தி நாயனார் திருமணம் செய்த செய்த பரவையாரும் என்ற கருத்தையும் தருகின்றார்.

### சமூகத்தின் உயர் நிலையிலிருந்தோரும் தேவரடியார் ஆயினர்

இவ்வண்ணம் திருமணம் செய்து வைக்கப்பட்ட வர்களுள் அரசர்களின் புதல்விகளும் அரச வம்சம் போல அதிகார பணபல வம்சத்திலி ருந்தும் வந்தவர்களும் கூட அடங்குகிறார்கள். குலசேகர ஆழ்வார் மகளான நீளாதேவி இப்படி திருமணஞ்செய்து வைக்கப்பட்டவர் என்கிறார். இச்சமயம் அவர்கள் தங்கள் சொத்துக் களையும் கோயிலுக்கு அளித்துக் கோயில் அடிமை ஆகி விடுவார்கள். அடிமைகள் என்பதை விட கோவிலுக்குரியோர் ஆகி விடுகிறாரக்ள். எனவே, தேவரடியார் என்பவர் சமூக மதிப்பில் குறைந்தவர்கள் அல்ல எனக் கூறவருகிறார். இத்தகைய தேவர் அடியார் சிலர் அரசனுக்குக் காமக் கிழத்தியர்களாக இருந்தனர் என்பதையும் ஆசிரியர் குறிப்பிட்டுச் செல்கின்றார். குழந்தைகள் பெற அவளுக்கு விருப்பமில்லை என்பதனையும் கூறுகின்றார்.

அவர்களை மேன்மைப்படுத்த அவர்களுக்குத் தலைக்கோல் பட்டமும் பெருநிலப்பரப்புக்களும் வழங்கப்படுவது உண்டு, அவர்களுக்கு நித்திய சுமங்கலி பட்டம் அளிக்கப்பட்டது. அப்பெண்ணை அவர்கள் சுமங்கலிகளாகக் கருதினர் என்பது இதனர்த்தம். சுமங்கலிகளுக்கு வாழ்க்கை வட்டச் சடங்குகளில் தமிழ்ப்பண்பாட்டு மரபில் உயரிய இடம் உண்டு என்பதனை நாம் அறிவோம்.

இங்கு நாம் கவனிக்க வேண்டியதொன்றுண்டு. அதாவது இந்த நாட்டியப் பெண்களின் மனோ நிலை எவ்வாறு இருந்திருக்கும்? அவர்கள் மன உணர்வுகள், பிரச்சனைகள், கோபங்கள் குமுறல்கள் எப்படி இருந்திருக்கும்? இவை எதுவும் இந்த ஆகமங்களிலோ கல்வெட்டுகளிலோ குறிப்பிடப்படவில்லை.

சதுரி மாணிக்கம் எனும் ஒரு கணிகை அல்லது தாசி வரி கொடுக்க மறுத்து சோழர் காலத்தில் கோவில் கோபுரத்திலிருந்து கீழே விழுந்து தற்கொலை செய்த செய்தி கூறும் கல் வெட்டு ஒன்று பற்றி வானமாமலை முன்னர் எழுதியமை இங்கு ஞாபகத்திற்கு வருகிறது)

கோயில் விதித்த கட்டுப்பாடுகள் சுதந்திரமின்மை என்ற எரி நெருப்புகளுக்குள்

எரிந்து கொண்டிருக்கிற அவர்கள் மனதுக்கு அலங்காரமாகப் பொருத்தப்பட்ட மேலாடைகளே சடங்கில் அவர்களுக்கு அளிக்கப்பட்ட முதலிடமும் பட்டங்களும் ஊதியமும் காணிகளும் வீடுகளும் என்பதனை ஆசிரியர் குறிப்பிடுகிறார்

இந்த பட்டங்களும் பதவிகளும் செல்வாக்கும் அவர்களைச் சாந்தப்படுத்தும் மேலாடைகள் என ஆசிரியர் கூறுவது முக்கியமானது. ஆராய்ச்சி பிரச்சனை அங்கு தான் இருக்கிறது. இதுவே ஆராயப்பட வேண்டிய முக்கியபகுதி என நான் கருதுகிறேன். ஆனால் இந்த நூலாசிரியர் ஆசிரியர் அந்த ஆராய்வுக்குள் செல்லவில்லை.

அடுத்து வரும் அத்தியாயங்களில் அவளுடைய கடமைகளும் விருதுகளும் பெரிதாக விளக்கப் படுகின்றன. அவர் சொன்ன கூற்றை அவை உறுதிப்படுத் துவனவாக உள்ளன. இவ்விடத்தில் ஆசிரியர் அந்த விருதுகளை விபரிக்கிறார். அந்த விருது பெற அவளுக்கான கோவில் கடமைகளும் உள்ளன. இங்கே அவள் சுதந்தி மற்ற கோவில் பூசை விதிகளுக்குக் கட்டுப்பட்ட ஒருத்தியாகவே காணப்படுகிறாள்.

மூன்றாம் ராஜராஜன் காலத்தில் திருவொற்றியூர் கோயில் நடந்த மாதர்களுக்கு உறவாக்கிய தலைக்கோலி எனும் பட்டமளித்ததுடன் 60 வேலி நிலமுடைய ஒரு கிராமத்தை 3 ஆம் ராஜராஜன் தானமாக கொடுத்தார் என்ற செய்தியையும் கூறுகிறார் அவர்களுக்கு காவிதி என்ற பட்டங்களும் ஊதியப் படிகளும் வீடுகளும் வரி விலக்களிப்பும் அளிக்கப்பட்டன.

இப்படி பல்லவர். சோழர், ஆட்சிக் காலத்தில் தாசிகள் உயர்நிலையில் வைத்துக் கணிக்கப்பட்டனர் என்று கூறிவந்து அவர் இந்த தேவதாசி முறையின் அடுத்த கட்டத்தைக் கூறுகிறார்.

அது விஜயநகர நாயக்க காலமாகும். இந்து மதம் மீண்டும் தன்னை நிலை நிறுத்திய காலம் அது. அக்காலத்தில் தாசி முறை மீளமைக்கப்பட்டது எனக்கூறும் அவர், அதன் பிறகு தாசிகளின் கோவில் நிலை போய் அவர்கள் தேவரடியார் நிலை நின்று கீழிறங்கி, தேவடியாள் ஆன நிலையையும் கூறுகிறார். அந்தப் புனருத்தாரணத்தையும் தேவரடியார் மரபின் வீழ்ச்சியையும் அதற்கான காரணங்களையும் அடுத்து பார்போம்

### உயர்ந்த மரபு கீழிறங்கிய கதை

12 அத்தியாயங்களைக் கொண்ட இந்த நூலின் முதல் 7 அத்தியாயங்களில் கூறப்பட்டவற்றை இது வரை சுருக்கமாகப் பார்த்தோம். இங்கு நான் சுருக்கமாகக் கூறப்போவது எட்டாம் அத்தியாயத்தில் இருந்து இறுதி அத்தியாயம் வரையும் கூறப்பட்ட விடயங்கள் ஆகும்





இந்த இரண்டாம் பகுதியில் தேவதாசி முறையின் மீள் எழுச்சியும் தேவதாசி முறையின் வீழ்ச்சியும் பற்றிக் கூறப் புறப்படுகின்றது. சோழர் ஆட்சி நலிவடைந்த பின்னர் கோயில்களில் தேவதாசிகளுக்கு இருந்த பெரும் மதிப்புகள் குறைய தொடங்கின. பல்வேறு சமூகங்களில் இருந்தும் பலர் தம்மைத் தேவரடியார்களாக தங்களைக் கோயிலுக்கு அடிமைகளாக்கிக் கொண்டதன் காரணமாக அல்லது அடிமைப் பட்டதன் காரணமாக அவர்கள் தேவரடியார்கள் என்று அன்று அழைக்கப்பட்டனர்

1310 க்கும் 1278-க்கும் இடையே கைக்கோள முதலிகள் குடும்பத்தில் இருந்தும் பலர் தேவரடியார்களாகச் சென்றனர் என்ற குறிப்பு கிடைக்கின்றது. இவ்வண்ணம் பல சமூகங்களில இருந்து சென்றவர்கள் தேவர் அடியார்கள் ஆயினர்.

அப்படியாயின் தேவர் அடியார் என்பது ஒரு சாதி அன்று. பல்வேறு சாதிகளும் இணைந்து தேவர் அடியார் என்ற ஒரு சாதியாகத் திரண்டமை தான் உண்மை என்பது நமக்குப் புரிய வருகிறது. சோழர் ஆட்சியின் பின் இஸ்லாமியருடைய செல்வாக்கு தமிழகத்தில் பரவத் தொடங்கியது. இந்துக் கோயில்களுக்கு இருந்த மவுசும் அரச ஆதரவும் குறைய தொடங்கின.

இக்காலகட்டத்தில் விஜயநகர பேரரசு உருவாகியது. அது ஓர் இந்து மதப் பேரரசு. அப்போது பழமை புதுப்பிக்கப்பட்டது. விஜயநகர பேரரசின் வருகை மீண்டும் கோயில்களை உயிர்ப்பித்தன. கோயில்களுக்குள் கலைகள் புகத் தொடங்கின.

இந்த வகையில் தேவரடியார் முறையிலே ஒரு மாற்றம் நிகழ்கின்றது என்கிறார். இப்போதுதான் தேவர் அடியார்கள் தேவதாசி என்ற பெயரைப் பெறுகின்றனர். விஜயநகர பேரரசின் வீழ்ச்சியின் பின் தேவதாசி மரபு இன்னும் கீழிறங்க தொடங்கியது. அவர்களைப் போசிப்பதற்கு கோயில்களோ பெரும் நிறுவனங்களோ இல்லாத காரணத்தினால் அவர்கள்

பல இழப்புக்களைச் சந்தித்தனர். சமூக அங்கீகாரம் இருக்கவில்லை சொத்துகள் இருக்கவில்லை.

இதானால் அவர்கள் ஏனையோரில் தங்கி இருக்க வேண்டியவர்கள் ஆனார்கள்.அவர்களிடம் இருந்த ஒரே மூலதனம் ஆடல் பாடல் அழகுதான். இந்த வகையில் கோயில் தேவர் அடியார்கள் தேவதாஸிகளாக மாறினார்க. அடியார் என்பது கௌரவமான சொல் அதில் அடிமைத்தனம் தெரியவில்லை. தாஸி எனும் சொல் வேறு அரத்தம் தருகிறது. கோவில் செல்வாக்கிழக்க. கோவில்கள் இவர்களைப் போசிக்கும் வலிமையும் குறைந்தது. தேவதாஸிகளுக்குப் பணமும் சொத்தும் செல்வாக்கும் தேவைப்பட்டன. அரசர்களின் இடத்தை இப்போது பணம் நிலமுடைய செல்வாக்குமிக்க பிரபுக்கள் எடுத்தனர்.

ஒரு நிலப்பிரபுக்குவுக்கு அடிமைகளும் தேவதாசிக்ளும் இருப்பது செல்வப்பெருக்கின் ஒரு அடையாளமாகவும் கருதப்பட்டது.இதனால் இந்தத் தாஸிகள் பரத்தமைத் தொழிலில் ஈடுபடவும் தொடங்குகிறார்கள். ஆண்களின் பாலியல் வேட்கையைத் தணிவிக்கும் ஒரு சமூகமும் உருவாகத் தொடங்கியது. ஆடலும் அதற்குப் பயன் படுகிறது

அர்ச்சகர்களின் கபடத்தனமும் அரசர்களின் காமவேட்கையும் அதிகரித்தது என்று ஆசிரியர் கூறுகிறார். 1466க்கும் 1485 க்கு இடையில் கவி காளமேகம் எனும் பெரும் கவி மோகனாங்கி என்ற திருவானைக்காவில் இருந்த தாசி மீது காதல் கொண்டிருந்தார். வைஷ்ணவரான அவர் சைவராக மாறி அவளுடன் வாழ்ந்தார். காளமேகத்துக்கு பல தேவதாசிகளின் தொடர்புகள் இருந்தன. தனலட்சுமி, திம்மி, சோமி என்ற தேவதாசிகள் தொடர்பையும் தாஸிகளின் பெயர்களையும் ஆசிரியர் குறிப்பிடுகிறார்.

இப்போது தாசிகளின் நோக்கம் சொத்து சேர்ப்பதும் பாலியல் நோக்கமும் ஆகியது. அருணகிரிநாதர் கூட ஒரு தாசியிடம் அகப்பட்டிருந்த கதையைக் கூறுகிறார். இவ்வண்ணம் கோயிலில் தங்களை அர்ப்பணித்து நாட்டியமாடி தேவர் அடியார் என்று பெயர் பெற்ற பெண்கள் இப்போது தேவதாசிகளாக மாறிப் பரத்தையர்களாகக் கீழ் இறங்கினர்

**தேவடியார்கள் தேவதாசிகள் ஆகிய கதை இது**

பதினோராம் அத்தியாயத்திலே தமிழ்நாட்டின் நுண்கலைகள் பற்றியும் தேவதாசிகள் பற்றியும் ஆசிரியர் கூறுகிறார். அக்காலத்திலே தேவதாசிகளின் ஆடல்களைக் கண்ட பின்னரே கடவுளர்கள் சென்று தமது இருப்பிடங்களில் அமர்வர் என்று ஆசிரியர் கூறுகிறார். ஆலய வழிபாட்டில் இசையும் நடனமும் பிரதான அம்சமாக இருந்தன என்கிறார்.

இந்த இரண்டையும் பயில அவர்களுக்குக் கண்டிப்பான பயிற்சியும் பயிற்சி தர ஆசிரியர்களும் தேவைப் பட்டனர். அக்காலத்தில் கோயில்கள் நடனம் பழக்கும் ஆசிரியருக்கு நட்டுவக் காணி என்ற ஊதியமும் நாட்டியம் பயிலுகின்ற மாணவர்களுக்கு பாணப்பேறு என்ற ஊதியமும் மத்தளம் வாசிப்பவருக்கும் வேறு வாக்கியங்கள் வாசிப்பவர்களுக்கும் உவச்சக் காணி என்ற ஊதியமும் கொடுக்கப்பட்டன. சிதம்பரம் ஆலயத்திலே உள்ள கற்பலகை இதனைக் கூறுகிறது என்கிறார் ஆசிரியர்.

**பன்னிரண்டாம் அத்தியாயத்தில் நிறைவுரை கூறி முடிக்கிறார்.**

உலகளாவிய முறையிலே இருந்த கோவிலுக்குத் தம்மை அடிமையாக்கும் தாசி மரபு இந்தியாவிலும் தமிழகத் திலும் இருந்ததென்றும் பல்லவர் சோழ காலங்களில் அது ஆலயத்தில் சடங்காக இறையியல் சம்பந்தப்பட்டதாக மதிப்புக்குரியதாக இருந்தது என்றும் விஜய நகர நாயக்க காலத்தில் இது இன்னொரு வகையில் மீண்டாலும் கோயிலை விட்டு வெளியேறிய தாசிகள் நிலப்பிரபுக்களை நம்பி வாழ்ந்த காலத்தில் நடனம் காம வேட்கை எழுப்பும் நடனமாக மாறி தாசி ஆட்டமாக மாறியதென்றும் கூறுகிறார்.

அவருடைய ஆராய்ச்சி நாயக்கர்காலத்துடன் முடிவடைகிறது. இவ்வகையில் இந்த ஆய்வு பல்லவ சோழ நாயக்க ஆட்சிக்காலங்களை மையம் கொண்ட ஆய்வு எனலாம்.அவருடைய கருத்துக்களை சுருக்கமாகக் கூறினால் கோயில் அமைப்போடும் கோயில் வளர்ச்சியோடும் தாசி மரபு வளர்ந்து வந்தது என்று கூறுகிறார். இன்னும் இறுக்கமாகக் கூறினால் மன்னர்களும் மதமும் கொடுத்த ஆதரவு காரணமாக இது பெரிதாக வளர்ச்சியடைந்தது. எல்லா சாதிகளிலும் இருந்து வந்து பலர் தேவர் அடியார்கள் ஆயினர். தேவரடியார் என்பது மதிப்பார்ந்த சொல்லாகவும் மதிப்புக்குரிய சேவை யாகவும் கருதப்பட்டது. பின்னாளில் இது கோயிலுக்கு வெளியே வந்த போது தாசி ஆட்டமாக மாறியது. தேவர் அடியார்கள் தேவதாசிகள் ஆயினர் என்று கூறி இந்த நூலை முடிக்கிறார்

அவர் சான்றாகத் தரும் இத் தகவல்களைக் காண அவர் ஒரு கடும் உழைப்பை மேற்கொண்டு இருக்கின்றார் எனத் தெரிகிறது. நூல் விறு விறுப்பாகச் செல்கிறது. வாசிக்கத் தூண்டுவதாக தகவல்களும் நடையும் அமைந்துள்ளன.

அவரது நூலின் சாரம் தேவர் அடியார் தேவதாசிகளாக மாறினர் என்பதே, செல்வாக்கோடு இருந்த ஒரு சமூகம் செல்வாக்கிழந்து கீழிறங்கியது என்பதே.

**ஆய்வு நூலின் சிறப்புகளில் ஒன்று**

ஒரு ஆய்வு நூலின் சிறப்பு நூலாசிரியரின் தேடலையும் உழைப்பையும் பொறுத்து அமையும்.

இந்த ஆய்வை செய்வதற்காக நூலாசிரியர் தேடிய தரவுகள் நூல்கள் என்பன அவர் உழைப்பின் மகத்துவத்தையும் நூலின் தரத்தையும் காட்டுவதாக உள்ளன. அவை யாவும் நூலில் தரப்பட்டிருக்கின்றன.

ஒவ்வொரு அத்தியாயத்தின் பின்னரும் அடிக்குறிப்புக்கள் இடப்பட்டுள்ளன. அதில் தரும் நூல்கள் முக்கியமானவை,அந்த அடிக்குறிப்புக்கள் அந்த அதிகாரத்தின் உண்மைத் தன்மையை காட்டுவனவாக உள்ளன. இதனை விட பின் இணைப்பிலே தரப்பப்பட்டுள்ள தகவல்கள் முக்கியமானவை.

**அதன் விவரம் பின் வருமாறு**

தேர்வு செய்து குறிப்புக்கு உதவிய நூல்கள் 152, கல்வெட்டியல்கள் 112 , இலக்கியங்கள் 101, ஆகம சிற்ப சாஸ்திர நூல்கள். 15 புராணங்கள் ஸ்தல புராணங்கள் 48 அயல்நாட்டு பயணிகள் குறிப்புகள் 14 கையெழுத்து பிரதிகள் 44 நேர்காணல்கள் 13, பின்னிணைப்பில் தேவதாசிகளுக்கு அளிக்கப்பட்ட கூத்திகள் ருத்ரகணி கையர், மாணிக்கத்தார் தொண்டி மகளிர், நக்கன்,பதியிலார் என 13 வகையான பட்டப்பேர்கள் தரப்பட்டுள்ளன. தஞ்சை கோயிலில் பணியாற்றிய 87 விதமான ஊழியர்களும் அவர்களுக்கு அளிக்கப்பட்ட ஊதியமும் தரப்பட்டிருக்கிறது தேவதாசிகளின் ஆடல் தோற்றத்தையும் இயல்பான தோற்றத்தையும் காட்டும் பத்து அரிய புகைப்படங்களும் 14 சிற்பங்களும் ஒரு ஓவியமும் தரப்பட்டிருக்கின்றன. இந்த ஆய்வைச் செய்ய அவர் எடுத்த முயற்சியினை அதன் மூலம் நான் அறியக் கூடியதாக இருக்கின்றது.

ஒரு ஆய்வாளன் தரவுகள் தேட இப்படித்தான் உழைக்க வேண்டும். நமது ஆய்வாளர் பலருக்கு இது ஒரு முன்னுதாரணம்.

அவர் சான்றாகத் தரும் இத் தகவல்களைக் காண அவர் ஒரு கடும் உழைப்பை மேற்கொண்டு இருக்கின்றார் எனத் தெரிகிறது. நூல் விறு விறுப்பாகச் செல்கிறது வாசிக்கத் தூண்டுவதாக தகவல்களும் நடையும் அமைந்துள்ளன. அவரது நூலின் சாரம் தேவர் அடியார் தேவதாசிகளாக மாறினர் என்பதே. செல்வாக்கோடு இருந்த ஒரு சமூகம் செல்வாக்கிழந்து கீழிறங்கியது என்பதே. இந்த நூலில் சிறப்பாக அவர் கவனிக்காத விடப்பட்ட பகுதிகளும் உள்ளன

**நூலாசிரியர் கவனத்தில் கொள்ள வேண்டியவை**

பொதுவாக தேவதாசி மரபு பற்றி ஆராய்வோர் கண்டு கொள்ளாத பகுதிகள் அவை, தேவதாசி ஒரு பெண் என்ற வகையிலும் கேவலமாகப் பார்க்கப்பட்ட ஒரு பிறவி என்ற வகையிலும் ஏனைய பெண்கள் போல இயல்பான ஒரு குடும்ப வாழ்வை வாழமுடியாது என்ற வகையிலும் அவளுக்குச் சமூக அமைப்பு ரீதியாக அவளுக்கு சமூகத்தால் வழங்கப்பட்ட ஸ்தானத்தை அவள் மனம் ஏற்க எத்தனை பாடுபட்டிருக்கும்?.

விருப்பமில்லாத ஒருவரோடு உடல் உறவு கொள்வதில் அவள் பட்ட மனச்சிக்கல்கள் எப்படி இருந்திருக்கும்?

**உடல் இயல் ரீதியாக எத்தனை வன்முறைக்கு உள்ளாக்கப்பட்டிருப்பாள் ?**

அதனை அவள் மனரீதியாக எப்படி எதிர்த்திருப்பாள்? என அந்தப் பெண்களின் சமூக நிலையினையும் உள நிலையினையும் கூறும் அந்தப் பெண்களை சக மனுசியாக பார்த்து எழுதும் மனோநிலையுடனான எழுத்துகள் இன்னும் வரவேயில்லை தேவதாசிகளின் வாழ்வையும் அவர்கள் நிலையையும் சமூகத்தில் அவர்களின் தேவையினையும் அவர்களின் சமூக அந்தஸ்தையும் அவ்வக்கால உற்பத்திமுறை உற்பத்தி உறவுகளுடனும் சமூக அமைப்பின் பின்னணியிலும் வைத்து ஆராய்தல் மேலும் புரிதலை ஏற்படுத்தும். அத்தகைய ஒரு நூல் வருவதற்கு இத்தகைய நூல்கள் அடிப்படையாக அமையும் என்பதில் சந்தேகமில்லை.

●

**கட்டுரையாளர்: ஆய்வாளர்,**
**இலங்கைத் தமிழ் எழுத்தாளர்**

**புத்தகங்கள் அச்சிட**
**அற்புதத் தீர்வு**
குறைந்த செலவு
அதிகபட்ச தரம்

அதிகபட்ச தரத்தில் மிகக்குறைந்த செலவில் புத்தகங்கள் அச்சிடுவதற்கு ப்ரிண்ட் ஆன் டிமாண்ட் (PRINT ON DEMAND) முறை ஒரு வரப்பிரசாதமாகும். ப்ரிண்ட் ஆன் டிமாண்ட் முறையில் நேர்த்தியான தாள், அச்சு மற்றும் பைண்டிங்குடன் மிகக்குறைந்த விலையில், தரமாக அச்சிட்டுத் தருவதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம்.

**REAL IMPACT SOLUTIONS, CHENNAI**
தொடர்பு கொள்ள
**98412 93503**



# பண்பாடும் நாகரிகமும், ஒரு குறிப்பு

எ.சுப்பராயலு

வரலாறு மற்றும் தொல்லியல் துறைகளில் அடிக்கடி பண்பாடு, நாகரிகம் ஆகிய இரு சொற்கள் வழங்கும். பொதுவாக இரண்டுக்கும் பொருளை வேறுபடுத்துவதில்லை. ஆழமாகப் பார்த்தால் இரண்டும் வேறு வேறு பொருள் தரும் சொற்கள். ஆனால் தொடர்புடையவை. பண்பாடு ஆங்கிலத்தில் *culture* எனப்படும். நாகரிகம் *civilization* என்ற சொல்லால் குறிக்கப்படும். பண்பாடு பொதுவாக கலாச்சாரம் என்ற வடமொழிச் சொல்லாலும் குறிக்கவும் படும். பண்பாடு ஒரு மக்கள் கூட்டத்தின் (அல்லது சமூகத்தின்) பழக்கவழக்கங்கள், பொருளியல், வாழ்க்கைமுறை, நம்பிக்கைகள் ஆகியவற்றை கூட்டாகக் குறிக்கும். ஆக, எல்லா சமூகங்களுக்கும் – அது பழங்குடிச் சமூகமானாலும் சரி, நன்கு முன்னேறிய சாதிச் சமூகமானாலும் சரி, ஏதோ ஒரு பண்பாடு இருக்கும். சமூகத்துக்குச் சமூகம் பண்பாட்டுக் கூறுகளில் சில வேறுபாடுகள் இருக்கும். இந்த வகையில் தொல்பழங்காலப் பண்பாடு, கற்காலப் பண்பாடு, இரும்புக்காலப் பண்பாடு, சங்க காலப் பண்பாடு என்று வேறுபடுத்திச் சொல்லலாம்.

பல நேரங்களில் பண்பாடு, நாகரிகம் ஆகியவற்றை இணைத்துச் சொன்னாலும் இரண்டுக்கும் தனித்தனி பொருள் உண்டு. நாகரிகம் என்பதை பண்பாட்டு முதிர்ச்சி என்று ஒருவகையில் சொல்லலாம். ஆனால் தெளிவாக, நல்ல வரன்முறையோடு குறிப்பிடவேண்டுமானால், பலதொழில் செய்யும் மக்கள் கூடி வாழும் பெரிய ஊர்கள் அல்லது நகரங்கள் ஒரு சமூகம் கொண்டிருந்தாலே, அதன் பண்பாட்டை நாகரிகம் என்று சொல்ல இயலும். அங்கு பெரிய வீடுகள், முறையாக வகுக்கப் பட்ட தெருக்கள், கழிவுநீர்த்திட்டம், காவல் ஏற்பாடு போன்ற பொது வசதிகள், சுறுசுறுப்பான வணிக நடவடிக்கைகள், முதலியவை யெல்லாம் இருக்கவேண்டும் (காட்டு: சிந்து வெளி நாகரிகம்).

இந்த வகையில் மதுரைக் காஞ்சி விவரிக்கும் மதுரை நகரம், பட்டினப்பாலை மற்றும் சிலப்பதிகாரம் விவரிக்கும் காவிரிப்பூம்பட்டினம் ஆகியவை ஓரளவு இத்தகுதி பெற்ற பழம் நகரங்களாகச் சொல்லலாம். இடைக்காலத்தில் சோழர் காலத்தில் பத்தாம் நூற்றாண்டு தொடங்கி பல நகரங்கள் உருவாயின.

ஆக, நாம் இதுவரை அகழாய்வு செய்துள்ள பெரும்பாலான ஊர்கள், நகரம் என்ற தகுதி பெற்றுள்ளதா என்று பல கோணங்களிலும் ஆராய்ந்து முடிவுக்கு வரவேண்டும். காட்டாக, கொடுமணல் அகழாய்வு பலபடப் புகழப் பட்டாலும் அது தொடர்ந்து, ஒரு முன்னூறு ஆண்டுகள், பளிங்கு போன்ற நவமணிக் கற்களைக் கொண்டு நகை மணிகள் செய்யும் ஒரு கைத்தொழில் கூடமாகவே இருந்தது என்பதைக் குறிப்பிடவேண்டும். நல்ல வீடுகள், தெருக்கள் என்று எதுவும் அங்கு வெளிப்படவில்லை.

கட்டுரை

# சிகரங்களைச் செதுக்கிய சிற்பி ஜெயகாந்தன்





பேராசிரியர் **ஜெயந்தஸ்ரீ பாலகிருஷ்ணன்**

சமூக மாற்றங்களை இலக்கியம் எதிரொலிக்கும் காரணத்தால் காப்பியத் தலைவர்களாக மன்னர்களும் படைத்தலைவர்களும் இருந்த நிலை மாறி இன்று ‘சாதாரணர்கள்’ முதன்மைக் கதைமாந்தர்களாகப் படைக்கப்படுகின்றனர், சமூகத்தின் பொருளாதார அடித்தட்டில் நிற்கும் மனிதர்கள் முதன்மைக் கதைமாந்தர்களாகப் பொறுப்பேற்கும் போது. அவர்களிடமும் காப்பிய இலக்கியப் பாட்டுடைத் தலைவர்களின் பேராளுமைப் பண்புகள் குறைவன்றி நிறைந்திருப்பதை இலக்கியம் நிரூபித்து வருகின்றது, அபாயங்களை எதிர்கொள்ளும் வீரம், உற்றார் உறவினரைக் காக்கும் பொறுப்பு, சான்றாண்மை. தாங்கு சக்தி, உலக ஞானம், அறப்பற்று போன்ற ஆளுமைப் பண்புகளை இன்றைய படைப்பாளிகள் கடைநிலை மனிதனிடமும் கண்டு அதை இலக்கியப் பதிவாக்குகிறார்கள்.

ஜெயகாந்தன் காப்பிய, மாந்தர்களையும் அவர்களது காப்பியப் பண்புகளையும் சாதாரணர்களில் அடையாளம் காட்டுகிறார், அவரது இலட்சியவாதக் கனவுகள் சாதாரணர்களால் நிறைவேறுகின்றன, சாதாரணர்களின் அசாதாரணப் பண்புகள் அவரது பாடுபொருட்களாகின்றன, தாஜ்மகாலிலும் கோயில்களிலும் வாழும் இந்தியக் கலாச்சாரமும் பண்பாடும் சேரிகளிலும் குப்பங்களிலும் கூட வாழ்கிறது என்று தனது படைப்புகளால் ஜெயகாந்தன் நிறுவுகிறார். வேசியின் கிழிந்த கோரைப் பாயின் மீதும் ஆலவாய் அம்மன் மூக்குப் பொட்டிலும் கள்ளச்சாராயம் காய்ச்சும் மறைவிடங்களிலும் அனாதைக் குழந்தைகளுக்கு அடைக்கலம் தரும் குப்பைத் தொட்டிகளிலும் மனித நேயத்தின் ஊற்றுக்கண் வற்றாமல் கசிந்தபடியே இருப்பதை தொய்வின்றி ஜெயகாந்தனின் கதைமாந்தர்கள் தொடர்ச்சியாக நிரூபித்து வருகின்றனர்.

"நான் எவ்வளவு கேவலமான விஷயங்களை மிகப் பரந்த அளவுக்குள் சித்தரிக்க முயன்றாலும் அதில் பொதிந்துள்ள சிறப்பானதும் உயர்வானதும் வாழ்க்கைக்கு அர்த்தம் கொடுப்பதுமான ஒரு மகத்தான மனிதப் பண்புக்கு வலுமிக்க அழுத்தம் கொடுத்து வாழ்க்கையின் புகழையே பாடுகிறேன்."

என்ற அவரது கூற்றை மெய்ப்பிப்பதாகவே அவரது படைப்புகள் உள்ளன, அவரது "ஆதர்சப் பேரிலக்கியம் எதிர்மறைப் பார்வை" கொண்டதாக இல்லை, மானுடம் வெல்லுமம்மா என்ற ஒற்றை படைப்பிலக்கியக் கருவை நூற்றுக்கணக்கான கோணங்களிலிருந்து ஜெயகாந்தன் பார்க்கிறார், வக்கரிப்பாகவும் கேவலமாகவும் சேறாகவும் சகதியாகவும் சாக்கடையாகவும் சமுதாயத்தின் கண்களுக்குத் தோன்றுபவையும் ஒரு சிறந்த படைப்பாளனின் கண்களுக்குப் புனிதமானவையே. லா,ச,ராமாமிருதம் தனது பாற்கடல் என்ற சிறுகதையில் சொல்வதைப் போல் மனித மனமென்னும் பாற்கடலிலிருந்தே ஆலகாலமும் அமிழ்தமும் தோன்றுகின்றன, இதை மற்றவர்களைக் காட்டிலும் நன்குணர்ந்தவன் படைப்பாளன்.

ஜெயகாந்தன் தனது கதைமாந்தர்களது பிரச்சினைகளை அவர்களோடு நின்று அவர்களது பார்வையில் பார்க்கிறார். அதனால்தான் அவரது கதைமாந்தர்கள் வாழ்விலிருந்து பிறந்து வருகின்றனர். நிணமும் ரத்தமும் தொப்புள் கொடியும் மனித கவிச்சியும் கழுவிக் களையப்படாமல் அலங்காரப் பூச்சுக்கள் எதுவுமில்லாமல். பிறந்த குழந்தையின் உயிர்த் துடிப்போடும் வாழ்வின் மீது நம்பிக்கையோடும் நிர்வாண நேர்மையோடும் உரத்த குரலில் கூவியபடி தங்களின் இருப்பை உலகிற்குத் தெரிவிக்கிறார்கள்,

ஜெயகாந்தனின் கதை மாந்தர்கள் யாரும் வீர நாயகர்கள் அல்லர். எந்த ஒரு குறிப்பிட்ட வரலாற்றுக் கால கட்டத்திலும் அவர்கள் வார்த்தெடுக்கப் படவில்லை. சோசப்புகளும், கோகிலாக்களும், ராமநாதன்களும், அம்மாசிகளும், சங்கர சர்மாக்களும், டோனிகளும். இருதயமேரிகளும், பாப்பாத்திகளும், படைக்கப்படவில்லை, சமுதாயத்தில் நம்மிடையே நம்முள் அடையாளம் காட்டப்படுகிறார்கள். இவர்களுக்குச் சாதனைகளைப் பற்றித் தெரியாது, பேரம் பேசத் தெரியாது, ஆனால் சாதிக்க முடியும், சாதனை என்ற உணர்வும் பெருமையும் இன்றி. அன்றாட வாழ்வில் அவரவர் சக்திக்கு இயன்றபடி அணுஅளவேனும் அறம்சார் வீரத்தை வெளிப்படுத்தவியலும். அக வெளிச்சத்தின் உதவியால் புற இருளைப் போக்கும் கலையைப் பயின்றவர்கள் ஜெயகாந்தனின் கதை மாந்தர்கள்.

ஜெயகாந்தனின் சமூகப் பார்வையில் தந்தையின் பரிவான கண்டிப்பும் தாயின் நிபந்தனைகளற்ற அன்பும் சகோதரியின் சகிப்புத் தன்மையும் சகோதரனின் தோள் கொடுக்கும் உடனிருப்பும் நண்பனின் உடுக்கை இழந்தவன் கை போன்ற புரிதலும் காதலின் வசீகரமும் வாழ்க்கைத் துணையின் வற்றாத பகிர்தலும் நிறைந்து நிற்கின்றன.

அவரது கதைமாந்தர்கள் பேசுவார்கள், உரக்க வாதிடுவார்கள், மகிழ்வார்கள், அழுவார்கள், பலங்களோடும் பலவீனங்களோடும் குறை நிறைகளோடும் காதலோடும் காழ்ப்போடும் வர்க்க பேதமின்றி. பால் பேதமின்றி. வயது பேதமின்றி ஆழிப்பேரலையாக வாழ்க்கையிலிருந்து தோன்றிய வண்ணம் இருப்பார்கள், மற்ற படைப்பாளர்களின் கதைமாந்தர்களிடமிருந்து இவர்கள் மாறுபட்டு நிற்கக் காரணம் ஜெயகாந்தனைப் போலவே இவர்களும் வளர்ச்சியிலும் வாழ்க்கையிலும் தேயாத நம்பிக்கை உள்ளவர்கள்,

யுக சந்தியின் காமாட்சிப் பாட்டியும் நந்தவனத்து ஆண்டியும் 'பிணக்கி'ன் தர்மாம்பாளும் குருபீடத்தின் சீடனும் கல்யாணியும் ஹென்றியும் வாழ்க்கையின் பிரச்சினைகளைத் தீர்க்க வந்தவர்கள் அல்லர், தீர்ப்புச் சொன்னவர்களும் அல்லர், ஆனால் அவர்கள் தங்களின் நிழலின் பொய்யோடும் சிறுமையோடும் சமரசம் செய்து கொள்ளாமல். வெற்றி தோல்வி என்ற விளைவுகளுக்காகக் காத்து நிற்காமல் வாழ்க்கையின் ஒளியை ஓயாமல் தேடிய போராளிகள், இதற்குக் காரணம் ஜெயகாந்தனது பார்வையில் சறுக்கல்கள் வீழ்ச்சிகளல்ல. தவறுகள் குற்றங்களல்ல,

ஜெயகாந்தனின் கதைமாந்தர்கள் யாரும் 'போலி' களும் 'மாதிரி' களுமல்ல, அவர்கள்



> “முடிவா? யாருக்கு வேண்டும்?” என்ற ஜெயகாந்தனின் கருத்தின் படி. மனித இனத்தின் கடைசி மனிதன் உயிரோடு இருக்கும் வரை வாழ்க்கை வீசும் சவால்கள் இருந்தவண்ணமே இருக்கும், ”

அசாதாரணமான தனித்தன்மையால் தங்களை அடையாளம் காட்டிக் கொள்பவர்கள், ஜெயகாந்தன் தனது கதை மாந்தர்களுக்குப் பெயர்கள் சூட்டினாலும். உளவியல் பார்வையில் அக்கதைமாந்தர்கள். ‘அவன்’ ‘அவள்’ என்ற பொதுச் சுட்டுப் பெயர்களோடு பொருந்திப் போகிறார்கள், அகப்பாடல்களில் வரும் மாந்தர்களும் இவ்வுணர்வை ஏற்படுத்துவர் என்பது நினைவு கூரத்தக்கது,

ஜெயகாந்தனின் கதைமாந்தர் மனித நேயம் மிகுந்தவர்கள், செல்வச் செழிப்பும் சமுதாய அந்தஸ்தும் எதுவுமில்லா அன்றாடம் காய்ச்சிகளிடமும் குறைவின்றி இருப்பது மனிதநேயம்தான். இம் மனித நேயமே ஆன்மீகமாக ஜெயகாந்தனால் கொண்டாடப்படுகிறது, ஓங்கூர்சாமியும் சோசப்பும் இரண்டு ஆன்மீக உச்சங்கள்.

“எதையும் வெறுக்கறவன் சாமியார் இல்லே அல்லாத்தியும் விரும்புறவன்தாய்யா சாமியாரு” என்ற ஓங்கூர்சாமியின் அன்பின் பிரகடனமும்.

“கெட்டதுன்னா என்ன ஆண்டவனே? யாரு சொன்னது? நீங்க கூடத்தான் கிறிஸ்து, உலகத்திலே இருக்கற எல்லாமே கிறிஸ்துதான்” என்ற திருட்டு முழி சோசப்பின் விவிலியப் புதலும் ஆன்மீகக் கூற்றுகள், சித்தர்களைப் போல பற்றற்ற பற்று ஒன்றினையே இந்தியச் சிந்தனை தனது வேராகக் கொண்டு வந்துள்ளது, புளியம் பழத்தைப் போல ஓட்டில் ஒட்டாமல் ஆனால் உள்ளே ஈரம் கசிந்தபடி இருக்க ஒரு பக்குவம் வேண்டும், அது இருப்பதால் தான். “உங்கள் கையில் வந்து கிடைப்பது ஒரு புத்தகமல்ல. எழுதியவனின் இதயம் என்பதை லட்சியப் படுத்தி இதய பூர்வமாய்க் களங்கமற்றுப் படியுங்கள்” என்று படைப்பாளனின் வீரத்தோடு ஜெயகாந்தனால் கேட்க முடிகிறது,

“அவருடைய கதைகளில் வரும் பாத்திரங்களெல்லாம் தெருவிலே. குடிசையிலே. பிளாட்பாரத்திலே. கூவம் நதிக்கரையிலே காணக்கூடிய மக்களின் பிரதி பிம்பங்கள் தான், அநேகமாக ‘ஒரு பிடி சோறு’ அகப்படாமல் உயிர் போகும் சமூக அநாதைகளின் வாழாத வாழ்வைத்தான் அவருடைய கற்பனை ‘ஸர்ச்லைட்’ ஒளி செய்து குறியிட்டுக் காட்டுகிறது, அவருடைய ஏழை மக்கள் ஆசாபாசங்களற்ற அப்பாவிகள் அல்ல; விருப்பும் வெறுப்பும் வேதனையும் ஆத்திரமும் வெட்கமும் தன் மதிப்புமுள்ள மக்கள் அவர்கள்... சொல்லப் போனால் அவர்கள்தான் மனிதப் பிறவிகள்... ஜெயகாந்தனின் கற்பனை துலாக்கோல் எங்கேயாவது சாயுமானால் ‘பேவ்மென்ட்’ வெயில்

பக்கம் சாயுமே ஒழியப் பக்கத்தில் உள்ள மச்சு நிழலிலே சாயாது'' (தி. ஜானகிராமன். ஒருபிடி சோறு முன்னுரை 1958)

ஜெயகாந்தனின் இறவா இலக்கியப் படைப்புகளில் சோசப்பு தனி இடம் வகிக்கிறான், தன்னைச் சுற்றி அவன் அமைத்துக் கொள்ளும் சத்தியத்தின் அரண் பாவத்தின் தீண்டலிலிருந்து அவனைப் பாதுகாக்கிறது, சார்லஸ் டிக்கன்ஸின் (Charles Dickens) ஆலிவர் ட்விஸ்ட் (Oliver Twist) என்ற நாவலின் முதன்மைக் கதைமாந்தரான சிறுவனிடமும் இது போன்ற நேர்மை காணப்படும். சத்தியத்தின் சன்னிதானமாக சோசப்பு திகழ்கிறான். ஜெயகாந்னுக்குத் தெய்வ நம்பிக்கை கிடையாது. ஆனால் மனிதனுள் உறையும் தெய்வீகத்தின் மீது குறையாத நம்பிக்கை உண்டு, அதன் அற்புத வெளிப்பாடே சோசப்பு. வேறுவழியின்றிப் பிறரது பாவங்களைச் சுமக்கவில்லை சோசப்பு. வேண்டி விரும்பியே சுமக்கிறான், அவனது மௌனம் வார்த்தைகளை விடப் பொருளும் வீரமும் கொண்டது. அதனுடைய மென்மையின் கூர்மை. மன்னிப்பையே பெரும் தண்டனையாக மாற்றி விடுகின்றது,

சோசப்பு. 'நடராஜ விலாஸ் உயர்தர காப்பி அண்டு மிலிடெரி சாப்பாடு ஹோட்டலி'ன் ஊழியன் அதன் உரிமையாளர் ரத்தினவேலு முதலியாருக்கும் மற்ற ஊழியர்களுக்கும் அவன் பெயர் 'திருட்டு முழி சோசப்பு. அப்படிப்பட்ட வினோதப் பிராணி மட்டுமன்றி அந்த ஹோட்டலின் எல்லா ஊழியர்களும் சினிமாவுக்குப் போகும் திங்கட்கிழமை இரவுகளிலும் கோணிச் சாக்கால் தரையை அழுத்தித் தேய்த்து ஹோட்டலைச் சுத்தம் செய்து கொண்டிருப்பான். இதுவரை 'அட்வான்ஸ்' கேட்காத ஒரே நபர் அவன் மட்டும் தான். சமையல்கார நாயுடு கோவிந்தசாமி அவனை ஒரு 'வினோதப் பிறவி'. 'தனி அவதாரம்' என்றும் கருதினார். சோசப்பிற்குப் பணச்செலவு பெரிதாகக் கிடையாது. அவனது மாதச்சம்பளமான பத்து ரூபாயில் ஒரு ரூபாய்க்கு மேல் அவனுக்குச் செலவு இருந்ததில்லை, அந்த ஒரு ரூபாய்க்கும் ஒரு ஏசுநாதரின் படமோ. கிருஷ்ணன் படமோ - அவன் மனதில் தோன்றும் தெய்வீக உணர்வுக்கு எது காரணமாக இருந்ததோ - அதை வாங்கி வருவான். எல்லா அறைகளிலுமுள்ள மேசைகள் மீதோ அன்றி மாடங்களிலோ அவற்றை வைப்பான்.

அன்றும் சோசப்பு மூன்று குரங்குகளின் பொம்மையை வாங்கியிருந்தான், பொம்மையின் பொருள் என்னவென்று சோசப்பு யோசிக்கக் கூட இல்லை, கோவிந்தசாமிதான் கெட்டதைப் பார்க்காதே என்றும் கெட்டதைக் கேட்காதே என்றும் கெட்டதைப் பேசாதே என்றும் அந்தக் குரங்கு பொம்மைகள் கூறுவதாக எடுத்துச் சொன்னார்.

அதைக் கேட்டபடி மௌனமாகப் படுத்திருந்த சோசப்பு ''ஆமா ஆண்டவனே. கெட்டதுன்னா என்ன?'' என்கிறான், கோவிந்தசாமி நாயுடு அதற்கு ''உலகத்துலே நல்லதுன்னும் கெட்டதுன்னும் பிரிச்சுப் பார்க்கிற சாதாரண மனுசனா இருந்தா ஒனக்குத் தெரியும். நீதான் தனி அவதாரமாச்சே நீ ரொம்ப நல்லவன். ஒனுக்குக் கெட்டதுன்னா என்னென்னே தெரியலே, ஆனா ஒனக்குத் தெரியிலேங்கறதுனாலே நல்லதுன்னும் கெட்டதுன்னும் இல்லேன்னு நெனச்சிக்காதே'' என்கிறார்.

சோசப்பின் சொந்த ஊர் வேலூர், அவன் மாமன் மகளான ஒரு காலத்தில் அவனது மனைவியுமான பார்வதி நல்ல அழகி. சோசப்பின் தந்தை ராமலிங்கப் படையாச்சி. அவனது தெருவில் ஒரு பாதிரியார் சாமி இருந்தார், ஊர் ஊராக அவர் மீட்டிங் பேசப் போகும்போதெல்லாம் உடன் சோசப்பும் உண்டு. அவரது பிரசங்கம் இன்றும் அவன் காதுகளில் ஒலிப்பதாக அவன் பரவசப்படுவான். ''கர்த்தரை விசுவாசிக்கிறவன் யாராயிருந்தாலும் கிறிஸ்துதாண்டா'' என்ற பாதியாரின் வார்த்தைகளின் முழுப் பொருளும் சோசப்பிற்குப் புரிந்ததாலோ என்னவோ. ''அப்போ நீ சுயமா கிறிஸ்தவன் இல்லியா'' என்று நாயுடு ஆச்சரியத்தோடு கேட்டதற்கு ''யாரு சொன்னது - நீங்க கூடத்தான் கிறிஸ்து, உலகத்திலே இருக்கிற எல்லாருமே கிறிஸ்துதான், அதான். பாதிரியார் சாமியே சொல்லிட்டாரே'' என்றான் சோசப்பு,

ஒரு மதியநேரம் தன் மனைவி பார்வதியும் நண்பன் மாரிமுத்துவும் குடிசைக்குள் தனிமையில் பேசிக் கொண்டிருப்பதை சோசப்பு பார்க்க நேரிடுகிறது, அவர்கள் இருவரின் இடையில் ஏற்பட்ட உறவினை அறிந்த சோசப்பு கோபப்படவோ அன்றி அவர்களிடம் குறைகாணவோ முயலவில்லை, மாறாக அவர்களுக்கு தனது முழு ஆசியையும் சம்மதத்தையும் தந்துவிட்டு மாரிமுத்துவுக்குத் தனது தோட்டக்கார வேலையையும் கொடுத்த பின் ஊரை விட்டு கிளம்பிவிட்டான்.

கோவிந்தசாமி நாயுடுக்கு அவன் கதையைக் கேட்கக் கேட்கத் திகைப்பும் பெருமையும் பொங்கியது, ''சோசப்பு. நீ மனுஷனில்லே,,,, தேவன். உன்னைப் பத்தி என்ன சொல்றதுன்னே எனக்குத் தெரியலே; நீ வெறும் கிறிஸ்தவன் மட்டுமில்லே,,, நீ கிறிஸ்து கருங்கல்லு மாதிரி இருக்கும் இந்த உன் உடம்புக்குள்ளே. பூ மாதிரி புனிதமான இருதயம் இருக்கு... எனக்கு என்ன

சொல்றதுன்னே தெரியலே... எனக்கு ஆன வயசுல பாதிதான் இருக்கும் உனக்கு, ஆனா உன் கால்லே விழுந்து கும்பிடணும் போல இருக்கு...'' என்று அவன் கைகளைப் பற்றிக் கொண்டு திணறித் திணறிப் பேசினார் நாயுடு, 19 அன்று இரவு அறை வாடகைக்கு வேண்டும் என்று கேட்டு வந்த சேட்டு மிகுந்த குடிபோதையில் மூவாயிரம் ரூபாய் திணித்து அடைக்கப்பட்டிருந்த தனது மணிபர்ஸை முதலியார் பாதுகாப்பில் தந்து விட்டுப் பொழுது விடிந்தவுடன் முதல் நாள் இரவு நடந்ததை முற்றிலுமாக மறந்து விட்டிருந்தான். இந்த சம்பவத்திற்கு ஒரே சாட்சி சோசப்பு தான், சேட்டு உறங்கிக் கொண்டிருந்த நேரம் அவனது அறைக்குச் சென்றவன் சோசப்பு மட்டுமே. காபியைக் கொண்டு போய் வைத்து விட்டு. கூடவே அந்த மூன்று குரங்கு பொம்மைகளையும் அந்த அறை மேசையின் மீது வைத்து விட்டு வந்திருந்தான் சோசப்பு. விடிந்தவுடன் கூப்பாடு போட்டு ஊரைக் கூட்டினான் சேட்டு. மாடியிலிருந்த மற்ற அறைகளில் ஒன்றில் ஒரு சூதாடியும் அவனது நண்பனும் தங்கியிருந்தார்கள். இன்னொன்றில் ஒரு பெண் தங்கியிருந்தாள். சோசப்பின் சக ஊழியர்கள் அனைவரும் வந்து கூடிவிட்டனர். நாயுடு தனது சொந்த கிராமத்திற்கு சென்றிருந்ததனால் சோசப்பிற்குச் சாதகமாகப் பேச ஒருவருமில்லை.

முதலியார் சேட்டிடம் 'நன்றாகத் தேடிப் பார்க்கச்' சொன்ன போது சோசப்பிற்கு நிலைமை முழுவதுமாகப் புரிந்து போனது. அவன் காதுகளில் முதல் நாள் இரவு நாயுடு சொன்ன 'கெட்டதைப் பார்க்காதே. கெட்டதைப் பேசாதே. கெட்டதைக் கேட்காதே' என்ற சொற்கள் முழங்கிய வண்ணமிருந்தன. சேட்ஜி முதல் எல்லோரும் தங்கள் பாணியில் அவனை விசாரித்தனர். ''நான் எடுக்கல்லே. ஆண்டவனே'' என்ற பதிலைத் தவிர வேறு எதையும் சோசப்பு சொல்லவில்லை, முதலியாரையும் அவனைத் தனியே விசாரிக்கும்படிச் செய்தார்கள். முதலியாரும் அவர்களின் திருப்திக்காக அவனை அழைத்துக் கொண்டு தன் தனியறைக்குள் நுழைந்தார். அடிபட்டு வீங்கிய அவன் முகத்தைப் பார்த்த போது உண்மையிலே கனத்து போன அவர் இருதயம் வலித்தது, இருவரும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டு சில வினாடிகள் மௌனத்தில் ஆழ்ந்திருந்தனர், அவனது பெரிய விழிகள் அகல விரிந்தன. கருவிழிகள் திருதிருவென ஆடி அவர் முகத்தில் மொய்த்தன. 'உனக்குத் தெரிஞ்சிருந்தா என்னைக் காட்டிக் கொடுத்து விடாதே' என்பது போல் அவர் பார்வை அவனைக் கெஞ்சிற்று. பிறகு தன்னைச் சமாளித்துக் கொண்டு எல்லோரும் அவனைக் கேட்ட அதே கேள்வியைத் திக்கித் திணறியவாறு கேட்டார்:




''பர்ஸ் எங்கேடா ?''

அவனோ எல்லோரிடமும் சொன்ன அந்த பதிலைச் சொல்லாமல் அவர் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தான். அவன் பார்வையில் இருந்த பொருள் அவருக்குப் புரிந்தது. அந்தக் கண்களை ஏறிட்டு நோக்க முடியமால் அவர் விழிகள் கூசின.

கிராமத்துக்குப் போயிருந்த நாயுடு திரும்பி வந்தார், யாரோ ஒருவன் சோசப்பின் மீது சுமத்திய பழியைவிட அவனோடு பழகிய ஹோட்டல் ஊழியர்களும் முதலாளியும் அவன் குற்றம் சாட்டப்பட்டுத் துன்புறுவதைப் பார்த்து நின்ற செயல் அவருக்கு வேதனையளித்தது. அவர்களைப் பார்த்துக் காரி உமிழ்ந்தார்.

''திருடனை அடிக்கலாம்டா. தெய்வத்தை அடிக்கலாமா?'' என்று உறுமினார். ''முதலாளி நீங்க போயி எல்லா ரூமையும் இழுத்துப் பூட்டிக்கிட்டு வாங்க, போலீஸ் வந்ததும் அவுங்க கையிலே சாவியைக் குடுத்துச் சோதனை போடச் சொல்லுவோம் போங்க'' என்றார் நாயுடு.

இந்தத் தருணத்தையும் விட்டுவிட்டால் கண்டிப்பாக மாட்டிக் கொள்வோம் என்று முதலியார் சேட்டின் அறையைப் பூட்டச் சென்றபோது தனது மடியிலிருந்த பர்ஸை மேசை மீதிருந்த குரங்கு பொம்மைக்குப் பின்னால் வைத்துவிட்டு நிம்மதியுடன் வெளியே வந்தார். சேட் தனது பர்ஸ் சுவருக்கு மேசைக்குமுள்ள இடைவெளியில் கண்டான், 'ஐயோ பர்ஸ்' என்று

பாய்ந்தான், தான் குடிபோதையில் பொம்மைக்குப் பின்னால் பர்ஸை வைத்திருக்கக் கூடும் என்றும் நினைத்தான். சோசப்பைக் குற்றவாளியாக்கியது அவனை நாணச் செய்தது,

சோசப்பு நாயுடு அழைத்து வர மாடிக்கு வந்தான். கும்பல் விலகி அவனுக்கு வழிவிட்டது, ஆனால். 'முதலியாருக்கோ அவனைக் கையெடுத்துக் கும்பிட வேண்டும் போல தோன்றியது. அவரது கைகள் நடுங்கின அவனைப் பார்க்கும் போது தொண்டை வறண்டது. தன் நெஞ்சைப் பிளத்து ஹிருதய கமலத்தையே அவன் பாதத்தில் சமர்ப்பிக்க வேண்டும் போல் மனம் துடித்தது. அவரது கௌரவம் தடுத்தாலும். கௌரவம் அந்தஸ்து என்ற பொய்யணிகளெல்லாம் கழன்று போய் அவரது ஆத்மா நிர்வாணமாக அவன் பாதத்தில் விழுந்து நமஸ்கரித்தது, அவன் எளிமையான சத்தியத்தின் ரூபமாய் வந்தான்,

சோசப்பு தன்னைச் சுற்றி நின்ற ஒவ்வொரு முகத்தையும் தனது பெரிய விழிகளை உயர்த்திக் கருப்பு விழிகள் நடுங்கப் பார்த்தான், அடிபட்டு வீங்கிப் போன அவனது உதடுகளும் நாசியும் துடிக்க விழிகளில் 'கண்ணீர் சுரந்து தளும்பித் தத்தளித்தது',திடீரென்று அவன் திரும்பி நின்று. சுவரில் முகத்தைப் புதைத்துக் கொண்டு 'ஓ' வென்று பெருங்குரலில் கதறி அழ ஆரம்பித்தான், அந்த அழுகைக் குரல் அனைவரின் வயிற்றையும் கலக்கிற்று… அவன் குமுறிக் குமுறி அழுதான். அங்கிருந்த அனைவருக்கும் ஒன்று தெரியும்; அவன் தனக்காகவோ தான் பட்ட வேதனைகளுக்காவோ அழவில்லை என்று. பின் யாருக்காக அழுதான்? "ஆண்டவனே… என்னை மன்னிச்சிடு" என்று சோசப்பைப் பார்த்துத் தன்னுள் முனகிக் கொண்டார் முதலியார்.

நாயுடு சோசப்பைப் பற்றி எண்ணி வியக்கும் போது. "அந்த மாரிமுத்து இவனைப் பைத்தியம்னு நெனச்சி ஏமாத்திட்டோம்னு சந்தோஷப்படுவான். அதுக்கென்னா? இந்த ஓட்டல்லே கூட இவனை எல்லோரும் அசட்டுப் பயன்னுதானே நெனச்சிட்டு இருக்காங்க. அது ஒரு வகையிலே உண்மைதான். அசடுகளும் கடவுளின் பக்கத்திலே நிக்கிற அளவுக்கு மகானைப் போல உயர்ந்த மனுசனாகவும் இருக்க முடியும். மேதைகளும் கடைகெட்ட அயோக்கியனா மிருகத்துக்கும் கீழானவனா இருக்க முடியும். அறிவுங்கறது வேறெ; மனசுங்கறது வேறெ; சோசப்பு மனசாலே உயர்ந்த பிறவில. இவன் கதையைக் கேட்டு இவனை 'இளிச்சவாயன்'னும் சொல்லாம். அது சொல்றவங்க மனசாலே பார்க்கறாங்களா. அறிவாலே பார்க்கறாங்களாங்கறதையும். பார்க்கறவங்க மனசையும் அறிவையும் பொறுத்தது. எப்படி இருந்தாலும் இவன் ஒரு தனி அவதாரம். விசேக்ஷப் பிறவிதான்"

'யாருக்காக அழுதான்' என்பது குறியீடாக விளங்கும் கேள்வி. காலம் காலமாக நல்ல உள்ளங்கள் பிறருக்காக வடிக்கும் கண்ணீர் இன்றளவும் குறியீடாகவே நின்றுவிட்டது, காட்டிக் கொடுக்காமல் இருப்பது மட்டுமன்று. தனது மௌனமான சகிப்பினால் முதலியாருக்கு ஒரு ஆத்ம தண்டனையும் தந்து விட்டிருந்தான் சோசப்பு. இயேசுவைப் போல பிறரது பாவங்களைக் கழுவிக்களைய தனது பரிசுத்தமான ஆன்மாவிலிருந்து பெருகிய கண்ணீரை சோசப்பு பயன்படுத்தினான் போலும்.

"சோசப்பை கிறிஸ்தவ இலட்சிய வாதத்தின் உச்ச உருவமாக வடித்திருக்கிறார் ஜெயகாந்தன். பாவத்திலிருந்து ஆன்ம சக்தியால் மீண்ட கதாபாத்திரமல்ல சோசப்பு. மாறாகத் தன் களங்கமின்மையினால் பாவத்தையே அறியாமல் ஆன்மாவைக் காத்துக் கொண்ட மனிதர், பல்வேறு அலைக்கழிப்புக்கள் கொண்ட தமிழ்ப் புனைக்கதை கதாபாத்திரங்களின் மறு எல்லையாகத் தனித்து நிற்கத் திராணி கொண்ட கதாபாத்திரம். ஓங்கூர் சாமியின் சிறப்பு போலே உக்கிரமாக சோசப்பின் அழுகையையும் ஜெயகாந்தன் படைத்துள்ளார். சிக்கும் சித்தனும் கண்ணீர் மல்கிய யேசுவும் நம் மனதில் ஆழப்பதிந்த பிம்பங்கள்."

என்னும் ஜெயமோகனின் கருத்து இதற்கு வலுவூட்டுவதாக உள்ளது,

ஜெயகாந்தனின் முதன்மைக் கதை மாந்தர்கள் அன்றாட வாழ்க்கையில் அனைவராலும் சந்திக்கப்படும் நபர்களேயின்றி வீரநாயகர்கள் அல்ல, புரட்சிக்காரர்கள். ஆனால் வன்முறையாளர்கள் அல்ல, இவர்கள் அவரவர் வாழ்க்கைச் சூழலில் தோன்றும் பிரச்னைகளை அவரவரால் இயன்ற அளவு நேர்மையோடு தீர்த்துக் கொள்பவர்கள். எல்லாவற்றையும் வீழ்த்தி வென்றடக்கப் புறப்பட்டவர்கள் அல்ல. இவர்கள் பல்வேறு விதமான பலங்களையும் பலவீனங்களையும் கொண்டவர்கள். அவற்றை உணர்ந்தும் உணராமலும் இருப்பவர்கள், இவர்களில் பலர் வீரத்தை ஒரு பண்பாகப் பயின்றவர்கள் கூடக் கிடையாது, இருப்பினும் வாழ்க்கையின் இக்கட்டான சூழல்களில். ஆண்மனத்தின் ஆழ்நிலை ஊற்றுக்கண்ணிலிருந்து பொங்கிப் பீறிட்டெழும் அசாதாரணமான அறம்சார் வீரம் இவர்கள் அனைவரிடமும் இருக்கிறது என்பதை உணர முடிகிறது. சமுதாயத்தால் ஒதுக்கப்பட்டவர்களும் ஒடுக்கப்பட்டவர்களும் விலக்கப்பட்டவர்களும் வேட்டையாடப் பட்டவர்களும் போற்றப்பட்டவர்களும்

தூற்றப்பட்டவர்களுமான மிகச்சாதாரண நிலையில் உள்ளவர்கள் இம்முதன்மைக் கதைமாந்தர்கள், இருப்பினும் இவர்கள் வாழ்க்கையின் பிரதிநிதிகள்,

'இதுதான் வாழ்க்கை' என்று சமுதாயம் கோடுகளை வரைந்து கோட்பாடுகளை எழுதி. விதிகள் அமைத்து. அரண்களை எழுப்பினாலும். 'இதுவும்தான் வாழ்க்கை' என்றபடி இலக்கியம் வேறு பலவற்றையும் பதிவு செய்கிறது. வாழ்பவர்கள் எல்லோரிடமும் இலக்கியம் வாழ்க்கையின் மகத்துவத்தைக் காண்கிறது. ஜெயகாந்தனின் சாதாரணக் கதாபாத்திரங்கள் அடையாளம் அற்ற, பதவி மற்றும் அதிகார இச்சையில்லாத, முகமும் முகவரியுமற்ற, ஆனாலும் ஆழ் மனத்தில் தேடல் உள்ள, புரட்சியாளர்கள். பற்றற்ற பற்று அனைவரிடத்தும் காணப்படுகிறது. அத்தகு தார்மீகப் புரட்சியில் ஈடுபடும் தன்மையே இவர்களை மூலப்படிமங்களாக அடையாளம் காட்டுகிறது.

"குறிப்பிட்ட என் பிரச்னை உன் பிரச்னை என்றால் அதற்குத் தீர்வு உண்டு, ஒரு குறிப்புக்கு உட்பட்ட நீயும் நானும் தீர்ந்தும் போகிறோம், ஆனால். கதையில் வரும் கம்பனின் கும்பகர்ணனும். வியாசனின் கண்ணனும். ஷேக்ஸ்பியரின் ஷேலக்கும். தாஸ்தாவெஸ்கியின் ராஸ்கோலினிகாவும். டால்ஸ்டாயின் அன்னாவும். டென்னஸி வில்லியம்ஸின் ஆல்மாவும் தனித்த உருவங்களாயின் அவர்களின் பிரச்னை தீர்ந்தே போயிருக்கும், அந்தக் கதைகளோடு. ஆனால் அவ்வாறு தீராது போன காரணம்தான் என்ன?

அவர்கள் குறிப்பாக ஒரு உருவம் தாங்கிய போதிலும் பொதுவான மனித குலத்தின் பிரதிநிதிகள் என்பதாலேயே பிரச்னைகளின் முடிவாகக் கதையின் நிறைந்திருந்தும். பிரச்னைகளின் ஆரம்பமாக வாழ்க்கையில் முளைத்த வண்ணமுமிருக்கிறர்கள். முடிவா? யாருக்கு வேண்டும்?" என்ற ஜெயகாந்தனின் கருத்தின் படி. மனித இனத்தின் கடைசி மனிதன் உயிரோடு இருக்கும் வரை வாழ்க்கை வீசும் சவால்கள் இருந்தவண்ணமே இருக்கும், அதை ஏற்றுக் கொள்ளும் பக்குவத்தையும் புரிந்து கொள்ளும் அறிவையும் அதைத் தாண்டியும் பார்க்கும் ஞானத்தையும் இலக்கியம் தரவல்லது .

●

**கட்டுரையாளர்: குறுந்தொகை குறித்து ஆங்கிலத்திலும் ஜெயகாந்தன் படைப்புகள் குறித்து தமிழிலும் ஆய்வு செய்து இரண்டு முனைவர் பட்டம் பெற்றவர்.**


## உங்கள் நூலகம் சந்தாதாரர்களுக்கு ஒரு வேண்டுகோள்!



**உங்கள் நூலகம் சந்தாவினைப் புதுப்பிக்காதவர்கள் தொடர்ந்து உங்கள் நூலகம் இதழினைப் பெற புதுப்பித்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்**

**உங்கள் நூலகம்**
**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,**
**41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,**
**அம்பத்தூர், சென்னை - 600 050.**
**தொலைபேசி எண் : 044-26251968, 26258410**

**டிசம்பர் மாதத்துடன் முடிவடையும் சந்தாதாரர்களின் ரசீது எண்கள்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 3733 | 1547 | 2712 | 352 | 355 | 3734 |
| 6875 | 6874 | 2713 | 2714 | 7920 | 3735 |
| 3731 | 7844 | 7796 | 2449 | 7921 | 1716 |
| 354 | 7845 | 2200 | 1126 | 7919 | 8565 |
| 3730 | 6798 | 2569 | 5406 | 6800 | |
| 1127 | 6799 | 1548 | 5407 | 6876 | |
| 2973 | 8564 | 1549 | 353 | 6877 | |

தனி இதழ் ₹ **45.00** / ஆண்டு சந்தா ₹ **540.00**
மாணவர்களுக்கு ₹ **500.00**, / ஆயுள் சந்தா ₹ **5400.00**
அயல்நாடு (ஆண்டு சந்தா) ₹ **4050.00**


*சந்தாத் தொகையை*
**New Century Reader's Sangam**
**Central Bank of India**
**Ambattur Branch, Chennai - 600 050**
**A/c.No. 1035249018**
**IFSC Code : CBIN0282161**
*என்ற வங்கிக் கணக்கில் செலுத்தலாம்.*

**கிளைகள்**

அம்பத்தூர் 044 - 2635 9906, ஸ்பென்ஸர் பிளாசா 044-28490027, மதுரை 0452 - 2344106, 4374106, திருநெல்வேலி 0462 - 2323990, 4210990, திண்டுக்கல் 0451-2432172, கோயம்புத்தூர் 0422 2380554, சேலம் 0427-2450817, ஈரோடு 0424-2256667, கிருஷ்ணகிரி 04343-234387, ஓசூர் 04344 - 245726, ஊட்டி 0423 - 2441743 திருச்சி 0431 - 2700885, தஞ்சாவூர் 04362-231371, புதுக்கோட்டை 04322-227773, விழுப்புரம் 04146-227800, பாண்டிச்சேரி 0413 2280101, வேலூர் 0416-2234495, நாகர்கோவில் 04652 - 234990.



# எதார்த்த எழுத்தாளர் ராஜம் கிருஷ்ணன்



பொன்னீலன்

தமிழ்ப் புதின இலக்கிய உலகில் சமுதாய உணர்வோடு எழுதுபவர்கள் மிகக்குறைவு. அவ்வாறு எழுதும் புதின ஆசிரியர்களில் ராஜம் கிருஷ்ணன் குறிப்பிடத்தக்க ஒருவர்.

தமிழ் நாவல் உலகில் சுமார் 60 ஆண்டு காலம் தன் எழுத்துக்களால் பலரது கவனத்தைக் கவர்ந்தவர். திருமதி.ராஜம் கிருஷ்ணன். நாவல்-சிறுகதை-கட்டுரை வானொலி, நாடகம் என்று பரந்துபட்ட படைப்புகள் அவருடையவை.

சாகித்ய அகாடமி விருது, சோவியத் நாடு நேரு விருது, சரஸ்வதி நஞ்சங்கோடு திருமலாம்பாள் விருது, பாரதிய பாஷா பரிஷத் விருது, திரு.வி.க. விருது போன்ற பல தேசிய விருதுகளைப் பெற்றவர் அவர்.

இடதுசாரிப் பெண்கள் அமைப்பான இந்திய மாதர் தேசிய சம்மேளனத்தின் தலைவராகவும் செயல்பட்டவர் ராஜம் கிருஷ்ணன்.

தன் ஒவ்வொரு படைப்பையும் திட்டமிட்டு ராஜம் கிருஷ்ணன் உருவாக்கினார். தன் வாழ்க்கையின் பெரும் பகுதியில் கள ஆய்வுகள் செய்து படைப்புள் உருவாக்கியவர் அவர். பெண் உரிமைக்கான மாநாடுகள்-பேரணிகள்-ஆய்வுக் கட்டுரைகள்-பயணங்கள் எனப் பரபரப்பாக இயங்கியவர் ராஜம் கிருஷ்ணன்

தமிழ் எழுத்தாளர்களிலேயே அதிகமாகப் பெண்களைப் பற்றிச் சித்தித்தவர் ராஜம் கிருஷ்ணன். சுருக்கமாகக் கூறினால் பெண் விடுதலை பற்றி எல்லா நாவல்களிலும் அவர் பேசுகிறார். அவர் படைத்துள்ள பெண் கதாபாத்திரங்கள் அனைத்துமே பெண் விடுதலைக்காகக் குரல் கொடுப்பவர்கள். பெண் விடுதலை பற்றிய அவரது கருத்துகள் தெளிவானவை; துணிச்சல் மிகுந்தவை.

அவரின் பெரும்பாலான படைப்புகள் மைய நீரோட்டத்தில் இருந்து விலக்கப் பட்டவர்களாகவும் விலகியவர்களாகவும் உள்ள எளிய மக்களின் வாழ்க்கையை வெளிச்சத்துக்குக் கொண்டு வந்ததுடன் அவர்களின் அவல வாழ்க்கையையும் பேசின.

சிறுகதைகள் மூலமே அவரின் எழுத்துப்பயணம் தொடங்கியது. பின்னால் நாவல் எழுத்தாளராக மாறினார் அவர். கள ஆய்வு முறையிலான எழுத்து வடிவத்தைத் தமிழில் தொடங்கி வெற்றி பெற்ற எழுத்தாளர் ராஜம் கிருஷ்ணன். ஆனால் இம்முறையை அப்போதைய எழுத்தாளர்கள் பலரும் கடும் விமர்சனத்துக்கு உள்படுத்தினார்கள்.

ராஜம் கிருஷ்ணன் எழுத்துலகில் அடியெடுத்துவைத்த காலம், இந்தியா விடுதலை பெற்றிருந்த காலமாகும். தேச பக்தி உணர்வு மேலோங்கி நின்ற காலம் அது. அந்த உணர்வுகள் காரணமாக சமுதாயத்தில் புரையோடிக் கிடந்த பல முரண்பாடுகள் அதிகம் வெளியில் தெரியாமல் இருந்தன. அதில் நாட்டு விடுதலை, பிறகு சமுதாய விடுதலை என்ற லட்சியத்தில் காங்கிரஸ் இயக்கமும், பொது உடைமை இயக்கமும் ஒன்றுபட்டு உழைத்த நேரம் அது.

அதே சமயத்தில் திராவிட இயக்கம் தமிழ் இன வாதத்தினைப் பற்றி பேசத் தொடங்கியிருந்தது. வர்க்க முரண்பாடுகள் கொஞ்சம் கொஞ்சமாக வெளிச்சத்திற்கு வந்து கொண்டிருந்தன. இவற்றின் விளைவாக தொழிற்சங்க இயக்கமும் தமிழ் நாட்டில் வளர்ந்து கொண்டிருந்தது. தொழிலாளர்கள் போராட்டமும், விவசாயிகள் போராட்டமும் வேகமாக நாட்டில் இடம் பெற்றுக் கொண்டிருந்தன. சாதி ஒழிப்பு-மூட நம்பிக்கை ஒழிப்பு-பெண் விடுதலை போன்ற கருத்துகள் பற்றிப் பலர் பேசத் தலைப்பட்டனர். இந்த இயக்கங்களின் தாக்கங்கள் தமிழ் இலக்கியத்தில் இடம் பெற்றன.

ராஜம் கிருஷ்ணன் எழுதத் தொடங்கியது இக்காலம். இக்காலத்தில் பல பெண் எழுத்தாளர்களும் பிரபலமாயிருந்தனர். இவர்களில் வை.மு.கோதை நாயகி அம்மாள்-அனுத்தமா-சரோஜா ராமமூர்த்தி-கி.சாவித்திரி அம்மாள் போன்றவர்கள் பிரபலமானவர்கள். இவர்களது படைப்புகள் பெண்களை மையமாகக் கொண்டிருந்தன.

ஆனால் அறிவுப் பூர்வமாக அதனை வெளிப்படுத்தும் கருத்தியல் நோக்கு இவர்களிடம் இல்லை. இது அவர்களுக்குள்ள குறையல்ல. இவர்கள் பெண் பற்றிய சிந்தனையை வளர்த்ததே ஒரு முற்போக்கான செயலாகும்.

இவர்கள் எழுதி பிரபலமாக இருந்த காலத்தில் ராஜம் கிருஷ்ணன் எழுத்து உலகில் அடியெடுத்து வைத்தார்.

மேலே குறிப்பிட்ட படைப்பாளிகள் எவரும் இலக்கியம் பற்றி சமுதாயம் பற்றி ஒரு திட்டவட்டமான கொள்கை இல்லாதவர்கள். எனவே,இவர்கள் படைப்பு என்பதை கற்பனை மூலமே உருவாக்க முடியும் என்ற நோக்கு உள்ளவர்களாக இருந்தனர். இவர்கள் படைப்புகளை செண்டிமெண்டல் படைப்புகள் என்று வகைப்படுத்துவர்.

ராஜம் கிருஷ்ணன் ஒரு எதார்த்தப் படைப்பாளர். பிரச்சினைகளை நேரில் பார்த்து ஆய்வு செய்து உண்மைகளைக் கண்டு உணர்ந்து எழுதிய முதல் எழுத்தாளர் இவர். பல போராட்டங்களுக்கும் போய் கள ஆய்வு செய்து உண்மைகளைக் கண்டு எழுதாக்கிய முதல் பெண் எழுத்தாளர் இவர். இந்த வகையில் இவர் ஒரு யதார்த்த இலக்கிய முன்னோடி. அவர் படைப்புகள் அழுத்தமானவை காலத்தால் அழியாதவை.

●


**கட்டுரையாளர்: சாகித்ய அகாடெமி விருது பெற்ற எழுத்தாளர்**







# இரு தன்வரலாறுகள்



பாவண்ணன்

ஏறத்தாழ நூற்றிருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னால் கல்கத்தாவில் நகரத்துக்குள் நான்கு வீடுகளும் புறநகரில் தோட்டத்துடன் கூடிய மாளிகை போன்றதொரு வீடும் வைத்திருந்த செல்வச்செழிப்பான உயர்வகுப்பைச் சேர்ந்த வழக்கறிஞரின் குடும்பமொன்றில் ஒரு பெண் குழந்தை பிறந்தது. அவள் பத்து வயதாக இருந்தபோது, இரண்டாவது பிரசவத்தில் அவளுடைய அன்னை மறைந்துவிட்டாள். அந்தத் துக்கத்தின் நிழல் அவள் மீது விழுந்துவிடாதபடி, அவளை கண்ணும் கருத்துமாக வளர்த்தார் அவளுடைய தந்தையார். நகரத்திலேயே பெரிய பள்ளியாக இருந்த பெத்யூன் பள்ளியில் சேர்த்து படிக்கவைத்தார். வீட்டுக்கு வந்து பாடங்களைச் சொல்லிக் கொடுப்பதற்காக தனியொரு ஆசிரியரையும் இசை கற்பிப்பதற்காக தனியொரு ஆசிரியரையும் அமர்த்தினார் அவளுடைய அப்பா. நல்ல புத்தகங்களைப் படிப்பதற்கு ஏதுவாக

வீட்டிலேயே ஒரு நூலகத்தை அமைத்துக் கொடுத்தார். ஓய்வு நேரங்களில் நல்ல நாடகங்களையும் திரைப்படங்களையும் பார்ப்பதற்கும் வழி ஏற்படுத்திக் கொடுத்தார். தன் மகள் கல்வியிலும் கலைகளிலும் மேம்பட்டு விளங்கவேண்டும் என்று அவர் கனவு கண்டார். அவளைக் கண்ணும் கருத்துமாகப் பார்த்துக்கொண்டார்.

ஒன்றிரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு அவருடைய அக்கா அவருக்கு மறுமணம் செய்துவைத்தார். சகோதரனின் வாழ்வு வறண்ட பாலைவனமாகப் போய்விடக்கூடாது என்பது அவருடைய எண்ணமாக இருந்தது. அவர் விரும்பியதுபோலவே புதிய மணமகளின் வருகை சகோதரனின் வாழ்வில் வசந்தத்தைக் கொண்டுவந்தாலும், வேறொரு கோணத்தில் குடும்பத்தில் நிலவியிருந்த அமைதிநிலையைக் கலைத்துவிட்டது. முதல் மனைவியின் மகளோடு அவளால் இயல்பாகப் பழகமுடியவில்லை. தன் அப்பா, அம்மாவை மறந்து சித்தியுடன் மகிழ்ச்சியுடன் இருப்பதையும் ஊர்ப்பயணங்கள் சென்று வருவதையும் அந்த மகளால் செரித்துக்கொள்ள இயலவில்லை.

ஏதோ ஒரு வழியில் சொந்தம் பாராட்டிக் கொண்டுவந்த இளைஞனொருவனுக்கு அவளுடைய அப்பா அடைக்கலம் கொடுத்து, தன் செல்வாக்கின் வழியாக ஒரு வேலையையும் வாங்கிக் கொடுத்தார். நன்றிக்கடனாக அந்த இளைஞன் தினமும் வீட்டுக்கு வந்து அவளுக்குப் பாடங்கள் சொல்லிக் கொடுக்கத் தொடங்கினான். மெல்ல மெல்ல உருவான நெருக்கத்தின் விளைவாக தன் மனபாரத்தை அவள் அவனோடு பகிர்ந்துகொள்ளத் தொடங்கினாள். அவனும் அவளுக்கு ஆறுதல் சொல்லி அமைதிப்படுத்துவதில் தொடங்கி, அவள் மனத்தில் இடம் பிடித்துவிட்டான். காலம் செல்லச் செல்ல, இருவரும் நெருங்கிப் பழகத் தொடங்கினர். கண்காணிக்க யாருமில்லாத நிலையில் இருவருடைய நெஞ்சிலும் உடல் சார்ந்த இச்சைகள் விழித்தெழுந்தன. ஆசை என்னும் புயல் வேட்கைகளைப் பற்றியெரிய வைத்தன. ஏற்கனவே திருமணம் ஆனவன் அவன். அவனுக்கென ஒரு குடும்பம் அவனுடைய கிராமத்தில் இருந்தது. ஆனால் உடலில் பற்றியெரிந்த நெருப்பு அனைத்தையும் மறக்கவைத்துவிட்டது. பள்ளியிறுதித் தேர்வுகள் முடிந்துவிட்டால் சந்திக்க வாய்ப்பின்றிப் போய்விடுமோ என்னும் அச்சம் இருவரையும் வாட்டியது. அதனால் இறுதித் தேர்வன்று, அவள் வீட்டைவிட்டு வெளியேறி பள்ளிக்குச் சென்று, அங்கே காத்திருந்த அவனுடன் ஹவுரா ரயில் நிலையத்திற்குச் சென்று கல்கத்தாவை விட்டு வெளியேறினாள்.

பதினைந்து வயதில் வெறும் பள்ளிப்படிப்புத் தகுதியோடு காதல் மயக்கத்தில் வீட்டைவிட்டு வெளியேறிய அந்தப் பெண்ணின் பெயர் மானதா தேவி. அவர்தான் இந்த நூலாசிரியர். அவரை ஆசை வலையில் வீழ்த்தி டில்லிக்கு அழைத்துச் சென்ற இளைஞர் பெயர் ரமேஷ். அலுவலகத்திலிருந்து களவாடி எடுத்துவந்த தொகை தீரும்வரைக்கும் மானதா தேவியுடன் உல்லாசமாக வாழ்க்கையை நடத்திவிட்டு, சில மாதங்களுக்குப் பிறகு அவளை நட்டாற்றில் தவிக்கவிட்டு தலைமறைவாகிவிட்டார். வீட்டுக்குத் திரும்பிச் செல்லவும் மனமின்றி, தனித்து வாழவும் துணிவின்றி, உடலிச்சையை வென்று ஆளும் உறுதியுமின்றி, அவள் இறுதியாக அந்த மாபெரும் நகரத்தில் பரத்தைத் தொழிலைத் தேர்ந்தெடுத்துக்கொண்டாள். அந்த வழியிலேயே அவள் வாழ்வின் திசை அமைந்துவிட்டது. புயலில் சிக்கி திசையறியாமல் தடுமாறிச் செல்லும் கப்பலைப்போல, காமப்புயலில் சிக்கிக்கொண்ட அவள் வாழ்க்கையும் அசைந்தாடி ஓய்ந்தது. இருபத்தொன்பது வயதில் அவர் தன் சுயசரிதையை வங்கமொழியில் எழுதினார். ஒரு படித்த பெண்ணுக்கு நேர்ந்த அவலம் என்ற வகையில் அப்புத்தகம் விரைவிலேயே வாசகர்களின் கவனத்தை ஈர்த்தது. வெகுவிரைவிலேயே அவருடைய தன்வரலாற்று நூல் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டு வெளியானது. அதைத் தொடர்ந்து இந்தியாவின் பிற மொழிகளிலும் படிப்படியாக மொழிபெயர்க்கப்பட்டு வாசகர்களிடையில் பிரபலமானது. **தமிழில் இப்போது மொழிபெயர்த்திருப்பவர் சசிகலா பாபு. வெளியிட்டிருப்பது காலச்சுவடு பதிப்பகம்.**

ரமேஷின் கைகளைப் பற்றியவாறு டில்லிக்குச் சென்ற மானதா தேவி, அதைத் தொடர்ந்து இன்ப மயக்கத்துடன் லாகூர், ஸ்ரீநகர், பம்பாய், புஷ்கர், பாரத்பூர், ஜெய்ப்பூர், சித்தூர் என பல இடங்களுக்குச் சென்று சிற்சில நாட்கள் தங்கிச் சென்றுகொண்டே இருந்த அனுபவத்தை தனியொரு அத்தியாயமாகவே எழுதியிருக்கிறார். சித்தூரில் தங்கியிருந்த சமயத்தில் சித்தூர் ராணியான பத்மாவதி என்கிற பத்மினி தீக்குளித்த இடத்தைச் சென்று பார்த்த கணத்தில் அங்கு கூடியிருந்த கூட்டத்தைப் பார்த்து தனக்கு மயக்கமே வந்துவிட்டதாகக் குறிப்பிட்டிருக்கிறார் மானதா தேவி. வட இந்தியாவில் முகம்மதியப்

பேரரசு உருவாகி வந்த சமயத்தில் பத்மினியின் அழகைக் கேள்விப்பட்ட சுல்தான் அல்லாவுத்தீன் கில்ஜி பத்மினியைத் தன் அந்தப்புரத்துக்கு அனுப்புமாறு தகவல் அனுப்புகிறான். அவன் கோரிக்கை மறுக்கப்பட்டதால் அவனுடைய படை சித்தூரைத் தாக்குகிறது. போரில் அரசன் மரணமடைந்த செய்தியைக் கேட்டதும் பத்மாவதி தீக்குளித்து தன் உயிரை மாய்த்துக்கொள்கிறாள். அந்த இடத்தைக் கண்ட கணத்தில் ஒருகணம் மயக்கத்தில் நிலைகுலைந்து சரிந்துவிட்டதாக குறிப்பிட்டிருக்கிறார் மானதா தேவி.

தன் உடலை இன்னொருவன் தீண்டிவிடக் கூடாது என கற்பைக் காப்பாற்றிக்கொள்வதற்காக உயிரையே மாய்த்துக்கொள்ளும் இடத்தைக் காணும் தருணத்தில் ஏற்பட்ட மனசாட்சியின் உறுத்தலே அவள் மயக்கத்துக்குக் காரணமாக இருந்திருக்கலாம். அக்கணத்தை விரித்தெழுதாமல் வாசகர்களின் ஊகத்துக்கு விட்டுவிட்டு அப்படியே கடந்துசெல்கிறார் மானதா தேவி. அப்பயணத்தின் முடிவில் அவளுடைய பிடியில் தொடர்ந்து இருக்க விரும்பாத ரமேஷ் வீட்டைவிட்டு வெளியேறிவிட, மானதா தேவியுடைய வாழ்க்கைப்பயணத்தின் திசை மாறிவிட்டது. அது ஒரு திருப்புமுனைச்சம்பவம்.

ரமேஷ் அவரைவிட்டுப் பிரிந்துசென்ற சமயத்தில் அவர் கருவுற்றிருந்தார். அவரை ஆதரித்துக் காப்பாற்ற அப்போதும் மனிதர்கள் கிடைத்தார்கள். ஆனால் அவருடைய காமவேட்கை அவரை எந்த இடத்திலும் தங்கவிடவில்லை. வெளியேற்றியபடி இருந்தது. பிரசவ சமயத்தில் அவர் பல கடுமையான சோதனைகளை எதிர்கொள்ள நேர்ந்தது. துரதிருஷ்டவசமாக, அவருடைய குழந்தை இறந்தே பிறந்தது. ஒரு பரிந்துரையின் பேரில் துறவிகள் தங்கியிருந்த ஆசிரமம் அவருக்கு அடைக்கலம் வழங்கியது. ஆனால் அங்கே தங்கியிருந்த இளந்துறவியின் மீது அவருடைய ஆர்வம் படிவதைப் புரிந்துகொண்ட ஆசிரமத்தின் தலைமைப் பொறுப்பாளர் அவரை அங்கிருந்து வெளியேற்றிவிட்டார். அதற்குப் பிறகே அவர் உடலை விற்றுப் பிழைக்கும் தொழிலில் இறங்கினார்.

துரதிருஷ்டவசமாக அவருக்கு அமைந்த துணைகள் எல்லாம் அத்தொழிலில் இருந்து அவரை மீட்டெடுப்பதற்குப் பதிலாக அத்தொழிலில் இன்னும் சிறந்த, அதைவிடச் சிறந்த வாய்ப்புகளை நோக்கியே அவரைச் செலுத்தினார்கள். எங்கு சென்றாலும் குடியிருக்க நல்லதொரு வீடு கிடைத்தது. செல்வச் செழிப்பான வாடிக்கைக்காரர்களை வீடு வரை அழைத்துவரும் தரகர்கள் கிடைத்தார்கள். அவரும் செழிப்பான வாழ்க்கையை வாழத் தொடங்கினார்.

பல ஆண்டுகளுக்குப் பிறகு பாலியல் தொழிலில் அவர் சலிப்படைந்தார். சேர்த்துவைத்த செல்வம் போதும் என்ற எண்ண்ம் ஏற்பட்டுவிட்டது. இனி பாலியல் தொழில் வேண்டாம் என ஒருமுறை முடிவெடுத்து எல்லாவற்றையும் நிறுத்திவிட்டார். தனக்குப் பிறகு தன்னுடைய சேமிப்பு எல்லாம் இந்து சீர்திருத்த அமைப்புகளுக்குச் சென்று சேரும் வகையில் உயில் எழுதிவத்துவிட்டு, தனிமையில் வாழத் தொடங்கினார்.

ஒருபக்கம் பாலியல் தொழிலில் ஈடுபட்டிருக்கும் பெண்களை இழிவுடன் பார்க்கும் சமுதாயம், இன்னொரு பக்கம் அதே பெண்களின் காலடியில் தன் மானம், மரியாதை, சொத்து, உடல், பொருள், ஆவி என அனைத்தையும் வைத்து இன்பம் துய்த்துவிட்டுச் செல்லும் ஆண்களை நல்ல அரசியல்வாதிகளாகவும் போராளிகளாகவும் கவிஞர்களாகவும் பணக்காரர்களாகவும் உன்னதமானவர்களாகவும் புகழ்ந்து மதிப்பளிக்கும் அவலத்தைத் தன் தன்வரலாற்றில் ஓரிடத்தில் சுட்டிக் காட்டுகிறார் மானதா தேவி. அறியாப் பருவத்தில் தெரிந்தோ தெரியாமலோ செய்கிற தவறுக்காக ஒவ்வொருநாளும் பெண்கள் தீயில் வெந்துகொண்டிருக்கும்போது, அதே தவற்றைச் செய்யும் ஆண்கள் கிஞ்சித்தும் குறையாத செல்வாக்குடன் வாழ்ந்துகொண்டிருக்கும் முரணை முன்வைத்து ஒவ்வொருவரும் யோசிக்கவேண்டும்.

பாலியல் தொழிலில் ஈடுபட்டிருக்கும் பிற பெண்கள் தம் துன்பங்களை அமைதியாகக் கடந்துசெல்லலாம். ஆனால் மானதா தேவி படித்த பெண் என்பதால் அப்படி எளிதாக எதையும் கடந்துசெல்ல இயலவில்லை. எல்லா நிகழ்ச்சிகளையும் தொகுத்தும் பகுத்தும் பார்த்து ஒரு விஷயத்தை மதிப்பிடுகிறார். அவருடைய படிப்பறிவும் சிந்திக்கும் ஆற்றலும் சமுதாயத்தில் நிலவும் முரணைச் சுட்டிக்காட்டும் துணிச்சலை வழங்கியிருக்கின்றன.

இந்தத் தன்வரலாற்றைப் படித்து முடித்ததும் தற்செயலாக வேறொரு புத்தகத்தை நினைத்துக்கொண்டேன். அதுவும் தன்வரலாற்று

வகைமை சார்ந்த நூல். சில ஆண்டுகளுக்கு முன்பு இதே **காலச்சுவடு பதிப்பகம் அப்புத்தகத்தை வெளியிட்டது. மூல ஆசிரியர் பேபி ஹால்தார் என்னும் பெண்மணி. நூலின் பெயர் விடியலை நோக்கி. அதைத் தமிழில் மொழிபெயர்த்தவர் எம்.சிவசுப்பிரமணியன்.**

பேபி ஹால்தார் ஜம்மு காஷ்மீரில் ஏதோ ஒரு கிராமத்தில் ஏழைக் குடும்பத்தில் பிறந்தவர். தந்தையாரின் குடிப்பழக்கம் நிறைந்தவர். அதனால் அந்தச் சிறுமியின் தாயார் அக்குடும்பத்திலிருந்து வெளியேறிவிட்டார். அப்போது அவருக்கு நான்கு வயது. சிற்றன்னையின் கொடுமைகளுக்கு இடையில் வளர்ந்து எப்படியோது ஏழாவது வகுப்புவரை படித்தார் ஹால்தார். அவளால் தொடர்ந்து படிக்கமுடியவில்லை. 12 வயது நடக்கும்போதே அவளுக்கு 14 வயதுள்ள ஓர் இளைஞனுக்கு மணம் முடித்து அனுப்பிவைத்துவிடுகிறார் அவள் தந்தையார். அடுத்தடுத்து அவருக்கு மூன்று குழந்தைகள் பிறந்துவிடுகின்றன.

அவள் கணவனும் பெரிய கொடுமைக்காரன். ஒருநாள் மனம் துவண்டு, பிள்ளைகளோடு குடும்பத்தைவிட்டு வெளியேறி டில்லிக்குச் சென்றார். பல இடங்களில் பல இன்னல்களுக்கிடையில் வீட்டு வேலை செய்து பிழைத்தார். தனக்குக் கிட்டாத கல்வி தன் பிள்ளைகளுக்குக் கிடைக்கவேண்டும் என்ற எண்ணத்தில் பள்ளியில் சேர்த்து படிக்கவைத்தார்.

தற்செயலாக, சில ஆண்டுகளுக்குப் பிறகு அவளுக்கு பிரேம்சந்த் பேரனான பிரபோத் குமாரின் வீட்டில் வேலை கிடைத்தது. ஒருநாள் பிரபோத் குமாரின் நூலக அறையைப் பெருக்கிச் சுத்தம் செய்தபோது, அவளுக்கு இயல்பாகவே இருக்கும் படிப்பு ஆர்வத்தில், மேசை மீது வைத்திருந்த புத்தகத்தைப் பிரித்து படிக்கத் தொடங்கினார். வாசிப்பில் மூழ்கிவிட்டதால், எதிர்பாராமல் வந்த குமாரை அவள் கவனிக்கவில்லை. அவளைப்பற்றி விசாரித்துத் தெரிந்துகொண்ட குமார், அவளை தன் வீட்டிலேயே தங்கிக்கொள்ள அனுமதி கொடுத்து, அவள் பிள்ளைகளையும் படிக்கவைத்தார். அவளுடைய வாழ்க்கைக்கதையைக் கேட்டு மனமுருகிய அவர், அவளிடம் தன் வாழ்க்கைக்கதையை எழுதும்படி கேட்டுக்கொண்டு ஒரு பெரிய நோட்டுப்புத்தகத்தைக் கொடுத்தார். அவரே எதிர்பாராதபடி குறுகிய கால அவகாசத்திலேயே அந்த நோட்டுப்புத்தகத்தையே தன் கதையால் நிரப்பிவிட்டாள் அவள். அந்தப் பிரதியை தனக்குத் தெரிந்த வங்காளப் பத்திரிகையாசிரியரிடம் கொடுத்து படிக்கவைத்தார் குமார். அந்தக் கதையால் மனம் நெகிழ்ந்துபோன பத்திரிகை ஆசிரியர் தன் பத்திரிகையில் அதைத் தொடர்கதையாக வெளியிட்டார். குமார் அக்கதையை இந்தியில் மொழிபெயர்த்தார்.

வெகுவிரைவில் ஹால்தாரின் பெயர் இலக்கிய உலகில் பிரபலமானது. அதைத் தொடர்ந்து அந்தத் தன்வரலாறு ஆங்கிலம், பிரெஞ்சு, ஜப்பான், கொரியா உள்ளிட்ட பதின்மூன்று உலக மொழிகளிலும் பிற இந்திய மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டு வெளியானது. அந்தப் புத்தகம் ஈட்டிக் கொடுத்த வருமானத்தை வைத்து ஹால்தார் தனக்குச் சொந்தமாக ஒரு வீட்டையே வாங்கிக்கொண்டார். இன்று உலகறிந்த எழுத்தாளராக விளங்குகிறார்.

மானதா தேவி படிப்பில் ஆர்வம் கொண்ட பெண்ணாக இருந்தாலும், சரத்சந்திரர் நாவல்களைப் படிக்கும் அளவுக்கு வாசிப்புப்பழக்கம் உள்ளவராக இருந்தாலும், அந்தப் படிப்பின் வழியாக அவர் எதையும் அடையவில்லை. அவர் மனத்தை அந்தப் படிப்பு பண்படுத்தவில்லை. அது ஓர் அலங்காரப் பொருளாகவே நின்றுவிட்டது. அதே சமயத்தில் ஹால்தாரின் வாழ்க்கையில் அவர் படித்த படிப்பு அருந்துணையாக அமைந்தது. மன உறுதியையும் தெளிவையும் ஏற்படுத்தியது. உடைந்த படகிலிருந்து ஆற்றில் விழுந்தவன் மரப்பலகையையே ஆதாரமாகப் பற்றிக்கொண்டு உயிர் பிழைப்பதுபோல, அவர் தன் படிப்பார்வத்தைப் பற்றிக்கொண்டார். அவர் நம்பிக்கை வீண் போகவில்லை. சரியான இடத்துக்கு அவரைக் கொண்டுவந்து கரைசேர்த்தது அவர் கற்ற கல்வி.

மானதா தேவி ஒரு துருவம் என்றால் பேபி ஹால்தார் இன்னொரு துருவம். இருவருடைய அனுபவங்களையும் மொழிபெயர்ப்பின் வழியாக நாம் படித்தறியும் வகையில் காலச்சுவடு அந்நூல்களை வெளியிட்டிருக்கிறது. அப்பணிக்கு தமிழ் வாசக உலகம் கடமைப்பட்டிருக்கிறது, மொழிபெயர்ப்பாளர்களான சசிகலா பாபுவையும் மறைந்த எம்.சிவசுப்பிரமணியன் அவர்களையும் நாம் நன்றியுடன் நினைத்துக்கொள்ளவேண்டும்.

●

**கட்டுரையாளர்: எழுத்தாளர்**

# தமிழ் எழுத்து மரபின் தோற்றம் குறித்த ஆய்வுக் களஞ்சியம்




அ. சதீஷ்

சிந்துவெளிப் பண்பாட்டின் கண்டுபிடிப்பு நிகழ்ந்து நூறு ஆண்டுகள் கடந்துள்ள இத்தருணத்தில் சிந்துவெளிக் குறியீடுகள் குறித்த ஆய்வுகள் மேலும் கூர்மைபெறத் தொடங்கியுள்ளன. இருமொழிப் பொறிப்புகள் கிடைக்காத நிலையில் சிந்துவெளிக் குறியீடுகளை வாசித்துப் பொருள்கொள்வதில் சிக்கல்கள் நிலவுவது தொடர்கிறது. எனவே சிந்துவெளிக் குறியீடுகளைப் பண்பாட்டுச் சூழலிலும் வேறுபல முறையியல்களிலும் புரிந்துகொள்ளும் ஆய்வுகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. வாசித்துப் பொருள் அறியும் வரை இவற்றைக் குறியீடுகள் என்றே அறிஞர்கள் அழைக்கின்றனர். வாசித்து அறியப்பட்டதையே எழுத்துகள் என்று அழைப்பர். குறியீடுகளை எழுத்துகளாக வாசிக்கும் முயற்சியாக ஒரு குறியீட்டுத் தொகுதியில் முதலில் மட்டுமே இடம்பெறும் குறியீடுகள் எவை, இறுதியில் மட்டுமே இடம்பெறும் குறியீடுகள் எவை, பரவலாக இடம்பெறும் குறியீடுகள் எவை என்பது போன்ற ஆய்வுகள் அடிப்படையான ஆய்வுகளாக அமைகின்றன. எனவே இக்குறியீடுகளுக்கான பட்டியல்கள் மற்றும் விரிவான அட்டவணைகள் உருவாக்கப்பட்டுள்ளன.

சிந்துவெளிக் குறியீடுகளைப் போன்றே வாசித்துப் பொருள் கொள்ளப்படாத பல்வேறு வகையான குறியீட்டுத் தொகுதிகள் இந்தியா முழுவதும் காணப்படுகின்றன. குறிப்பாக சிந்துவெளிப்பண்பாட்டின் மறைவுக்குப் பின்னரும் பிராமி எழுத்து வடிவத்திற்கு முன்னரும் சுமார் ஆயிரம் ஆண்டுகளாக நிலவி வந்த, எழுத்து முறையாகக் கொள்ளத்தக்க பற்பல குறியீடுகளை வாசித்து அறியும் ஆய்வுகள் தொடக்க நிலையிலேயே உள்ளன. இக்குறியீடுகள் சாதாரணக் கீறல்களா அல்லது பொருள் சார்ந்த குறியீடுகளா? சாதாரணக் கீறல்கள் எனில் பல்வேறு இடங்களில் எவ்வாறு ஒரேவிதமான குறியீடுகள் கிடைக்கின்றன? ஆக இக்குறியீடுகள் எதையோ உணர்த்த முற்படுகின்றன. வரலாற்றில் துலக்கப்படவேண்டிய முக்கியப்பகுதிகள் இவை. ஆனால் இக்குறியீடுகளை முறையாக ஆவணப்படுத்தும் தன்மைகள் கூட முழுமையான கவனத்துடன் நடைபெறவில்லை என்பதே உண்மை.

இந்தியாவில் பொருள் அறியப்பட்ட தொன்மையான எழுத்து வடிவமாக பிராமி எழுத்து வடிவமே உள்ளது. இந்த எழுத்து வடிவத்தின் தோற்றம் மற்றும் பரவல் குறித்த ஆய்வுகளிலும் பல்வேறு குழப்பங்கள் நீடித்து வருகின்றன. அசோகனுடைய ஆட்சிக்காலத்தில் பொறிக்கப்பட்ட கல்வெட்டுகளில் உள்ள பிராமியைக் கொண்டு பொ. ஆ. மு. மூன்றாம் நூற்றாண்டு அளவிலேயே பிராமியின் தொடக்க காலமாக இந்திய வரலாற்று ஆய்வாளர்கள் பரவலாகக் கொள்ளுகிறார்கள். அசோக பிராமிக்குப் பிற்பட்டு பொ. ஆ. மு. இரண்டாம் நூற்றாண்டளவில் தமிழ்நாட்டிற்கும் இந்த எழுத்துமுறை அறிமுகமாகியது என்றே ஐராவதம் மகாதேவன் உள்ளிட்ட முக்கியமான ஆய்வாளர்கள் பலரும் கருதினர். பாறைப்பொறிப்புகளை முதன்மைப்படுத்தியே இத்தகைய ஆய்வு முடிவுகளை வெளியிட்டனர். ஆனால் அசோகனுடைய காலகட்டத்திற்கு முன்பே பிராமி வரிவடிவம் தமிழ்நாட்டில் நிலைபெற்றிருந்ததை அறிவியல் அடிப்படையில் நிறுவுவதற்கான தொல்லியல் சான்றுகள் கிடைத்துள்ளன. எனில் பிராமியின் தோற்றம் மற்றும் பரவல் என்பது தமிழ்நாட்டை அடிப்படையாகக் கொண்டதா என்னும் கேள்விகள் முதன்மையானவை.

மேற்குறித்த பல்வேறு சிக்கல்களையும் விவாதங்களையும் உட்படுத்தித் தமிழ் எழுத்துமரபின் தொன்மை குறித்து அறிவியல் பூர்வமாக ஆராய்கிறது பேராசிரியர் கா. ராஜன் அவர்களின் **தொன்மைத் தமிழ் எழுத்தியல் (குறியீடுகளிலிருந்து தமிழ் – பிராமியை (தமிழி) நோக்கிய பயணம்)** என்னும் நூல்.

ஈரோடு மாவட்டத்தில் அமைந்துள்ள கொடுமணல் சங்ககாலத்தில் புகழ் பெற்ற வணிக நகரமாக விளங்கியது. பரபரப்பான செய்திகளுக்காக அல்லாமல் ஆழமான பண்பாட்டுத் தரவுகளைத் தன்னகத்தே கொண்டது கொடுமணல் அகழாய்வு. 1985 இல் தொடங்கி 2012 வரையான ஏழு பருவகாலங்களில் நிகழ்த்தப்பட்ட அகழாய்வுகளில் கிடைத்த பண்பாட்டுத் தரவுகளை முதன்மைப்படுத்தி இந்தியா மற்றும் இலங்கையில் கிடைத்த தரவுகளோடு ஒப்பு நோக்கி தொல்லெழுத்தியல் (Palaeography), வரிவடிவவியல் (Orthography), காலப்பகுப்பாய்வு (Chronology) ஆகிய முறையியல்களில் பண்பாட்டுச் சூழலில் வைத்து ஆராய்கிறது இந்நூல். கொடுமணல் மற்றும் பொருந்தல் ஆகிய இடங்களில் மட்பாண்டங்களில் கிடைத்த பிராமி எழுத்துப் பொறிப்புகளின் காலத்தை அவற்றின் உடன்கிடைத்த பொருட்களைக் கதிரியக்கக் கார்பன் சோதனையின் வழி ஆராய்ந்து பிராமியின் காலத்தைப் பொ. ஆ. மு. ஆறாம் நூற்றாண்டு என்று முன்னகர்த்தியவர் பேராசிரியர் கா. ராஜன். இந்த ஆய்வு தமிழ்ச்சமூகம் குறித்த ஆய்வில் மிகப்பெரிய மாற்றத்தை உருவாக்கியது. இந்நூலினை அதன் தொடர்ச்சியாகவே புரிந்துகொள்ள வேண்டும்.

கொடுமணல் அகழாய்வில் கிடைத்த குறியீடுகள் தாங்கிய 1456 ஓடுகளில் இருந்து முழுமையானவையாக அடையாளப்படுத்தப்பட்ட 596 குறியீடுகளையும் 551 பிராமி எழுத்துப்பொறிப்புகளையும் கவனத்துடன் ஆவணப்படுத்தி அவற்றைச் சூழல் சார்ந்த பொருள்கோடலுக்கான சாத்தியத்தை உருவாக்குகிறார். குறியீடுகளில் சில சிந்துவெளிக் குறியீடுகளுடன் முழுமையாக ஒத்துப்போகின்றன. சில குறியீடுகள் பகுதியளவில் ஒத்துப்போகின்றன. கொடுமணலில் கிடைத்த குறியீடுகளைப் போலவே தமிழகத்தில் பல பகுதிகளிலும் நிகழ்ந்த அகழாய்வுகளில் கிடைக்கும் குறியீடுகளுடன் ஒப்புமையுடையனவாக உள்ளன. மீன், மயில் போன்ற குறியீடுகள் சங்க இலக்கியங்களோடும் உறவுகொண்டுள்ளன. பாறை ஓவியங்களில் காணப்படும் குறியீடுகளோடு கொடுமணல் குறியீடுகள் ஒத்துப்போகின்றன. நேரடியாக வாசித்து அறியமுடியாவிட்டாலும் பண்பாட்டு அடிப்படையில் சிலவற்றுக்கு விளக்கம் அளிக்கும் முறையையும் பேராசிரியர் இந்நூலில் முன்வைக்கிறார். வலமிருந்து இடப்பக்கமாக எழுதப்பட்ட சிந்துவெளி முறைக்கு மாற்றாக இடமிருந்து வலப்பக்கமாக எழுதும் முறையை இக்குறியீடுகள் கொண்டுள்ளன என்பதை எழுதுவதற்குக் கொடுக்கப்பட்ட அழுத்தத்தை அடிப்படையாகக் கொண்டும் பிராமி எழுத்துகளோடு உள்ள உறவினை அடிப்படையாகக் கொண்டும் விளக்குகிறார். பாறை ஓவியங்களில் கிடைத்துள்ள ஏணி வடிவில் அமைந்த குறியீட்டுக்குக் கேரளப் பேராசிரியர் அஜீத் குமார் அளிக்கும் விளக்கமான இவ்வேணிச்சின்னம் மரணத்தோடு தொடர்புடையது எனவும், ஆன்மா சொர்க்கத்தை நோக்கி மேல் செல்வதற்கு உதவும் அடையாளச் சின்னமாக இக்குறியீட்டைப் பயன்படுத்தியுள்ளனர் என்பதையும் பயன்படுத்துகிறார். ஒரு குறியீட்டுத் தொகுப்பில் எப்பொழுதும் முதலில் மட்டுமே வரும் குறியீடுகள், இறுதியில் மட்டுமே வரும் குறியீடுகள், வெவ்வேறு ஊடகங்களில் இடம்பெற்றுள்ள குறியீடுகள், பல்வேறு பண்பாட்டுக் காலங்களில் தொடர்ச்சியாகப் பயணப்படும் குறியீடுகள் எனக் குவியல்களாகக் கிடைக்கும் குறியீடுகளை வகைதொகைப்படுத்தி அறிவுத் தோற்றவியல் ஆய்வுக்கு வழிகாட்டிச்செல்கிறார்.

உண்மையான பொருளை அறியும் வரையில் ஒரு கலைப்படைப்புக்கு நிகரான கருத்தியல் பரிமாற்றத்தை இக்குறியீடுகள் வழங்குகின்றன.

இந்நூலில் உள்ள மற்றொரு முதன்மையான பகுதி தமிழ்-பிராமி குறித்த ஆய்வு. கீழடி அகழாய்வில் கிடைத்துள்ள குறியீடுகள் மற்றும் தமிழ்-பிராமி குறித்த எண்ணிக்கை அட்டவணை துல்லியமாக இதுவரை கிடைக்கப்பெறாத நிலையில் கொடுமணல் அகழாய்வின் மட்பாண்டங்களில் கிடைத்த தமிழ்- பிராமி எழுத்துப் பொறிப்புகளே மிகுதி. இந்நூலில் 551 பானையோடுகளில் இடம்பெற்றுள்ள தமிழ்- பிராமியின் தன்மையை விரிவான ஆய்வுக்கு உட்படுத்துகிறார் பேராசிரியர். இந்தியாவில் எந்தப்பகுதியில் இருந்தும் இதுவரை இத்தகைய எண்ணிக்கையிலான பிராமி எழுத்துப் பொறிப்புப் பெற்ற மட்பாண்டங்கள் கிடைக்கவில்லை என்பதையும் இங்கு நினைவில் கொள்ளவேண்டும் (ப. 307) என்று கூறுகிறார். இது பண்டைய தமிழ்ச் சமூகத்தின் கல்வி நிலையைத் தெளிவாகக் காட்டுகிறது. பானை ஓடுகளில் கிடைத்த எழுத்துப் பொறிப்புகள் அனைத்தும் ஆட்பெயர்களாகவே உள்ளன. குகைக் கல்வெட்டுகளில் உள்ள தமிழ்- பிராமியிலிருந்து சில வேறுபாடுகளையும் இப்பானை ஓடுகளில் உள்ள தமிழ் – பிராமி கொண்டுள்ளன. குறிப்பாகக் குகைக்கல்வெட்டுகளில் காணப்படும் சமய அடையாளங்கள் எவையும் இப்பானை ஓடுகளில் இல்லை. குகைக் கல்வெட்டுகளில் தமிழல்லாத இரண்டே பிராகிருத எழுத்துகள் மட்டும் இடம்பெற்றிருக்க பானை ஓடுகளில் பதினோரு பிராகிருத எழுத்துகள் இடம்பெற்றுள்ளன. இவையும் பிராகிருதப் பெயர்கள் வரும் இடங்களிலேயே அமைந்துள்ளன. வினைச்சொற்கள் மற்றும் இடப்பெயர்களில் பிராகிருதத் தாக்கம் இருப்பதற்கான சான்றுகள் இல்லை என்பதும் நமது கவனத்தை ஈர்க்கக்கூடிய முதன்மையான தகவலாகும். பழந்தமிழ் இலக்கியங்களான பாட்டும் தொகையிலும் 2% வினைச்சொற்கள் மட்டுமே பிற மொழிச் சொற்களாக அமைந்திருப்பதையும் நாம் கவனத்தில் கொள்ளவேண்டும். உயிர் எழுத்துகளில் ஐ, ஔ ஆகிய இரண்டு வடிவங்களும் இப்பானை ஓடுகளில் காணப்படவில்லை. ஆனால் இவை கூட்டொலிகளாக (அய், அவ்) இடம்பெற்றுள்ளன. உயிர் எழுத்துகளில் நெடில் எழுத்துகளுக்கும் குறில் எழுத்துகளுக்குமான வேறுபட்ட வடிவங்கள் காணப்படாமல் உள்ளன. மெய்யெழுத்தின் அனைத்து வடிவங்களும் காணப்பட உயிர் எழுத்தின் அடிப்படை வடிவங்கள் மட்டுமே இடம்பெற காரணம் என்ன? குறில் நெடிலை இடம் நோக்கி அமைத்துக்கொண்டாலும் அடிப்படை உயிர் எழுத்துகள் பத்து என்பதாகவே அமைந்துள்ளன. தமிழ் எழுத்தியலின் கால வளர்ச்சியைப் புரிந்துகொள்ள இந்த ஆவணங்கள் முதன்மையாகின்றன.

குறியீடுகளையும் தமிழ்-பிராமி எழுத்துகளையும் இணைத்து ஆராயும் பேராசிரியர் கா. ராஜன், குறியீடுகள் தமிழ்-பிராமி எழுத்துகள் பயன்பாட்டிற்கு வருவதற்கு முன்பும், தமிழ்-பிராமி பயன்பாட்டிற்கு வந்த பின்பும், ஆகிய இரு பண்பாட்டு நிலைகளிலும் கிடைத்துள்ளன. சுவாரசியமாகத், தமிழ்- பிராமி எழுத்துகள் பயன்பாட்டிற்கு வந்த பின் குறியீடுகள் கிடைக்கும் எண்ணிக்கையின் அளவு குறைந்துகொண்டே போகின்றன. இந்நிலை அக்காலச் சமூகம் குறியீடுகளின் பயன்பாட்டிலிருந்து தமிழ்-பிராமிக்கு நகர்ந்து சென்றிருக்கக்கூடும் என்பதை உணர்த்துகிறது (ப. 109) என்று குறிப்பிடுவதையும் நோக்கும் பொழுது இக்குறியீடுகள் வாசிக்கப்பட்டு பொருள் அறியும் பொழுது தமிழ்-பிராமியின் காலத்தை பொ. ஆ. மு. 6 ஆம் நூற்றாண்டுக்கு முன்னகர்த்தியதை விடவும் கூடுதலாக முன்னகர்த்தவேண்டிய சூழல் இயல்பாக வாய்க்கும்.

கொடுமணலில் கிடைத்த இப்பொறிப்புகளை ஆவணப்படுத்தி ஆய்வுக்கு உட்படுத்தியது போலவே பிற இடங்களில் நடைபெறும் அகழாய்வுப் பணிகளில் கிடைக்கும் குறியீடுகளையும் எழுத்துப் பொறிப்புகளையும் கவனத்துடன் ஆவணப்படுத்தி ஆராய வேண்டும். இவ்வாய்வுகள் தொடர்ச்சியாக நிகழும் பொழுது சிந்துவெளி குறியீடுகளின் வாசிப்புக்கான திறப்புகள் தமிழ்நாட்டிலிருந்தே கிடைக்கும். அதற்கான முதல்பணியைப் பேராசிரியர் கா. ராஜன் நிகழ்த்தியுள்ளார். கடினமான இப்பணியைச் செம்மையாகத் தொடங்கிவைத்ததுடன் தமிழ்ச் சமூகம் செய்யவேண்டிய பணிகளின் திசைவழிகளையும் இந்நூலில் காட்டிச் செல்கிறார் பேராசிரியர்.

*பி.கு: தமிழ்நாட்டில் இதுவரை நிகழ்தப்பட்ட அகழாய்வுகளில் கிடைத்துள்ள மட்பாண்டத்தில் பொறிப்புப்பெற்றுள்ள குறியீடுகள் மற்றும் தமிழ்-பிராமி ஆவணங்களை முழுமையாகத் தொகுத்து ஆவணமாக்கும் முயற்சியில் தமிழ்நாடு அரசு ஈடுபட்டுள்ளது. இவைகள் நூல்களாக வெளிவரும் பொழுது இக்குறியீடுகள் குறித்த ஆய்வுமுடிவுகள் மேலும் வலுப்பெறும் என்று எதிர்பார்க்கலாம்.*

●

**கட்டுரையாளர்: இணைப்பேராசிரியர்,**
**உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை**

# சிறுவர் பருவ சிறார் இலக்கியம்

## - ஒரு பார்வை -





**சுகுமாரன்**

முன்பு குழந்தை இலக்கியம் அல்லது சிறுவர் இலக்கியம் என்று அழைக்கப்பட்டதே இப்போது சிறார் இலக்கியம் என்று அழைக்கப்படுகிறது.

சிறார் இலக்கியம் வயது பிரிவுகளை அடிப்படையாகக் கொண்டு படைக்கப்பட வேண்டும் என்ற கருத்து இப்போது கவனத்தில் கொள்ளப்படுகிறது.

அதனடிப்படையில் சிறார் இலக்கியத்தை மழலைப் பருவம் (3-6 வயது), சிறுவர் பருவம் (7-12 வயது), பதின் பருவம் (13-18 வயது) என முப்பெரும் பிரிவுகளாக வகுத்துக் கொள்ளலாம்.

குழந்தை இலக்கிய வரலாறு எழுதிய பூவண்ணனும் குழந்தை இலக்கிய வளர்ச்சி குறித்து கட்டுரைகள் எழுதிய கவிஞர் செல்ல கணபதியும் 7 வயது முதல் 12 வயது வரை உள்ள குழந்தைகளுக்கு எழுதப்பட்டவற்றை சிறுவர் இலக்கியம் என்றே குறிப்பிடுகிறார்கள்.

**"ஏடு தூக்கிப் பள்ளியில்**
**இன்று பயிலும் சிறுவரே!**
**நாடு காக்கும் தவைவராய்**
**நாளை விளங்கப் போகிறார்!"**

என்று குழந்தைக் கவிஞரும் 7 முதல் 12 வயது வரை உள்ள குழந்தைகளையே குறிப்பிடுகிறார்.

தமிழ்ச் சிறார் இலக்கியத்தில் மழலைப் பருவத்தினருக்கும் பதின் பருவத்தினருக்குமான படைப்புகள் குறைவாக உள்ளன என்பது உண்மை. சிறுவர் பாடல்கள், சிறுவர் கதைகள¢, சிறுவர் நாவல், சிறுவர் நாடகம் என்றே அதிகம் எழுதப்படிருக்கின்றன. குழந்தைகள் 7 வயதில் தான் புத்தகத்தை வாசிக்கத் துவங்குகிறார்கள் என்பது ஒரு காரணமாக இருக்கலாம்.

சிறுவர்கள் வாசிக்கும் நுழைவாயிலில் இருப்பதால் அவர்களுக்கு நிறைய இதழ்கள் அவசியம். ஊஞ்சல், பொம்மி, சம்பக், பெரியார் பிஞ்சு தவிர இந்து தமிழ்ப் பத்திரிகையில் இணைப்பாக வரும் மாயாபஜார், தினமலரின் சிறுவர் மலர் ஆகியவை மட்டுமே கண்களில் படுகின்றன.

இதில் "ஊஞ்சல்" பள்ளிக் கல்வித் துறை நடத்தும் மாதமிருமுறை இதழ். 4-5, ஆம் வகுப்பு மாணவர்களுக்காக வருகிறது. ஊஞ்சல் பள்ளியிலும் நூலகத்திலும் கிடைக்கிறது. இருபது ரூபாய் விலையுள்ள தனி இதழ் சந்தா கட்டினால் வீடு தேடியும் வரும்.

"ஊஞ்சல்" இதழ் திறமையான சிறார் எழுத்தாளர்கள் யெஸ்.பாலபாரதி, விஷ்ணுபுரம் சரவணன் ஆகியோரை ஆசிரியர்களாகக் கொண்டு நடத்தப்படுவதால் சிறப்பாக உள்ளது.

சிறுவர்களை ஈ£¢க்கும் வேறுபாடுகளைக் கண்டுபிடி, விடுகதைகள், படக்கதை, மொழி விளையாட்டுகள், மாணவர்கள் வரையும் படங்கள், காகிதக் கலை, குட்டி கதைகள¢ ஆகியவை ஊஞ்சலில் இடம் பெற்றுள்ளன. மாணவர்கள் படைப்புகளும் வரவேற்கப்படுகின்றன.

ஆளுமைகளைப் பற்றிய சிறு கட்டுரைகள், வரலாற்று புகழ்மிக்க ஊர்களைப் பற்றிய செய்திகளும் அறிவு வளர்ச்சிக்கு உதவுகின்றன. தரமான தாளிலும் வண்ணத்திலும் "ஊஞ்சல்" வருவது கூடுதல் சிறப்பு.

அழ.வள்ளியப்பா காலத்துக்குப் பிறகு சிறார்களுக்குப் பாடல்கள் எழுதுபவர்கள் குறைந்து போய் விட்டார்கள் என்பது வெளிப்படை.

பழைய பாடல்களை மட்டுமல்ல, புதிய சிறார் பாடல்களையும் குழந்தைகளுக்கு அறிமுகப்படுத்த வேண்டியது அவசியம்.

சிறார் இலக்கியத்தில் பாடல்களே முதன்மையானவை. குழந்தைகளைக் கவரும் பாடல்களைத் தருபவர்களே முதன்மை இடத்தைப் பெற முடியும்.

"குழந்தைகளின் இயல்புகளான துள்ளல், மகிழ்ச்சி, கற்பனை ஆகியவற்றை பாடல்களே மீட்டெடுக்க முடியும்" என்று நம்புகிறவர் பாவலர் வெற்றிச் செழியன்.

அவர் தந்துள்ள பாடல் நூல்களான மழலையர் மணிப்பாடல்கள், விடுதலைக் கிளிகள், அன்பின் வெற்றி (கதைப் பாடல்கள்) என்ன, என்ன அது என்ன? (விடுகதைப் பாடல்கள்) ஆகியவை கவனத்துக்குரியன. இதில் மழலையர் மணிப்பாடல்கள் ஷிஸிவி தமிழ் பேராயத்தின் அழ.வள்ளியப்பா விருது பெற்றது. இந்நூலில் மழலையர், சிறுவர் ஆகிய இரண்டு பருவத்தினருக்குமான பாடல்கள் உள்ளன.

இத்தொகுப்பிலுள்ள "சுண்டைக்காய், சுண்டைக்காய், சின்னஞ்சிறிய சுண்டைக்காய். நல்லதொரு வேடிக்கைப் பாடல், எங்கள் பாட்டி வருகிறார்" பாடலும் அப்படிப்பட்டதுதான். "விடுகதைப் பாடல்கள்" வித்தியாசமான முயற்சியாகும்.

கவிஞர் விண்மீன் குறுகிய காலத்தில் மூன்று சிறுவர் பாடல்களைத் தந்தவர். வண்ணத்துப்பூச்சி, வான்மலர்கள், எங்க பூமி பசுமை பூமி ஆகியவே அவை.

சொற்களின் வசீகரத்தால் ஒரு குழந்தையை புன்னகை பூக்க வைப்பதும் நெஞ்சில் பதிய வைப்பதும் ஒரு நல்ல பாடலுக்கு அழகு. அந்த அழகு விண்மீனுக்கு வசப்படத் தொடங்கியிருப்பதாக பாவண்ணன் பாராட்டியிருக்கிறார்.

8 முதல் 12 வரிகளுக்குள் விண்மீன் தன் சிறுவர் பாடல்களை எழுதியிருப்பது சிறப்பு.

பொம்மி, பெரியார் பிஞ்சு ஆகிய இதழ்களில் தொடர்ந்து சிறுவர் பாடல்களை எழுதி வருவது குறிப்பிடத்தக்கது.

பாவண்ணனின் யானை சவாரி, மாம்பழம் ஆகிய பாடல் நூல்கள் குழந்தைகளின் உணர்வுகளுக்கு வண்ணம் தீட்டுபவை.

"யானை சவாரி" குழந்தையின் அனுபவத்தை அழகாகச் சொல்லுகிறது. "பெரியப்பாவுக்கு எதுவும் தெரியாது" என்ற பாடல் குழந்தையின் வியப்பை வெளிப்படுத்துகிறது.

கிருங்கை சேதுபதியின் "சிறகு முளைத்த யானை" (குழந்தைப் பாடல்கள்) 2018-ஆம் ஆண்டு பால புரஸ்கார் விருது பெற்றது.

இந்நூலில் தலைப்புகளில் 44 பாடல்கள் உள்ளன. "கேள்வியும் பதிலும்" தலைப்பில் வரும் பாடல்கள் சிறுவர்கள் வாசிக்க சுவையானவை. நூலின் தலைப்பு பாடலான "சிறகு முளைத்த யானை" நல்லதொரு கற்பனை.

சுகுமாரனின் "தங்கச்சிப் பாப்பா" பாடல் நூல் பளபளப்புத் தாளில் வண்ணத்தில் அச்சிட்டு வடிவத்தில் சிறந்து விளங்குகிறது. காக்காவுக்குக் கல்யாணம், பாட்டி கதை, புத்தகம் படி, பாட¢டும் கதையும், மூக்குப் போச்சு, வார்த்தைகள் என 10 பாடல்கள் இசை அமைக்கப்பட்டு அனிமேஷனுடன் வந்துள்ளன. "தங்கச்சிப் பாப்பா" கன்னி முயற்சி. சமீபத்தில் வந்துள்ள ரா.ராணி குணசீலி எழுதிய "ஊர் சுற்றலாம்" சிறுவர் பாடல்கள் நூலும் குருங்குளம் முத்துராஜா எழுதிய "காட்டுக்குள்ளே ஒரு பள்ளிக் கூடம்" சிறுவர் பாடல்கள் நூலும் வரவேற்பைப் பெற்றுள்ளன.

ராணி குணசீலியின் ஒவ்வொரு பாடலிலும் இசை இருப்பதோடு ஒரு பிரியமும் இருக்கிறது, என்கிறார் கல்வியாளர் ச.மாடசாமி. 'வண்டிச் சவாரி' - 'பம்பரம்' ஆகிய பாடல்களை சிறுவர்கள் விரும்பிப் பாடமுடியும்.

குருங்குளம் முத்து ராஜாவின் "காட்டுக்குள்ளே ஒரு பள்ளிக் கூடம்" பாடலில்

**"பள்ளிக் கூட மணி அடிக்க**
**என்ன செய்வது?**
**பக்குவமாக நரியும் வந்து**
**ஊளையிட்டது"**

என்று வரும் வரிகள் சிறுவர்களின் மனதில் அழகான கற்பனையை விரிக்கிறது. "எப்படி இப்படி ஆசை? "பலாப்பழம்" , தட்டான், கத்துக் கொடுங்க, அழகு அணில் குட்டி ஆகிய பாடல்கள் கற்பனையும் அழகும் நிறைந்தவை.

முத்துராஜாவின் பாடல்கள் எளிமை, சந்தம் ஆகிய அம்சங்களில் முழு மதிப்பெண்களைப் பெற்று விடுகின்றன என்று மதிப்பிடுகிறார் எழுத்தாளர் ஆதி வள்ளியப்பன். அது மிகையல்ல.

தமிழில் சிறார் நூல்கள் நிறைய வருகின்றன. அவை சிறார்களால் வாசிக்கப்படுகின்றனவா? என்ற கேள்வி சமூகத்தில் எழுந்தது. கேள்விக்கு சில பதில்கள் கண்பிடிக்கப்பட்டன.

சிறார் நூல்கள் உள்ளடக்கத்திலும் வடிவத்திலும் சிறார்களைக் கவர வேண்டும். சிறார்களின் வயது பிரிவுகளை கணக்கில் கொண்டு எழுதப்பட்டிருக்க வேண்டும் என்று தரப்பட்ட பதில்கள் முக்கியமானவை.

தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் , ஜனவரி 2022 முதல் குழந்தைகளின் படைப்பாற்றலை மேம்படுத்தவும் நன்னெறிக் கல்வியைக் கற்பிக்கவும் அறம்சார் சமூக விழுமியங்களை வளர்த்தெடுக்கவும் இளந்தளிர் இலக்கியத் திட்டத்தில் 100 குழந்தை இலக்கிய நூல்களைக் கொண்டு வர திட்டமிட்டுள்ளது.

முதற்கட்டமாக 59 நூல்கள் வந்துள்ளன. அந்நூல்கள் வயது பிரிவுகளின் அடிப்படையில் வந்துள்ளது பாராட்டத்தக்கது. இவற்றுள் சில நூல்களைப் படிக்கும் வாய்ப்பு பெற்றேன்.

5-8 வயது சிறார்களுக்கான "பாட்டும் தொகையும்" (வெற்றிச் செழியன்) ஜீ.பூம்..பா., என்ன சாப்பிடலாம்? (வெற்றிச் செழியன்) ஆகிய இரண்டும் மூத்தோர் உதவியின்றி படிக்க இயலாதவை.

பெரிய அளவில் வண்ணப்படங்களுடன் தேவையான செய்திகளுடன் இவை உள்ளன.

எனது உரிமைகள் என்ன? (வி.ஷி.பொற்கொடி) என்ற நூலும் கடினமான ஒன்று . வாக்கிய அமைப்புகள் தெளிவாக இல்லை. உள்ளடக்கம் கூட 5-8 வயதிற்குரியது அல்ல. 9-11 வயது சிறார்களுக்கான நூல்களான இயற்கையின் நேயன் பாரி, விதைப்பதே முளைக்கும், தோல்வியும் தவறல்ல, ஐந்து நிலங்கள் ஆகிய 4 நூல்களும் வெற்றிச் செழியன் எழுதியவை.

இயற்கையின் நேயன் பாரி நூல் அச்சு மற்றும் பாக்கள் செய் நேர்த்தி சிறப்பாக உள்ளது.

9-11 வயது சிறுவர்களுக்கானது அல்ல.

ஐந்து நிலங்கள் நூல் மூத்தோர் உதவியுடன் படிக்கக் கூடியது.

தோல்வியும் தவறல்ல, நல்ல கதை 9-11 வயது குழந்தைகளால் படிக்க முடியும்.

"விதைப்பதே முளைக்கும்" திருக்குறள் கதை எழுதப்பட்டதில் ஏதோ குழப்பம் தெரிகிறது.

பேருதவி (கொ.மா.கோதண்டம்) தமிழ்நாடு மாநில விலங்கான வரையாடு பற்றி கதை. நல்ல கருத்தும் அமைந்த கதை.

12-14 வயது சிறார்களுக்கான கதை நூல்களும் வந்துள்ளன. அவற்றுள் 8 நூல்களைப் படித்தேன். பல நூல்கள் சலிப்பூட்டுபவைகளாக உள்ளன. வயது பிரிவுகளின் அடிப்படையில் நூல்கள் வராமல் மாறி மாறி வந்துள்ளன.

சிறார்களை புத்தகங்கள் வாசிக்க வைப்பதற்கான இன்னொரு முயற்சி வாசிப்பு இயக்கம். பள்ளிக்கல்விப் பாதுகாப்பு இயக்கம் முன்னெடுத்த இயக்கத்தை முன்னாள் துணை வேந்தர் வே.வசந்தி தேவியும், கல்வியாளர் ச.மாடசாமியும் வழி நடத்தினர். சென்னையில் மூன்று நாட்கள்

பயிற்சிப் பட்டறை நடந்தது. கதைகள் உருவாயின.

அக்கதைகளைச் சிறார் வாசிப்பு நூலாக "புக்ஸ் ஃபார் சில்ரன்" வெளியிட்டுள்ளது. எளிய மொழி, சிறு சிறு வாக்கியங்கள், படங்களுடன் இச்சிறு புத்தகங்கள் வந்துள்ளன.

ஆந்தையும் மரங் கொத்தியும் (ஈரோடு சர்மிளா), பறக்கும் பூ நாய் (ஞா.கலையரசி), வானில் பறந்த மகிழ் (ஆதி வள்ளியப்பன்), நிலாவின் பொம்மை (ச.முத்துக்குமாரி), ஊசி (சுக. முத்துக்கண்ணன்) ஆகியோர் எழுதிய நூல்களை வாசித்தேன், வாசிப்பு இயக்கத்தின் நோக்கத்தின் வடிவமாக இந்நூல்கள் அமைந்துள்ளன. வண்ணப்படங்களுடன் வெளிவந்துள்ள இச்சிறு நூலின் விலை ரூ.20 தான்.

சிறுவர் வயதிற்கான கதைகளை விழியன் எழுதியிருக்கிறார். "யாச்சியின் குமிழி ஆசைÕ, "பம்பம் டோலேய்" ஆகிய சிறுகதை நூல்களை பெரியார் பிஞ்சு வண்ணப் படங்களுடன் வெளியிட்டுள்ளது. அதென்ன "கியாங்கி டுயாங்கி" தலைப்பு மட்டுமல்ல கதைகளும் வேடிக்கையானவைதான்.

ஞா.கலையரசியின் "மந்திரக் குடை" சிறுவர் நாவல் (32 பக்கங்கள்) எளிய நடையில் எழுதப்பட்டுள்ளது. மந்திரக்குடை மூலம் காட்டுக்குள் சென்ற தேவி பெறும் அனுபவங்களை நாவல் சொல்லுகிறது.

சுகுமாரன் எழுதிய வண்டு குண்டு (சிறுகதைகள்) எளியநடை, விரும்பிப்படிக்கும் கதை ஓட்டத்துடன் அமைந்துள்ளன. இத்தொகுப்பில் 18 கதைகள் உள்ளன.

'வித்தைக்கார சிறுமி', "வானத்துடன் டூÕஆகிய இரண்டு சிறுவர் கதைத் தொகுப்புகள் விஷ்ணுபுரம் சரவணன் எழுதியவை. எளிமை, இனிமை நிறைந்த கதைகள¢.

கவிஞர் விண்மீன் எழுதிய "பெட்டி பொம்மை" சிறுவர்களுக்கேற்ற கதைகளைக் கொண்ட தொகுப்பு.

கன்னிக் கோவில் இராஜா சிறுவர்களுக்காக பாடல்களையும் கதைகளையும் நிறைய எழுதியவர். "பட்டாம் பூச்சி தேவதை" கதைகளில் விலங்குகளும் பறவைகளும் பாத்திரங்கள். "ஏழு வண்ண யானை" அருமையான கற்பனைக் கதை சிறுவர்களைச் சிந்திக்க வைக்கும்.

"அம்மா மனதிலிருந்து ஒரு புத்தகம்" (13 கதைகள¢) ரஜினி பெத்து ராஜா எழுதியது. புத்தக வாசிப்பில் ஈடுபாடு காட்டும் ஒரு சிறுமியின் கதை.'ராஜா-ராணி" கதையும் வித்தியாசமான வாழ்க்கைப் பார்வையை சொல்லித்தரும் கதை.

'வால் முளைத்த பட்டம்" கி.அமுதாசெல்வி எழுதிய கதைகள், சின்னச் சின்ன ஆசைகளையும் ஏக்கங்களையும் பேசுகின்றன என்கிறார் கல கல வகுப்பறை சிவா.

இராசகுரு கார் பாலன் எழுதிய "பரி சொன்னால் சரி" கதைத் தொகுப்பில் குட்டி குதிரையை மையப்படுத்திச் சொல்லும் கதை சிறப்பு.

காரை.இரா.மேகலா, பள்ளிக் குழந்தைகளின் ஆர்வங்களை "நாய்க்குட்டிப்பட்டாளம்" தொகுப்பில் கதையாக்கியிருக்கிறார்.

வ.விஜயலட்சுமி எழுதிய "வாலைத் தேடிய பல்லி" தொகுப்பில் 10 சுவையான கதைகள் உள்ளன என்கிறார் தேவி நாச்சியப்பன்.

சரிதா ஜோ சிறார் இலக்கிய உலகிற்கு பாய்ச்சலோடு வந்திருப்பவர். கிளியோடு பறந்த ரோகிணி, சாணி வண்டும் பட்டாம் பூச்சியும், போன்சாய் மரம் ஆகியவை சிறுவர்களுக்கான கதைத் தொகுப்புகளாகும். காடறிதல் நிகழ்ச்சியை நடத்தும் கோவை சதாசிவத்தோடு பயணிக்கிற கதை வாசனை வித்தியாசமானது. கிளியாக மாறிய ரோகிணி எளிய உயிர்களின் கஷ்டங்களைத் தெரிந்து கொள்கிறாள். இவ்வாறு வித்தியாசமான கற்பனைகளைச் சொல்லும் கதைகளும் இருக்கின்றன. கருத்துகள் திணிக்கப்பட்டு திணறும் கதைகளும் இருக்கின்றன.

சிறுவர்களுக்கு ஏற்ற நாவல் "ரோஸியும் வெளச்ளையம்மாளும்Q எளிமையாக, நேரிடையாக சொல்லப்படும் கதை. ரோஸி என்பது நாய், வெளச்ளையம்மாள் என்பது பூனை. விலங்குகளிடம் பெண் என்றால் ஒதுக்கும் குணம் மனிதர்களிடம் இருப்பதை சுட்டிக்காட்டும் கதை.

கார்த்திகா முகுந்த் எழுதிய "குட்டி யானைக்கு பச்சைத் தொப்பி" இயற்கையின் செயல்பாடுகளுக்கு இயல்புகளுக்கு செயற்கையான காரணங்களை கற்பனையாகச் சொல்லும் கதைகளைக் கொண்டது. "உயிர்மை" வெளியீடாக வந்துள்ளது.

ஜி.மீனாட்சி "மல்லிகாவின் வீடு" என்ற சிறுவர் நூலுக்காக பால புரஸ்கார் விருது பெற்றவர். விமர்சனங்களை சந்தித்தவர். "பரிசலில் ஒரு பயணம்" நீண்ட சிறுகதைகளைக் கொண்டது.

தேவி நாச்சியப்பன், குழந்தைக் கவிஞரின் மகள், பால புரஸ்கார் விருது பெற்றவர். "பனிலிங்கமும் படைவீரரும்" நூலிலுள்ள கதைகள் பள்ளிக் குழந்தைகளின் அறிவு வளர்ச்சிக்கும் பண்பு வளர்ச்சிக்கும் உதவுபவை.

"ஒல்லி மல்லி குண்டு கில்லி" மு.முருகேஷ் எழுதியது. "அம்மாவுக்கு மகள் சொன்ன உலகின் முதல் கதை" நூலுக்காக பால புரஸ்கார் விருது பெற்றவர். ஒல்லியான யானை, குண்டான ஒட்டகம் இவைகளைப் பாத்திரங்களாக்கி செயற்கையாக செய்யப்படும் நொறுக்குத்தீனிகள் தின்பதின் தீமைகளைப் பற்றிய கதையை ஆசிரியர் சொல்லி இருக்கிறார்.

இப்படிக்குத் திருடன், பூம் பூம், பயமா எனக்கா? ஆகிய சிறுவர் கதைத் தொகுப்புகளை துரை ஆனந்தகுமார் தந்திருக்கிறார். "ஊசி எலியும் ஆணி எலியும்Q "காடனும் வேடனும்" ஆகிய சிறுவர் நூல்களை "பூவிதழ் உமேஷ்" தந்திருக்கிறார்.

"பெரியார் பிஞ்சு" வெளியீடாக வந்துள்ள "சொர்க்கத்துக்கு ஒரு சீட்டு" கதைத் தொகுப்பு மு.கலைவாணன் எழுதியது. சிறப்பான முயற்சி.

நீர் இன்றி, அன்புள்ள குழந்தைகளுக்கு யார் வந்தது? சிறிய வடிவத்தில் வந்துள்ள சிந்தனை நூல்களும் சிறுவர்களைக் கவரக் கூடியது.

"பேசும் தாடி" உதயசங்கர் எழுதிய சிறுவர் நாவல். இயற்கையோடு இயற்கையாக இணைந்து பறவைகளும் விலங்குகளும் வாழ்கின்றன. அவ்வாறு மனிதர்களும் வாழ வேண்டிய அவசியத்தை மாயா ஜாலத்துடன் பேசுகிறது.

"எனக்கு பிடித்த கலரு" பஞ்சு மிட்டாய் பிரபு எழுதிய சிறுவர் நாவல். மண்ணுலகிலிருந்து வண்ணங்கள் யாவும் காணாமல் போகிறது. அவற்றைத் தேடி வண்ணங்களின் மாயாஜால உலகிற்கு வனிதா பயணிக்கிறாள். அவளது சாகச பயணம்தான் இந்தக் கதை.

சிறுவர்களுக்குத் தோன்றும் கற்பனைகளை சிறுவர்களுக்குப் புரியும் மொழியில் சிறுவர்கள் தான் எழுத முடியும்.

2021-22 ஆம் ஆண்டுகளில் கொரோனா முடக்க நேரத்தில் ரமணி எழுதிய யாருக்குத் தைக்கத் தெரியும்? ரமணா எழுதிய சிம்பாவின் சுற்றுலா, மீனா எழுதிய வெளச்ளைப்பூக்கள், எஸ். அபிநயா எழுதிய புலிப்பல்லும் நரிக் கொம்பும், 60 சிறுவர்கள் எழுதிய கோலிக் குண்டு, (சிறுவர் பாடல் தொகுப்பு) தீப்சிகாவின் "வானவில்" பாடல்கள், கடலோரக் கிராமத்துக் குழந்தைகள் எழுதிய "மீனு...மீனு... சாளை மீனு" (கதைத் தொகுப்பு : ரா.பி.சகேஷ் சந்தியா) ஆகிய படைப்புகள் இப்போதும் மறக்க முடியாதவை, மதிப்பிற்குரியவை.

சிறுவர்கள் எவ்வளவு எளிமையாக கதை சொல்லியிருக்கிறார்கள். யாருக்கும் புத்திமதி சொல்லவில்லை.

பொது முடக்க காலத்தில் எழுதிய இவர்களின் பேனாக்கள் இப்போது படிப்பிற்காக முடங்கிவிட்டன. அவர்களுடைய படைப்பாற்றல் மங்கிப் போய் விடக்கூடாது என்பதே நம் கவலை.

சிறுவர் இலக்கியத்தின் நோக்கம் சிறுவர்களை வாசிப்பு உலகத்திற்குள் கொண்டு வருவது தான். அவர்களுக்காக எழுதப்படும் வரிகளில் இனிமை இருக்க வேண்டும். எளிமை இருக்க வேண்டும். வெறும் செய்திகள், அறிவுரைகள் வாசிப்பு இன்பம் தராது. படைப்பு பணியாரமாக இருக்க வேண்டும். பல்லுக்கேற்ற பதத்தில் இருக்க வேண்டும்.

மழலைப் பருவத்திலிருந்து நகர்ந்து வந்திருப்பவர்கள் சிறுவர்கள் மழலை மணம் மாறாதவர்கள். அவர்களை ஐந்தில்தான் விளைவிக்க வேண்டுமென்று நினைத்து "கருத்து" சம்மட்டிகளால் தாக்கிவிடக் கூடாது.

ஒரு கதை ஒரு புத்தகம், வாசிப்பு இயக்கம், வயது பிரிவுகளை அடிப்படையாகக் கொண்டு எழுதுவது, நிறைய பெண் சிறார் எழுத்தாளர்களின் பங்களிப்பு ஆகியவை தமிழ்ச்சிறார் இலக்கியம் நம்பிக்கையான திசையில் பயணிக்கிறது என்பதை உணர்த்துகிறது.

●

**கட்டுரையாளர்: சிறார் எழுத்தாளர்**


திறனாய்வு

# மனித உறவுகளை வளர்க்கும் உணர்வுப் பெட்டகம்.

தமிழ் நாட்டில் ஆன்மிக அடையாளத்தைக் கடந்து மொழி, சமுதாயப் பணிகளில் ஈடுபட்டு வெற்றி கண்டவர் தவத்திரு குன்றக்குடி அடிகளார். அவரின் நூற்றாண்டு இது. தற்போது அவரின் அடிச்சுவட்டில் குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் செம்மையுறப் பணியாற்றி வருகிறார்.

குன்றக்குடி திருவண்ணாமலை ஆதினத்தின் 46வது குருமகாசந்நிதானமாகப் பொறுப்பேற்றுள்ள தவத்திரு பொன்னம்பல அடிகளார் சிறந்த எழுத்தாளர், பேச்சாளர், சிந்தனையாளர். சமூக நிகழ்வுகளில் தம்மை இணைத்துக் கொண்டு மக்கள் நலப் பணியாற்றுபவர். இனியவர்; எளியவர்; அறிவியல் பயின்று, ஆன்மீகம் பழகி, மனிதம் விதைத்திடும் தமிழ் மாமுனிவராக வலம் வருபவர். அவரின் மணிவிழா ஆண்டு இது. மதுரை வானொலி நிலையத்தில் நாள்தோறும் இவர் காலை நேரத்தில் வழங்கிய கருத்துரைகள் ‘மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்’ எனும் தலைப்பில் நூலாக வெளிவந்துள்ளது.

இன்று போல் கேள்வி – காட்சி ஊடகங்கள், சமூக ஊடகங்கள் வளர்ச்சி பெறாத காலத்தில், வானொலிதான் செய்தி அறியும், பொழுது போக்கும் வெகுமக்கள் ஊடகமாகத் திகழ்ந்தது. இன்றும் கூட உழைப்பாளர்களின் விருப்பமிகு ஊடகமாகப் ‘பண்பலை’ வானொலிகளே விளங்குகின்றன. அந்தவகையில் மக்களால் அதிகம் விரும்பிக் கேட்கப்படும் நேரத்தில் ஒலிப்பரப்பானச் சிற்றுரைகளின் தொகுப்பு இது. 2021 ஆம் ஆண்டு உழைப்பாளர் தினத்தில் தொடங்கிய இந்த உரைப் பொழிவிலிருந்து ‘அறுபது’ கருத்துரைகள் நூலாக்கம் பெற்றுள்ளன.தவத்திரு அடிகளார் எழுதுவது போலவே பேசக்கூடியவர். இதை வாசிக்கும் போது அவரே நம் முன் பேசுவதுபோல் இருப்பதை உணரமுடியும். இந்தப்பணி நுட்பமானது. சிக்கலானது. குறிப்பிட்ட ஒரு சில நிமிடங்களுக்குள் சொல்ல வேண்டியக் கருத்தைச் சொல்ல வேண்டும். சுவைபடவும் சொல்ல வேண்டும். இதில் அடிகளார் வெற்றி பெறுகிறார்.




மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் /
தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் /
என். சி. பி. ஹெச் வெளியீடு / ரூ190/-



பேராசிரியர் இரா.காமராசு

மேடைப் பேச்சில் இன்று நிறைய மாற்றங்கள். அடுக்குமொழி, உரத்தக்குரல், வர்ணனை, வியக்க வைக்கும் கர்ஜனை... என்பதெல்லாம் இன்று மக்களால் விரும்பப் படுவதில்லை. அவசர உலகம். இரைச்சல்களின் வெளி. அமைதியாக, இதயத்தைத் தொடுவது மாதிரி காதலன் –காதலிக்குச் செய்தி சொல்வதுபோல் பேசுவதே வரவேற்கப் படுகிறது. சொற்களின் தெறிப்புகளாக இல்லாமல் சிந்தனைத்துளிகளை நிகழ்வுக் காட்சிகளாகச் சொல்வதையே பெரிதும் விரும்புகின்றனர். எளிய நேர் பேச்சுப் போல மேடைப்பேச்சு அமைந்தால் இன்பம். இயல்பிலேயே அடிகளாரிடம் இந்தத் தன்மை அமைந்திருக்கக் காணலாம். புன்முறுவலுடன் (இனிய சொற்களால்) கசப்பு மருந்தைக்கூடிய சுவைபட மொழியும் வல்லமை மிக்கவர்.

இந்தத் தொகுப்பு தமிழ் மேடைப் பேச்சின் இன்றைய போக்கின் 'ஒரு சோற்றுப் பதமாகவும்' அமைந்து விடுகிறது. திருக்குறள், தேவாரம், திருவாசகம், குரான், அறிஞர்களின் மேற்கோள்கள் என ஆங்காங்கே மிகப் பொருத்தமாக இணைத்துவிடுகிறார். சிலவற்றில் நகைச்சுவை உண்டு. 'பஞ்ச்' என்பது போல மனதில் 'தைக்கும்' தன்மைகளும் உண்டு. இவர் உரைகளின் தனிச்சிறப்பு 'குறுங்கதைகள்,' மிக நேர்த்தியாக பாட்டி பேரனுக்குச் சொல்வது போல மக்களுக்கு எளிமையாகச் சொல்லி விடுகிறார்.

'உழைக்கும் மக்களின் உன்னதத் திருநாள்' எனும் முதல் பதிவு உழைப்பாளர் நாளைக் குறித்து அமைந்துள்ளது. 1886 மே ஒன்றாம் தேதி அமெரிக்காவின் சிகாகோ நகரில் 'எட்டுமணி நேர வேலை' என்பதை வலியுறுத்தி நடைபெற்ற வீரஞ்செறிந்தப் போராட்டத்தை உணர்வுப் பூர்வமாகச் சொல்கிறார். போராட்டத்தில் தலைமை தாங்கி மரண தண்டனைப் பெற்ற ஆல்பர்ட் பார்ஸன், ஜார்ஜ் ஏங்கல், ஆகஸ்ட் ஸ்பைஸ், அடொல்ஃப் ஃபிஷர் ஆகியோரைப் பற்றிக் குறிப்பிடுகிறார்.

அன்றைய உழைப்பாளின் தேவை எவையென, ஜார்ஜ் ஏங்கல் சுட்டுகிறார்; "இன்றைக்கு தொழிலாளர்களுக்கு என்ன தேவை? வேலை, ரொட்டி, அமைதி. இவை மூன்றுதான். இவை கூட இவர்களுக்கு உத்தரவாதப்படுத்தப்படவில்லையே." (ப. 23) அதேபோல பிரிதொரு இடத்தில் உழைப்பு பற்றிப் பேசும்போது நபிகள் நாயகம் கூறும், "உழைத்துக் காய்த்துப் போன இந்தக் கரங்களிலே தான் நான் இறையருளைக் காண்கிறேன்" என்பதைக் கூறுகிறார் (ப. 25) கோயில்கள் சமுதாயத்தில் எப்படி இருந்தன என்பதை இப்படிச் சுட்டுகிறார்." மனித சமூகம் கூடிக் கலந்து வாழுகிற உறைவிடம் அது. மக்களாட்சித் தத்துவத்தைக் கற்றுத்தந்த இடம் திருக்கோயில் வளாகம். கல்வி கற்றுத் தருகிற மையங்கள் திருக்கோவில் வளாகம். இயல், இசை, நாடகம் என்ற முக்கலையும் வளர்த்த இடம் திருக்கோயில் வளாகம். நீதி வழங்குகிற சபைகள் திருக்கோயில்களிலேயே இருந்தன." (ப. 28)

அன்பு, நட்பு, கல்வி, நன்றி மறவாமை, மனித உறவுகளைச் சரியாகப் பேணுதல் முதலியவற்றை பல உரைப்பதிவுகளில் வலியுறுத்துகிறார்.

"உள்ளே வருகிற காற்றை வெளியே அனுப்புகிற புல்லாங்குழல் வழி, அந்தக் காற்று இனிய கீதமாக மாறுகிறது; புல்லாங்குழலில் இசை இனிய கீதமாக எல்லோருக்கும் மகிழ்வைத் தருகிறது. ஆனால், காற்றைச் சிறைப்படுத்தி வைத்திருக்கிற தோலாலான பந்து எல்லோரது கால்களிலும் உதைபடுகிறது. நாம் புல்லாங்குழலைப் போல் இனிய இசையால் மற்றவர்களை மகிழ்விக்க இருக்கிறோமா? அல்லது பந்தைப் போல் பிறர் காலில் உதைபடப் போகிறோமா? நாம் தான் தீர்மானிக்க வேண்டும்" (ப.51)

அடிகளாரின் இந்த உரைகளில் முத்தாய்ப்பாய் பல இடங்களில் தெறிக்கும் சிந்தனைத் துளிகள் மக்கள் பின்பற்றத் தக்கன. "தனக்குக் கிடைக்காதது எல்லோருக்கும் கிடைக்க வேண்டும் என்பதுதான் உண்மையான தலைமைப்பண்பு. தான் பெறாததை எல்லோரும் பெற வேண்டும் என்பதுதான் உண்மையான தலைமைப் பண்பு" (ப. 57)

"கற்பதற்கும் வாழ்க்கையில் செயலாக மாறுவதற்கும் இருக்கிறது முரண்பாடு" (ப. 99)

"அன்புக்காக ஏங்கித் தவிக்கிற குழந்தைகளிடம் அக்கறை காட்ட வேண்டியது பெற்றோர்களின் கடமை" (ப. 126)

"மனிதன் கால்களால் மட்டும் நடப்பவனல்ல; கருத்துகளால் நடக்க வேண்டியவன்; சிந்தனையால் நடக்க வேண்டியவன்." (ப. 134)

அடிகளார் இன்றைய மக்களின் வாழ்வியலை நுட்பமாக உள்வாங்கி அவற்றில் உள்ள பிழைகளை, போதாமைகளைப் போக்கிட விழைகிறார். கணவன் – மனைவி, பிள்ளை – பெற்றோர், நண்பர்கள், சமுதாயம், ஆன்மீகம், கல்வி ஆகிய எல்லாவற்றிலும் அல்லன ஒதுக்கி நல்லன காண ஆற்றுப்படுத்துகிறார்.

பின்பற்றத் தக்கவைகளை அழுத்தமாகக் கவனப்படுத்துகிறார். அன்பை, நேயத்தை விதைக்கிறார். மனித உறவுச் சிக்கல் செடுக்குகளைக் களைய முனைகிறார்.

குறைந்த நேரத்தில் வாசித்து விடக்கூடிய, எளிமையாக எல்லோரும் உள்வாங்கக் கூடிய குறுங்கருத்துரைகளின் தொகுப்பு இந்நூல் பரவலான வாசிப்புக்கு உதவும்.

●

**கட்டுரையாளர்: தலைவர், நாட்டுப்புறவியல் துறை,**
**தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்**



## தமிழ்ஒளி யார்?

தொழிலாளர்களின் துயர வாழ்க்கையை
நீக்கிடப் பெரிய நீண்ட போராட்டம்
தொடங்கிடச் சங்கம் துணிந்திடும்போதில்
ஏ, செந்தமிழா! என்னுயிர் சோதரா!
நீ யார் பக்கம் நின்றிட வேண்டும்?
கொள்ளையடித்திடும் கொடியவர் பக்கமா?
துன்புழுற்றிடும் தொழிலாளர் பக்கமா?

..................................................

..................................................

உன்னுடைய கடமையை உதறித் தள்ள
எண்ணிட வேண்டாம்! இப்பொழுதே நீ
எவர் பக்கம்? என்றியம்பிடுவாயே!

(தமிழ்ஒளி - 1948)

தமிழ்ஒளி எனும் கவிஞர் யார்? என்பதை மேலே உள்ள அவரது கவிதை வரிகள் சொல்லுகின்றன. உழைக்கும் மக்களுக்காகக் கவி பாடிய உழைக்கும் வர்க்கத்தில் பிறந்தவர். அவருக்கு இப்போது நூற்றாண்டு. இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்க் கவிதை வரலாற்று மரபு மூன்று கவிஞர்களை முதன்மையாகக் கொண்டது. தேசியம் பாடிய மகாகவி பாரதி, சுயமரியாதை இயக்கத்தின் பகுத்தறிவு மரபைப் பாடிய பாவேந்தர் பாரதிதாசன், மார்க்சியக் கருத்துநிலை சார்ந்து பாடிய கவிஞர் தமிழ்ஒளி. தமிழ்ச் சமூகத்தில் உருவான இம்மூன்று மரபுகளின் அடையாளங்களாக இவர்கள் அமைகிறார்கள்.

இப்போது தமிழ்ஒளியின் நூற்றாண்டு. இந்தத் தருணத்தில் தமிழ்ஒளியைக் கொண்டாட வேண்டும். அதன் அடையாளமாகவே அவரின் முழு ஆக்கங்களையும் என்.சி.பி.எச் மூலமாகப் பதிப்பித்துக் கொண்டு வருகிறோம்.

## தோழர் தமிழ்ஒளி ஆக்கங்கள்
## ஆறு தொகுதிகள்

### தொகுதி-1 : தோழர் தமிழ்ஒளி கவிதைகள்

தமிழ்ஒளியின் அனைத்துக் கவிதைகளையும் முதன் முறையாகப் பதிப்பித்துள்ளோம். இந்தியக் கம்யூனிஸ்ட்கட்சி தடைசெய்யப்பட்டபோது கட்சி தலைமறைவாக செயல்பட்டது. அப்போது (1948 - 1952) வெளிவந்த கட்சியின் வார இதழான 'முன்னணி'யில் தமிழ்ஒளி ஆசிரியர் குழுவில் செயல்பட்டார். அந்த இதழில் நிறைய எழுதினார். தமிழ்ஒளிதான் பாரதிதாசன் மரபில் கவிதைகளை எழுதிய இடதுசாரிக் கவிஞர். இவ்வகையில் தமிழ்ஒளியின் 128 கவிதைகள் இடம்பெற்றுள்ள தொகுப்பு இது.

### தொகுதி-2: தோழர் தமிழ்ஒளி காவியங்கள்
(பகுதி ஒன்று)

இருபதாம் நூற்றாண்டில் உருவான தமிழ்க்காவியங்களில், தமிழ்ஒளியின் காவியங்களுக்குத் தனித்த இடமுண்டு. உழைக்கும் மக்களைப் பாத்திரங்களாகக் கொண்ட காவியங்களை 1947-1952 காலங்களில் எழுதினார். அவ்வாறு எழுதிய 'நிலைபெற்ற சிலை', 'வீராயி', 'கவிஞனின் காதல்', 'விதியோ? வீணையோ?', 'புத்தர் பிறந்தார்' முதலியன இத்தொகுதியில் இடம்பெற்றுள்ளன.

### தொகுதி-3: தோழர் தமிழ்ஒளி காவியங்கள்
(பகுதி இரண்டு)

'கோசலைக்குமரி', 'கண்ணப்பர் கிளிகள்', 'மாதவி காவியம்' முதலிய காவியங்கள் இத்தொகுதியில் இடம்பெற்றுள்ளன. அறிஞர் ராகுல சாங்கிருத்தியாயனின் 'வால்காவிலிருந்து கங்கை வரை' என்ற நாவலில் படைத்துள்ள 'பிரபா' என்னும் பாத்திரத்தை அடிப்படையாகக் கொண்டு 'கோசலைக்குமரி' என்ற காப்பியத்தை எழுதியுள்ளார். 'புத்தர் பிறந்தார்' என்ற காவியம் முற்றுப் பெறவில்லை. கவிஞர் தமிழ்ஒளி சிலப்பதிகாரம் குறித்த விரிவான ஆய்வை மேற்கொண்டவர். சிலப்பதிகாரத்தை அடிப்படையாகக் கொண்டு எழுதிய இரண்டு காவியங்களில் மாதவி காவியத்திற்குத் தனித்த இடமுண்டு.

### தொகுதி-4: தோழர் தமிழ்ஒளி சிறார் ஆக்கங்கள்
(பாடல்கள் - கதைகள்)

நவீனத் தமிழ் இலக்கிய மரபில் சிறார்களுக்கான இலக்கியம் படைக்கும் மரபு 1940 முதல் வளமாக உருவானது. இடதுசாரிக் கண்ணோட்டத்துடன் இவ்வகையான இலக்கியங்களை விந்தன், தமிழ்ஒளி ஆகியோர் படைத்துள்ளனர். அந்த வகையில் தமிழ்ஒளி சிறார்களுக்காகப் பாடிய 'பாப்பா பாடல்கள்' கணிசமானவை. அவர் 'குட்டிக் கதை'களையும் எழுதினார். கதைகளுக்கு 'அறிவூட்டும் நூறு அற்புதக் கதைகள்' எனப் பெயரிட்டார். தமிழ்ஒளி வாழ்ந்த காலத்திலேயே வெளிவந்த இந்த ஆக்கங்கள், பின்னர் முறையாக வெளியிடப்படவில்லை. இந்தப் பதிப்பில் பாடல்களையும் கதைகளையும் முறைப்படுத்திப் பதிப்பித்துள்ளோம்.

### தொகுதி-5: தோழர் தமிழ்ஒளி புனைவுகள்
(சிறுகதைகள் - ஓரங்க நாடகங்கள்)

இடதுசாரி இயக்க மரபு சார்ந்த சிறுகதை எழுத்தாளர்கள் குறித்துப் பதிவு முறையாக செய்யப்படவில்லை. 1937 காலங்களில் வெளிவந்த 'ஜனசக்தி' இதழில் சிறுகதைகள் எழுதப்பட்டுள்ளன. இந்த மரபில் 'முன்னணி' இதழில் தமிழ்ஒளி சிறுகதைகளை எழுதினார். பின்னர் 'மனிதன்', 'சாந்தி', 'சரஸ்வதி' ஆகிய இதழ்களில் சிறுகதைகளை எழுதினார். தமிழ்ஒளி சிறுகதைகள், புதுமைப்பித்தன், கு.அழகிரிசாமி, விந்தன் மரபில் உருவானவை. இந்த மரபை ஜெயகாந்தன் வளப்படுத்தினார். இவ்வகையில் தமிழ்ஒளியின் சிறுகதைகள் இத்தொகுதியில் இடம் பெற்றுள்ளன. வ.ரா, தொ.மு.சி.ரகுநாதன் ஆகியோர் ஓரங்க நாடகங்களை எழுதி இதழ்களில் வெளியிட்டனர். 1947இல் 'கவிஞர் விழா' என்ற ஓரங்க நாடகத் தொகுதியை தமிழ்ஒளி வெளியிட்டார். பின்னர் 'முன்னணி' இதழிலும் பல ஓரங்க நாடகங்களை எழுதினார். இவை அனைத்தும் இத்தொகுதியில் இடம்பெற்றுள்ளன.

### தொகுதி-6: தோழர் தமிழ்ஒளி ஆய்வுகள்
(கட்டுரைகள் - தன் வரலாறு)

சிலப்பதிகாரம், திருக்குறள் குறித்த தமிழ்ஒளி ஆய்வுகள் தனித்தன்மைமிக்கவை. பிற்காலங்களில் புதுமையாகப் பேசப்பட்ட செய்திகளை 1950களிலேயே தமிழ்ஒளி பதிவு செய்துள்ளார். 1963இல் 'போராடும் மனிதனின் புதிய உண்மைகள்' எனும் சிறுவெளியீட்டை தமிழ்ஒளி வெளியிட்டுள்ளார். தமிழ்ஒளி பற்றியப் புரிதலுக்கு இவ்வெளியீடு அரிய ஆவணம். எதிர்பாராதவிதமாக, தமிழ்ஒளி தன்னுடைய நண்பர் பாவலர் பாலசுந்தரம் அவர்களுக்கு எழுதிய நீண்ட கடிதமும் கிடைத்தது. அந்தக் கடிதம் இத்தொகுதியில் இடம்பெற்றுள்ளது.

### தமிழ்ஒளி ஆக்கங்கள்
### பதிப்பிக்கப்பட்டிருக்கும் முறையியல்

தமிழ்ஒளி கவிதைகள், 1947 முதல் அச்சு வடிவம் பெறத் தொடங்கின. 1950 - 1960களில் பெண்ணாடம் புதுமைப் பிரசுரம், பாரி நிலையம், மல்லிகைப் பதிப்பகம், ரவி பிரசுரம், வானதி பதிப்பகம் முதலிய பதிப்பகங்கள் வெளியிட்டன. தமிழ் ஒளி மறைவிற்குப் பிறகு செ.து.சஞ்சீவி அவர்கள், தமது இறுதிக் காலத்தில் தமிழ்ஒளி ஆக்கங்களை சிறுசிறு நூல்களாக வெளிக்கொண்டு வந்தார்.

செ.து.சஞ்சீவி அவர்கள் வெளியிட்ட 'தமிழ்ஒளி கவிதைகள்', 'மாதவி காவியம்' ஆகிய இரண்டு நூல்களைத் தவிர பிற அனைத்தும் தமிழ்ஒளி வாழ்ந்த காலத்திலேயே வெளிவந்தவை. அதனால் அவற்றை மறுபதிப்பு செய்துள்ளோம். தமிழ்ஒளி காலத்தில் வெளிவந்தவை, மீண்டும் மறுஅச்சு வடிவம் பெறும்போது நிறைய மாற்றங்களைச் செய்திருப்பதைக் காணமுடிந்தது. அதனால் அவற்றைத் தவிர்த்தோம். இவ்வகையில் தமிழ்ஒளி ஆக்கங்களின் மூலபாடப் பதிப்பாக இத்தொகுதிகள் உருவாக்கப்பட்டுள்ளன.

### மே தினம்

மண்ணை, இரும்பை, மரத்தைப் பொருளாக்கி
விண்ணில் மழையிறங்கி மேதினிக்கு நீர் பாய்ச்சி
வாழ்க்கைப் பயிரிட்டு வாழ்ந்த தொழிலாளி
கையில் விலங்கிட்டுக் காலமெல்லாம் கொள்ளையிட்ட
பொய்யர் குலம் நடுங்கப் பொங்கி வந்த மே தினமே.

- தமிழ்ஒளி (1952)

பதிப்பாசிரியர்
பேரா. **வீ.அரசு**
மேனாள் தமிழ்ப் பேராசிரியர்,
சென்னைப் பல்கலைக்கழகம்

## நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,

41-பி, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600 050.
☎ 044 - 26251968, 26258410 | www.ncbhpublisher.in | info@ncbh.in

**கிளைகள்**

| | |
|---|---|
| அம்பத்தூர் | - 044 - 26359906 |
| ஸ்பென்சர் பிளாசா | - 044 - 28490027 |
| மதுரை | - 0452 - 4374106 |
| திருநெல்வேலி | - 0462 - 2323990, 4210990 |
| திண்டுக்கல் | - 0451 - 2432172 |
| கோயம்புத்தூர் | - 0422 - 2380554 |
| சேலம் | - 0427 - 2450817 |
| ஈரோடு | - 0424 - 2256667 |
| கிருஷ்ணகிரி | - 04343 - 234387 |
| ஒசூர் | - 04344 - 245726 |
| ஊட்டி | - 0423 - 2441743 |
| திருச்சி | - 0431 - 2700885 |
| தஞ்சாவூர் | - 04362 - 231371 |
| புதுக்கோட்டை | - 04322 - 227773 |
| விழுப்புரம் | - 04146 - 227800 |
| பாண்டிச்சேரி | - 0413 - 2280101 |
| வேலூர் | - 0416 - 2234495 |
| நாகர்கோவில் | - 04652 - 234990 |

முன்வெளியீட்டுத் திட்ட தொகையினை கீழ்க்கண்ட வங்கிக் கணக்கில் செலுத்தலாம்

New century Book House (P) Ltd.,
Central Bank of India, Ambattur
A/c No. 1035208898, IFSC : CBIN0282161.

நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின்
முன் வெளியீட்டுத் திட்டம்

# தோழர் தமிழ்ஒளி ஆக்கங்கள்





தோழர் தமிழ்ஒளி (1925 - 1965)
நூற்றாண்டுச் சிறப்பு வெளியீடு

2400 பக்கங்கள்
விலை
ரூ.3000/-
முன் வெளியீட்டுத் திட்டத்தில்
ரூ.1500/-
மட்டுமே!
(தபால் செலவு உட்பட)

1/8 டெம்மி அளவு
தரமான தாள்
கெட்டி அட்டை
வடிவமைப்புடன்

டிசம்பர் 1 முதல்
டிசம்பர் 31 வரை
முன்வெளியீட்டுத் திட்டத்தில்
பணம் செலுத்திப் பதிவு
செய்துகொள்ளலாம்

# காலம் யாவும் ஒளிரும் மாமணி




'சிதம்பரம் பிள்ளை எளிதில் கொள்கையை மாற்றிக் கொள்பவர் அல்லர். காற்று எப்படி வீசுகிறதோ அப்படித் திரும்பும் நீர்மை பிள்ளையவர்களின் பிறவியில் அமையவில்லை. வீரர் சிதம்பரம் பிள்ளைக்கு ராஜதந்திரம் தெரியாது. சூழ்ச்சியும் கரவும் அவரை அறியா. அவர் உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசியதில்லை. இகல் எரி முதலியன அவர் தம் நெஞ்சில் நெடிது நிலவா' (ப.29, வாராது வந்த மாமணி) என்று நவசக்தியில் திரு.வி.க. எழுதிய இரங்கலுரை வ.உ.சியின் மாண்பை உணர்த்திற்று. இம்மாண்பே அவரின் உயிரியல்பாய் இருக்க, பின்வந்த அரசியல் நீரோட்டத்தில் அவரும் அவர் பணிகளும் எவ்வாறு மறக்கப்பட்டன என்பதைச் சான்றுகளோடு விளக்கி, நம்மைப் புதிய வெளிச்சத்திற்கு இட்டுச்செல்கிறது வாராது வந்த மாமணி நூல்.

பாரதியால் போற்றப்பட்ட வ.உ.சி., ஏன் இந்திய தேசியத் தலைவர்களின் வரிசையில் வைத்து எண்ணப்படவில்லை… தென்னாட்டுத் திலகர் என்றும் தென்னாட்டுத் தந்தை என்றும் திரு.வி.க.வால் சுட்டப்பட்ட வ.உ.சி. ஏன் இந்தச் சமூகத்தின் மறதி நோய்க்கு ஆளானார். சுதேசிக் கப்பல் நிறுவனத்தைத் தொடங்கி சுயராஜ்ஜியம் என்ற பெருங்கனவை இந்திய மண்ணில் விதைத்தவர்களில் தலையாய ஒருவரின் பணிகளும் அவரால் உருவான எழுச்சியும் வரலாற்றில் ஏன் சில காலத்திற்குள்ளாகவே, மறக்கப்பட்டன… சிறைவாசத்திற்குப் பிறகு மையநீரோட்ட அரசியலில் இருந்து வ.உ.சி முற்றிலும் விலகிக்கொண்டதான தோற்றத்தை ஏற்படுத்திய திட்டமிட்ட ஒதுக்கலை எவ்வாறு புரிந்துகொள்வது… இந்நூல் அந்தக் காரணங்களுக்கான தரவுகளைத் தருவதன் மூலம் வரலாற்றின் பேசப்படாத பக்கங்களை நம்முன் வைக்கிறது.

வ.உ.சி. சிறைக்குச் சென்று மீண்டபிறகு, அரசியல் செயல்பாடுகளில் இருந்து ஒதுங்கிவிட்டார் என்பதான கூற்றை மறுக்கும் விதமாக அவரின் அரசியல் சமூகப் பணிகள், இலக்கியப் பணிகள், செயல்பாடுகள் எத்தகையதாக வெளிப்பட்டன என்பதைத் தரவுகளோடு முன்வைப்பதன் மூலம் இந்நூல் வ.உ.சி. என்ற ஆளுமையின் இடையறாத சமூகப் பணிகளை உறுதிப்படுத்துகின்றது.



முனைவர் ந.கவிதா

வ.உ.சி. இரட்டைத் தண்டனை பெற்று கோவைச் சிறையிலும் கண்ணனூர்ச் சிறையிலுமாக செக்கிழுத்து, கல்லுடைத்து மிகக்

கொடுமையான தண்டனையைப் பெற்று மீண்டபோது, அவரை வரவேற்கப் பெருந்திரள் மக்கள் கூட்டம் கூடும் என்று காவலைத் தீவிரப்படுத்திய ஆங்கில அரசின் எதிர்பார்ப்பு பொய்த்துப் போகும்படியாக வ.உ.சி.க்கான வரவேற்பு இருந்தது... வக்கீல் தொழில் செய்வதற்கான உரிமமும் ஆங்கில அரசால் தடைசெய்யப்பட்ட நிலையில் அரிசி வியாபாரமும் நெய் வியாபாரமும் செய்து ஜீவிதத்தை நடத்தி வந்த வ.உ.சி. என்னும் ஆளுமைமிக்க மனிதரைக் காங்கிரஸ் கட்சியும் அதன் முக்கியத் தலைவர்களும் கண்டுகொள்ளாத வகையில் என்ன நிகழ்ந்தது என்ற வரலாற்று இடைவெளியை நாம் உணர்ந்துகொள்ளப் போதுமான ஆதாரங்களை இந்நூல் வழங்குகின்றது.

சிவகாசிக் கலவரம், கழுகுமலைக் கலவரம் போன்ற எண்ணற்ற கலவரங்கள் தமிழ்ச் சமூக வரலாற்றில் இருந்தபோதும், திருநெல்வேலி எழுச்சி என்பது அவற்றிலிருந்து முற்றிலுமாக வேறுபட்டது; அந்த எழுச்சி சாதி, சமய, வர்க்க வேறுபாடுகளைக் கடந்ததாக இருந்தது; வங்காளத்தைப் போன்று பெரும் எழுச்சி தமிழகத்தில் நிகழ்ந்திடாத சமயத்தில்தான் தூத்துக்குடியில் சுதேசிய உணர்வுக்கான வித்து வ.உ.சி, சுப்பிரமணிய சிவா என்னும் இரு பெரும் தேசத் தொண்டர்களால் ஊன்றப்பட்டது. வ.உ.சியின் பெயருக்கு இருந்த மதிப்பையும் சுதேசியம் பற்றிய அவரது கொள்கைகள்மீது மக்கள் கொண்டிருந்த ஈடுபாட்டையும் தெளிவுபடுத்தும் சான்றுகள் இந்நூலில் ஏராளம். மருத்துவ சகோதரர் ஒருவர் ஐயங்கார் ஒருவருக்கு முடி திருத்தும் பணியில் இருக்க ஐயங்காரோ, வ.உ.சியின் சுதேசிய முயற்சிகள் பற்றி ஏளனமாகப் பேச, அந்தச் சகோதரரோ அரைகுறையாக அப்படியே விட்டுவிட்டுக் கிளம்பிவிட்டார். இந்த மருத்துவ சகோதரனைப் போல எண்ணற்ற எளியவர்கள் சுதேசிய எழுச்சி பெற்றவர்களாகத் திகழ்ந்தார்கள் என்பதே.

தமிழகத்தில் தேசிய இயக்கம் என்பது கற்றறிந்த மேல்தட்டு வர்க்கத்தினர்க்கானதாக இருந்த நிலை, திருநெல்வேலி எழுச்சியில் பங்குகொண்டோர் பற்றி நாம் அறியும்போது முற்றிலும் மாறிவிட்டது. எழுச்சியில் ஈடுபட்டதாகக் கைதானவர்கள் எளியவர்கள். வாழ்வாதாரத்திற்காக உழைக்கும் தரப்பினர். வ.உ.சி, சுப்பிரமணிய சிவாவின் சொற்பொழிவுகள் சமூகத்தின் அனைத்துத் தரப்பினரையும் சென்றடைந்து பெருந்தாக்கத்தை உருவாக்கியிருந்தன. அதன் தொடர்ச்சியாகவே இந்தத் திWZருநெல்வேலி எழுச்சியில் பெருந்திரள் பங்கேற்பு சாத்தியமானதும் ஆங்கில அதிகார மையத்தை அச்சம் கொள்ளச் செய்வதும் நிகழ்ந்தது.

சூரத் காங்கிரஸிற்குப் பிறகு தென் தமிழகத்தில் திருநெல்வேலி, தூத்துக்குடி பகுதிகளில் சுதேசியம் குறித்த விழிப்பு பெரும் தீயெனப் பரவிய நிலையில் இருண்ட மாகாணம் என்று விடுதலைப் போராட்ட காலத்தில் குறிப்பிடப்பட்ட மதராஸ் மாகாணம், எழுச்சிப் பிரதேசமாகப் பெருங்கவனம் பெற்றதை இந்நூல் விவரிக்கின்றது.

கோரல் மில் தொழிலாளர்களுக்கான போராட்டத்தை முன்னெடுத்ததன் மூலம் அவர்களின் உரிமைகளுக்காகப் பேசிய வ.உ.சி., சுதேசியத் தொழில் சார்ந்த முன்னெடுப்புகளைத் தேசிய விடுதலையின் ஒரு கூறாகக் கருதி கப்பல் நிறுவனத்தைத் தொடங்கிய துணிவை நிர்மூலமாக்க ஆங்கிலக் கப்பல் நிறுவனங்கள் கையாண்ட மோசமான தந்திரங்களை, ஒரு பெருங்கனவின் சாட்சியை அழித்தொழித்த வரலாற்றை எடுத்துரைக்கிறது.

சுதேசிக் கப்பல் நிறுவனத்தின் பங்குகளை வாங்கி அவரது பெரும் முயற்சிக்கு நாமும் உறுதுணை செய்ய வேண்டுமென்று எழுதினார் பாரதி. வாங்கிய கப்பல்களில் ஒன்று பழுது. வாங்கி வரும் பொறுப்பை ஏற்ற வேதமூர்த்தி முதலியாருக்கும் வ.உ.சிக்கும் இடையில் எழுந்தது மன வேறுபாடு. பின்னாளில் வ.உ.சி. சிறை சென்றபோது அவர் மீது கொண்ட பெரும் பற்றினால் அவர் வாழ்வும் தியாகமும் குறித்து இத்தமிழ்ச் சமூகம் அறிந்துகொள்ள வேண்டுமென்று முனைந்து வ.உ.சி. குறித்த நூல் ஒன்றை எழுதிய வேதமூர்த்தி முதலியார், அப்புத்தகத்தில் தன் பெயரை வெளியிட்டுக்கொள்ளவில்லை என்ற செய்தியை, பரலி சு. நெல்லையப்பர் மூலமாகத் தான் அறிந்ததாகக் கூறும் பி.ஸ்ரீயின் குறிப்பைத் தருகிறார். பின்னாள்களில் வ.உ.சி. வரலாறு எழுதிய (ஜீவிய சரிதம்) எம். கிருஷ்ணசாமி ஐயருக்கு அடிப்படையாய் முதலியார் எழுதிய நூலே அமைந்திருக்கலாம் என்பதையும் தக்க ஆதாரங்களுடன் வெளிப்படுத்துகின்றார் நூலாசிரியர்.

திலகர் இந்து சமய ஆச்சாரங்களில் வ.உ.சியினின்று முற்றிலும் மாறானவர் என்றபோதும் சுதேசிய எண்ணத்தால் அவரை அரசியல் குருவாக ஏற்றுக்கொண்டிருந்தார் வ.உ.சி. அன்னிபெசண்ட் அவர்களின் அரசியல் பார்வையில் தனக்குப் பெரும் முரண் இருக்க, பொதுவெளியில் அதைத் திலகருடன் விவாதிக்கும் உரனுடையவராயிருந்தார் வ.உ.சி..

காந்தியின் எழுச்சியும், திலகரின் அரசியல் சீடர்களின் பாதையைப் பாரிய அளவில் பாதித்தன. திலகரின் மறைவிற்குப் பிறகு அவரின் வட நாட்டு சீடர்கள் இந்து சபை உறுப்பினர்களாயினர். தமிழ்நாட்டு சீடர்கள் காந்தி சார்ந்திருந்த காங்கிரஸைச் சேர்ந்தனர். பாரதி காந்தியை 'வாழ்க நீ எம்மான்' என்று பாட, சுப்பிரமணிய சிவா ஸ்ரீ திலகர் காந்தி தரிசனம் என்ற கற்பனை நாடகத்தை இயற்ற, கிருஷ்ணசாமி சர்மா, திலகரும் காந்தியும் என்ற தனி இயலைப் படைக்கிறார்.

பட்டாபி சீத்தாராமைய்யா எழுதிய காங்கிரஸ் வரலாற்றில் ஒரு இடத்தில் கூட வ.உ.சி. பெயர் குறிப்பிடப்படவில்லை. இந்த நீரோட்டத்தில் இணையாததனாலே வ.உ.சி.யைக் காங்கிரஸ் புறக்கணித்தது. வ.உ.சியின் சிலையைக் காங்கிரஸ் நிறுவத் தயங்கியதையும் பின் அது நிறுவப்பட்டு அமங்கலமாக ஒரு தீ விபத்து நேர்ந்ததைக் காரணம் காட்டி அப்புறப்படுத்தப்பட்டதையும் ம.பொ.சியின் தகவல்களைக் கொண்டு சுட்டிக்காட்டுகின்றது இந்நூல். காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரை மிகப்

பெரும் விழிப்பை ஏற்படுத்தியது வ.உ.சி. வழக்கு. விடுதலைப் போராட்டத்தோடு, தொழிலாளர் இயக்கம், பிராமணர் அல்லாதார் இயக்கம், சமயச்சீர்திருத்தம், தமிழ் மறுமலர்ச்சி என வ.உ.சி. செயலாற்றிய களங்களை விரிவாகச் சுட்டிக்காட்டும் ஆதாரங்களையும் அவர் காலத்தில் வந்த பதிவுகளையும் அவர் இறப்புக்குப் பின் வெளியான இரங்கலுரைகளையும் ஆவணப்படுத்தியிருக்கிறது.

வ.உ.சி. பற்றி ரகசிய போலீஸார் எழுதிவைத்த குறிப்பு, தமிழிலும் ஆங்கிலத்திலும் எம்.கிருஷ்ணசாமி ஐயரால் எழுதப்பட்ட வ.உ.சி. வரலாறு, சிஐடி அறிக்கை, பரலி சு. நெல்லையப்பர் எழுதிய வ.உ.சிதம்பரம் பிள்ளை சரித்திரம், இதழ்களில் வ.உ.சி.யின் மறைவுக்கு வெளியான இரங்கலுரைகள், தீர்மானங்கள், பிற்சேர்க்கைகள் என முக்கிய சான்றாதாரங்களைத் தொகுத்திருக்கும் இந்தப் புத்தகம், வ.உ.சி. என்னும் பெரும் ஆளுமை குறித்து வரலாற்றின் பக்கங்களில் விடப்பட்ட சில இடங்களை நிறைவுசெய்யும் சாத்தியம் கொண்டது.

என் மனைவியையும் புத்திரனையும் கடவுள் கையில் ஒப்புவித்திருக்கிறேன். அவர் எங்களுக்கு எது நன்மை என்பதை என்னைவிட நன்குணர்வார் என்று தேசத் தொண்டைத் தன் முதற்கடனாகக் கொண்டு செயல்பட்ட வ.உ.சி., சுதேசிக் கப்பல் கம்பெனியின் செயலாளர் நிலையிலிருந்து இலாபத்தை மட்டுமே நோக்கமாகக் கொண்டிருந்த பங்குதாரார்களால் பணியாளர் நிலைக்குத் தள்ளப்பட்டதையும், சிறை சென்ற பின் சுதேசிக் கப்பல்கள் யாருக்கு எதிராக இந்தக் கப்பல் நிறுவனம் தொடங்கப்பட்டதோ அந்த பிரிட்டீஷ்காரர்களிடமே விற்கப்பட்டது என்ற அவலத்தையும் வானமாமலை எழுதிய வ.உ.சி. முற்போக்கு இயக்கங்களின் முன்னோடி என்ற நூல் வழி அறியலாகின்றது.

வ.உ.சி. சிறையில் பட்ட துன்பங்களைப் பற்றியும் சிறையிலிருந்து மீண்ட பிறகு தேசிய இதழ்கள் அவர் எதிர்கொண்ட வறுமையையும் பேசிய அளவிற்கு அவர் ஈடுபட்டிருந்த தொழிற்சங்கப் பணிகளையோ, அரசியல் செயல்பாடுகளையோ, சமூக சீர்திருத்தப் பணிகளையோ, இலக்கியப் பணிகளையோ பேசவில்லை. பொது வாழ்விலிருந்து அவர் விலகிவிட்டதைப் போன்ற தோற்றத்தையே பதிவுசெய்தன என்று குறிப்பிடும் இந்த நூல், 'காந்திய யுகத்தில் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சி அவரை ஒதுக்கியதையோ நீதிக் கட்சியிலும் சுயமரியாதை இயக்கத்திலும் 1920களின் பிற்பகுதியிலிருந்து அவர் ஆர்வம் செலுத்தியதையோ மறைத்தன அல்லது இடைப்பிறவலாகவும் சூசகமாகவும் மட்டுமே உணர்த்திச் சென்றன. கடைசி மூச்சு வரை அவர் காங்கிரஸில் இருந்ததாகவே சாதித்தன'. (ப.31,வாராது வந்த மாமணி) வ.ரா., 'அரசியல் உலகில் சாதாரணமாய்க் காணப்பெறும் உபாயங்களை பிள்ளையவர்கள் கைக்கொண்டு வாழ்ந்திருப்பாரானால், அவர் இன்றைக்கும் தலைவர் என்று மதிக்கப்பட்டு பிரசங்க முழக்கத்தில் ஈடுபட்டுக்கொண்டே வந்திருப்பார். வேஷம் போடத் தெரியாததனால் யோக்கியராய் அவர் அக்ஞாத வாழ்வு வாழ்ந்துவருகிறார்' என்று மணிக்கொடியில் எழுதியதை இங்கு நினைவுகூரலாம்.

1918 முதல் 1924 வரை தீவிரமாகத் தொழிலாளர் இயக்கத்தில் பணியாற்றிய வ.உ.சி, 1928இல் கோவில்பட்டி சதி வழக்கில் காங்கிரஸ் தொண்டர்களுக்காக இலவசமாக வாதாடினார். ஆனால், வ.உ.சி.யின் மறைவுக்கு தமிழ்நாடு காங்கிரஸ் சென்னையில் ஒரு அனுதாபக் கூட்டத்தைக்கூட நடத்தவில்லை என்பதையும் சத்தியமூர்த்தி போன்றவர்களால் வகுப்புவாதி என்ற வ.உ.சி. 'கடுஞ்சொற்களால் பழிக்கப்பட்டதாகவும் எனது போராட்டம் நூலில் ம.பொ.சி. பதிவுசெய்ததை ஆசிரியர் இங்கு எடுத்தாண்டிருக்கிறார்.

வ.உ.சி. ஐயராக இருந்திருந்தால் தேசிய இதழ்கள் எவ்வாறு ஆர்ப்பாட்டம் செய்திருக்கும் என்று குடியரசு பதிவுசெய்ததையும் கொழும்பின் வீரகேசரி இதழ் சிறப்பான அஞ்சலி செலுத்தியதையும் தன்னாடு, தன்தேயம், தன்னரசு என்ற பாலை முதலில் திருநெல்வேலி ஜில்லாவுக்கு ஊட்டிய தேசியத்தாய் சிதம்பரனார் என்று ஊழியன் எழுதியதையும் பதிவுசெய்வதன் மூலம் மையநீரோட்ட அரசியலுக்கு ஏதுவாகச் செய்திகளை வெளியிட்ட பத்திரிகைகள் எவ்வாறு வ.உ.சி.யின் மறைவைப் புறக்கணித்தன அல்லது வெளியிட்ட செய்திகளில் எவ்வளவு ஓரவஞ்சனை கொண்டிருந்தன என்னும் தெளிந்த பார்வையை நமக்கு வழங்குகின்றது இந்தத் தொகுப்பு.

வீரகேசரியில் தான் வ.உ.சி. தன் அரசியல் குருவான திலகரின் வரலாற்றை அதன் ஞாயிறு வாரப்பதிப்பில் தொடராக எழுதி வெளியிட்டார். நிதி திரட்டுவதற்கான அறிக்கை, இறுதி ஊர்வலக் காட்சியின் ஒளிப்படம், வாசகர் கடிதங்கள், கையறுநிலைப் பாடல்கள் எனப் பலவற்றை எழுதி வெளியிட்டது வீரகேசரி. செந்தமிழ், கலைமகள் போன்ற இதழ்கள் எழுதவில்லை. காந்தி, நேரு, ராஜாஜி போன்றவர்கள் யாரும் இரங்கல் குறிப்பு வெளியிடவில்லை என்பதையும் அறியத்தருகிறது இந்த நூல். தரவுகளை முயன்று சேகரித்தல், தொகுத்தல், கால வரிசைப்படி முறைப்படுத்தல், தகுதி அறிதல், மதிப்பிடுதல், திறனாய்தல் அதன் மூலம் வரலாற்றுப்பூர்வமான மெய்மைத் தன்மையை வாசிப்போர் அறியச் செய்தல், வாசகர்களே அதன் தரங்களை மதிப்பிட்டுக்கொள்ளும்படியான தெளிவை வழங்குதல், புதிய தேட்டத்திற்கான ஆர்வத்தை உருவாக்குதல் என வரலாற்று ஆய்வுக்கான சிறந்த அடிப்படைகளைக் கொண்டிருக்கும் இந்த நூல் வ.உ.சி. போன்ற மாபெரும் ஆளுமையின் வரலாற்றைப் பதிவுசெய்ததில் மிக முக்கிய ஆவணமாக இருக்கின்றது.

●

**கட்டுரையாளர்: உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை.**
**எத்திராஜ் மகளிர் கல்லூரி, சென்னை.**



கட்டுரை

# சங்க கால வாழ்க்கை வட்டச் சடங்குகள்

முனைவர் சு. தீபலட்சுமி

மானுட வாழ்வில் வாழ்க்கை வட்டச் சடங்குகள் என்பது பிறப்பு முதல் இறப்பு வரை நிகழும் ஒரு சமூகப் பண்பாட்டு நிகழ்வாகும். இந்நிகழ்வுகளின் அனைத்து நிலைப்பாடுகளிலும் முக்கிய பங்கு வகிப்பது வழிபாடு குறித்த சடங்கியல் கருத்தாக்கங்களேயாகும். 'வழிபாடு' என்பது மனித நம்பிக்கையில் ஆழமாக வேரூன்றிய ஒரு செயல்பாடாக உள்ளது. இவ்வடிப்படையில் வழிபாடு மனித வாழ்வில் அனைத்து நிகழ்வுகளிலும் முழுமைத் தழுவிய தன்மை பெற்றிருப்பதைச் சங்க இலக்கியங்கள் வாயிலாக அறிய முடிகிறது. 'கடவுள்' அல்லது 'இறைவன்' என்னும் கருத்தாக்கம் உருப்பெறும் முன்னரே சடங்குகள் தோற்றம் பெறலாயின. இச்சடங்குகள் இறை நம்பிக்கை சார்ந்ததாகவும், நம்பிக்கை மற்றும் பழக்க, வழக்கங்கள் சார்ந்ததாகவும் நிகழ்த்தப்பட்டுள்ளன. மனித வாழ்வோடு இறை தொடர்பான சடங்கு, வழிபாடு சார்ந்த இயங்கியல் கூறுகளை விளக்க முற்படுவதே இக்கட்டுரையின் பொருண்மையாகும்.

### சடங்கும் மானுடவியலும்

'சடங்கு' என்பது மனித வாழ்வை நெறிப்படுத்தும் பொருட்டு முன்னோர்களால் உருவாக்கப்பட்ட சமூகப் பண்பாட்டு நிகழ்வாகும். "வழி வழியாக வரும் பழமரபுகளைக் காத்தல் மனித மனத்தின் ஆழத்தில் இருக்கும் உணர்வுப்பூர்வ செயல் வடிவமாகும். சடங்குகள் இதற்குப் பெரிதும் துணைபுரிகின்றன. "முன்னோர் செய்த செயல்களைக் காரண, காரிய ஆராய்ச்சியில் ஈடுபடாமல் தாம் கண்டவாறே பின்பற்றுவதும், நிகழ்த்துவதும் சடங்கின் முறை" என்று வாழ்வியற் களஞ்சியம் குறிப்பிடுகிறது. இச்சடங்கு முறைகளின் வழியே மனிதனின் சமூக ரீதியான பருவமாற்றுத் தன்மையை அறியமுடிகிறது.

சங்க இலக்கியத்தில் சடங்கியல் ரீதியான நிகழ்வுகள் குறித்த பதிவுகள் பல இருப்பினும், 'சடங்கு' என்ற சொல்லாக்கம் எங்கும் காணப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். சடங்கு குறித்த கருத்தாக்கத்தை தொல்காப்பியர் எடுத்துக்கூறும் போது 'கரணம்' என்ற சொல்லின் வழி எடுத்தியம்புகிறார்.

"பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்
ஐயர் யாத்தனர் கரணம் என்ப"

(தொல்காப்பியம் - நூற்.1091)

என்னும் நூற்பா மூலம், மனித வாழ்வியல் பொய், குற்றம் ஆகிய புலப்பாடு ஏற்படும் தருணத்தில், மனிதனை நெறிப்படுத்தும் பொருட்டு இக்கரணம் (சடங்கு) என்ற முறைமையை முன்னோர்கள் வகுத்தனர் என அறியமுடிகிறது. இந்நிலையில் 'சடங்கு' என்ற சொல் பிற்காலத்தில் எழுந்த ஒரு சொல்தான் என்பது உறுதிப்படுகிறது.

### வழிபாடு விளக்கம்

'வழிபடு' என்ற வேர்ச்சொல்லிலிருந்து பிறந்த தொழிற்பெயரே 'வழிபாடு' என்ற சொல்லாகும். இச்சொல்லிற்கு அகராதிகள் "இறைவனை வணங்கும் செயல்" என்று பொருள் தருகின்றன.

இவற்றின் விரிந்த பொருளை இரா. சீனிவாசன் 'வழிபாடு', 'ஆற்றுப்படை இரண்டும் ஒரே பொருளுடைய சொற்கள் என்றும் வழிப்படுத்துதல் என்பது வழிபாடு என்றானது. ஒருவன் தன்னையோ, பிறரையோ இறைவனிடம் வழிப்படுத்துதல்" என்று கூறிச் செல்கிறார். இவ்வகையே வழிபாடு என்பது மனிதனை வழிப்படுத்துவதற்காக அமைந்தது எனலாம். அஃதாவது இறைவன் முன் வேண்டுதல் அல்லது முறையிடல் என்ற கருத்தாக்கத்தில் நிகழ்த்தப்பெறும் சடங்காகிறது என்பது தெளிவாகிறது.

### இறைவழிபாட்டின் தொடக்க நிலை

தொடக்கக்காலத்தில் மனிதன் இயற்கையின் சூழலில் வாழத் தலைப்பட்டவன் என்பதைச் சங்க

இலக்கியப் பதிவுகளின் வாயிலாக அறியமுடிகிறது. இவ்வியற்கைச் சூழலே கால மாறுபாடுகளில் அவனிடத்தில் அச்சத்தை விளைவித்தது. இவ்வச்சமே ஒருவித அச்சத்தையும், பயத்தினையும் ஏற்படுத்தியது. இவ்விடத்து "அச்சமும் உணவுத் தேவையும் கொண்ட மனிதன் இயற்கையின் பேராற்றலை வணங்கத் தலைப்பட்டான். கூட்டு உழைப்பினால் உணவைத் தேட மனிதன் முற்பட்ட போது ஆற்றல் மிகுந்த இயற்கையைத் தனக்கு இணங்க வைக்க முயன்றான்" என்பார் தொ.பரமசிவன். இதன் வாயிலாக மனிதன் தன்னைவிட மேம்பட்ட ஆற்றல் ஒன்று இருக்கின்றது என்பதை உணரலானான். இவ்வித ஆற்றலின் தாக்கத்திலிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும் எனக் கருதினான். இம்முறையே அம்மனிதனுக்குள் உருவெடுத்த ஒருவிதச் சிந்தனையின் வெளிப்பாடே வழிபாடாக வளர்ச்சியுற்றது.

### மனித வாழ்வில் சடங்கின் படிநிலை

மனிதன் தமது வாழ்நாளில் ஏற்படும் பருவ மாற்றங்களை அடிப்படையாகக் கொண்டு ஒவ்வொரு நிலையில் நுழையும் போது அந்நிகழ்வைக் குறிப்பதாகவும் அதன் சிறப்பையும், பண்பையும் பலனையும் நினைவூட்டுவதற்காகச் சிறப்புச் செயல்களைச் செய்கிறான். இந்நிலைப்பாட்டில் சடங்குகள் வாழ்வின் நிலைமாற்றத்தை உணர்த்தும் ஒரு மரபுசார் கருவியாக இயங்குகிறது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இந்நிலையில் "பிறப்பு முதல் இறப்பு வரை மனிதனின் வாழ்க்கை சடங்குகளால் கட்டுண்டு கிடக்கிறது" என்று வாழ்வியற் களஞ்சியம் கூறுவது இங்கு உணரத்தக்கதாகும். மனித வாழ்வில் இயற்கையாக நிகழும் நிகழ்வுகளின் வழியே அவனது வாழ்வை நெறிப்படுத்தும் நோக்கத்திற்காக சடங்குகள் தோற்றம் பெறலாயின எனக் கருதப்படுகிறது.

### பிறப்புச் சடங்குகள்

மனித வாழ்வின் தொடக்க நிலைச் சடங்குகளாகப் போற்றப்படுவன பிறப்புச் சடங்குகளாகும். மனிதன் கருவாக ஒரு பெண்ணின் வயிற்றில் உருக்கொண்டது முதல் அக்கரு ஓர் உருவமாக கருவறை விட்டுப் புற உலகிற்கு வரும் வரையிலும் அதன் பின்னும் ஒரு குறிப்பிட்ட பருவம் வரை நிகழ்த்தப்பெறும் சடங்குகள் பிறப்புச் சடங்குகள் என்னும் நிலைத்தன்மைக்குள் அடங்குகின்றன. "மனித வாழ்வியல் நிலைப்பாட்டில் பிறந்தது முதல் இறக்கும் வரை அவர்களுடைய வாழ்க்கை முழுவதும் ஏதாவது ஒரு சடங்கைச் செய்து திருப்தி அடைகிறார்கள்" என்பர் சோமலே. "கருவுற்றதிலிருந்தே சடங்குகள் தொடங்கி விடுகின்றன. குழந்தைப் பிறப்பிலிருந்தே வாழ்வின் ஒவ்வொரு கட்டத்திலும் சடங்குகள் நடைபெறுகின்றன" என்கிறார் ம.வேலுச்சாமி.

இவர்கள் முன்வைக்கும் கருத்துக்களின் வழி பிறப்புச் சடங்கின் தன்மையை அறியலாகிறது. இச்சடங்கிற்கு கருவுற்ற பெண்ணும் (தாய்) கருவும் (குழந்தை) நிலைக்களன்களாக அமைகின்றனர். இவர்களுள் ஏற்படும் மாற்றத்தின் புலப்பாடாகப் பிறப்புச் சடங்குகள் அமைகின்றன. இவ்வாழ்க்கை வட்டச் சடங்குகளை சங்க இலக்கியப் பாடல்களின் பரப்பில் பரவலாக காணமுடிகிறது.

### சூல் கொண்ட மகளிர் வழிபாடு

சூல் கொண்ட மகளிர் தங்களின் சூலுற்ற நிறைமாத காலத்தில் மகப்பேறு நல்ல முறையில் நிகழ இறைவனை வழிபடும் பொருட்டு ஒரு சடங்கு நிகழ்த்தியமையை மதுரைக் காஞ்சி எடுத்துரைக்கின்றது. இதனை,

**"நுண்ணி ராகுளி இரட்டப் பலவுடன்**
**ஒண்சுடர் விளக்க முந்துற் மடையடு**
**நன்மா மயிலின் மென்மெல இயலிக்**
**கருஞ்சூல் மகளிர் பேணிக் கைதொழுது**
**பெருந்தோட் சாலினி மடுப்ப ஒரு சார்"**

(மது.கா. 606-610)

என்னும் பாடல் வரிகள் விளக்குகின்றன. நிறைந்த சூலைக் கொண்ட மகளிர் மெல்ல மெல்ல மயில் போல நடந்து சென்று கடவுளைக் கைதொழுதனர், பல மங்கல வாத்தியங்கள் ஒலிக்க இறைவனுக்குச் சுடர் விளக்கு, பாற்சோறு இட்டுப் படைத்தனர். பெரிய தோளையுடைய இறைவனுக்குப் பணி செய்யும் தேவராட்டி வழி படைப்புப் பொருளைச் செலுத்தி வழிபட்டனர். இம்முறையே "சூல் உற்றதற்கு தெய்வங்களுக்குப் பலிச்சோறு படைக்கும் பழையச் சடங்கும், புதிய சமய வழிபாடும் கலந்ததொரு வழக்கமாகத் தெரிகிறது (Magico and Religious Rite) என்பர் அறிஞர்.

இவ்வழிபாடானது குழந்தைப் பேற்றின் போது நிகழும் இடையூறுகளிலிருந்து தம்மைக் காத்தருள வேண்டும் என்ற நிலைப்பாட்டில் இடம் பெற்றமையை 'மடுப்ப' என்ற சொல்லாக்கம் குறிப்பிடுகிறது. இவ்வழிபாடு சூல் கொண்ட மகளிர்க்கு 'இறைகாப்பின்' பொருட்டு நிகழ்த்தியதை அறியமுடிகிறது. குறிப்பாகச் சோறு சமைத்து சூல் உற்ற மகளிர்க்காக வழிபாடு நிகழ்த்தியமையை 'மடை' என்ற சொல் விளக்குகிறது. இம்முறையை நடைமுறைச் சமூகத்தோடு நோக்கும்போது இந்நிகழ்வு அனைத்தும் சூல் உற்ற மகளிர்க்கு நிகழும் 'வளைக்காப்புச் சடங்கோடு' ஒப்பிடத்தக்கதாக விளங்குகிறது. இத்தகு சடங்கு முதல் சூல் கொண்ட மகளிர்க்கே நிகழ்த்தப்படுகிறது என்பது மேற்கண்ட சங்கப் பாடலின் வழி அறியமுடிகின்றது.

### குழந்தை பிறப்பு

மானுடவியல் புலத்தில் "நிலைமாற்றம்" என்ற கருத்தாக்கம் பிறப்பு என்ற தளத்திலிருந்து தனது இயங்கியல் தன்மையைத் தொடங்குகிறது. இயல்பு நிலையிலிருந்த மகளிரைக் கருவுயிர்த்தல் என்ற நிகழ்வானது மீவியல்பு நிலையை அடையச் செய்கிறது. இந்நிலையில் கரு ஓர் உருப்பெற்று தன் இருப்பை விட்டு வெளிவரும் தன்மையை,

".............. பெண்ணீற் றுற்றெனப்
பட்டமாரி ஞான்ற ஞாயிற்றுக்
கட்டி னிணக்கு மிழிசின் கையது
போழ்தூண் டூசியின் விரைந்தன்று மாதோ" (புறம். 82: 1-4)

என்னும் பாடல் வரிகள் எடுத்தியம்புகின்றன. அதாவது மனைவி பிள்ளைப்பேற்றுக்காக நோவுற்றதையும் அவள் பிள்ளைப் பேற்றின் போது தனித்திருக்க தோல்வாரினால் கட்டில் செய்வதும், குழந்தை பிறப்பிற்கான சூழலை எடுத்துரைக்கின்றன என்பது துலக்கமாகிறது.

## குழந்தைக்கான சடங்கின் தொடக்கம்

பிறப்பு மனித வாழ்வின் தொடக்கமாகும், அவை, நன்முறையில் அமைய வேண்டும் என்பதற்காக குழந்தை பிறந்தவுடன் அக்குழந்தையின் எதிர்கால நலன் கருதி பண்டைக் காலத்தில் நம் முன்னோர்கள் சடங்குகளை ஏற்படுத்தியுள்ளனர்.

"குழந்தை பிறப்பு என்பது மனித வாழ்வில் முக்கிய நிகழ்வாகும். இந்தியாவின் பிற பகுதிகளைப் போல தமிழகத்திலும் இதையட்டிய சடங்குகளும் பழக்கவழக்கங்களும் இருக்கின்றன. அது பண்டைக் காலம் தொட்டு நிகழ்ந்து வருவதாகத் தெரிகிறது" என்றார் சோவியத் அறிஞர் விதாலி ஃபுர்னீக்கா.

குழந்தை பிறந்ததும் அதற்குச் 'சேனை வைத்தல்' என்னும் சடங்கும் நிகழ்வு முதன் முதலில் செய்யப்படுகிறது. ஆனால் இது பற்றிய குறிப்பு சங்க இலக்கியத்தில் காணக்கிடைக்கவில்லை. இந்நிகழ்விற்குப் பின்பே தாய்ப்பால் ஊட்டப்படுகிறது. இது குறித்து,

"திதலை மென்முலைத் தீம்பால் பிலிற்றப்
புதல்வற் புல்லிப் புனிறுநா றும்மோ?" (நற்.380: 3-4)

சுணங்கு அணிந்த மெல்லிய கொங்கையின் இனிய பால் பொருகுதலாலே அந்தப்பால் சுரப்பப் புதல்வனைப் புல்லிக்கொண்டு எம்தோளும் ஈன்ற அணிமையாளாகிய முடைநாற்றம் வீசா நிற்கும் என்பர் உரையாசிரியர் சின்னத்தூரார். தாயானவள் தன் குழந்தைக்குத் தாய்ப்பால் ஊட்டிய முறைமையை இப்பாடல் வரிகள் எடுத்தியம்புகின்றன. தாய்ப்பால் ஊட்டல் என்பது சங்ககாலம் தொடங்கி இன்று வரை ஒரு மரபுசார் நிகழ்வாக இருந்து வருகிறது.

## பெயரிடல் சடங்கு

பிரபஞ்சத்தில் வாழும் மனித இனங்களுள் தன் வாழ்வையும் நடத்திச் செல்லப் பிறப்பின் பொருட்டு வரும் குழந்தைக்கு 'பெயரிடல் சடங்கு' சமூக ரீதியிலான பண்பாட்டு அடையாளத்தைத் தருகிறது. இதை மானுடவியலாளர் 'சமூகத்திற்குள் அழைத்தல்' என்று குறிப்பிடுகின்றனர். இச்சடங்கிற்கு மரபு ரீதியிலான சமூகப் பண்பாட்டு அடையாளத்தைச் சங்க இலக்கியங்கள் முன்வைக்கின்றன.

"......................தான்தன்
முதல்வன் பெரும்பெயர் முறையுளில் பெற்ற
புதல்வற் புல்லிப் பொய்த்துயில் துஞ்சும்"
(கலி. 75:23-25)

"யகன் பெருஞ் சிறப்பிற் றந்தை பெயரன்"
(ஐங். 403: 3)

"சிறந்தோன் பெயரன் பிறந்த மாறே" (நற். 40:12)

"மேதக்க எந்தை பெயரனை யாங்கொள்வோம்"
(கலி. 81:35)

குழந்தைக்குத் தன்னைப் பெற்ற தந்தையின் (தாத்தா) பெயரைச் சூட்டுவதே பழந்தமிழர் மரபாக இருந்தமையை இச்சங்கப்பாக்கள் விவரிக்கின்றன.

## குடுமி களையும் சடங்கு

மனித இனங்களுள் பிறந்தக் குழந்தைக்குக் காப்பின் பொருட்டு நிகழ்த்தப்பெறும் சடங்குகளுள் முடியிறக்குதலும், காது குத்தலும் சடங்கியல் நிகழ்வாகும். இம்முறை குழந்தை பிறந்த ஆறுமாதம் அல்லது ஒருவருடம் கழிந்த பின் நிகழ்த்தப்படும் சடங்கு முறையாகும். இச்சடங்குகளுள் முடியிறக்குதல் குறித்து,

"குடுமி களைந்த நுதல் வேம்பி னொண்டளிர்
நெடுங்கொடி யுழிஞைப் பவரொடு மிலைந்து"
(புறம். 77:2-3)

என்னும் பாடல் வரிகள் குழந்தைக்கு முடிகளைதல் பற்றிக் கூறுகின்றன. இது பருவமாற்றத்தை உணர்த்தும் பொருட்டு குடுமி களையப்பட்டது என்பது இங்கு துலக்கமாகிறது. ஆனால். நாட்டுப்புற மரபில் குழந்தைப் பிறந்த ஆறுமாதம் கழித்து அவரவர் வசதிக்கேற்ப குலதெய்வங்களுக்கு குடுமிகளையும் மரபு இருந்துள்ளது.

"முதலில் அல்லது மூன்றாம் ஆண்டில் குழந்தையின் தலையைச் சிரைக்கும் சடங்காகும்" என்று கலைக்களஞ்சியம் மொழிகிறது. இம்முறையே, குடிமிகளைதலும் ஒரு சடங்கார்ந்த நிகழ்வாக பழந்தமிழ் மானுடச் சமூகத்தில் இருந்தமையை அறியமுடிகிறது.

## காது குத்தும் சடங்கு

காது குத்தும் சடங்கு என்பது பெரும்பாலும் முடி இறக்கும் சடங்குடன் இணைந்து நிகழும் சிறுபான்மை தனிப்பெரும் நிகழ்வாக நிகழந்திருக்கலாம். காது குத்தும் சடங்கு நிகழ்ந்தமைக்கான தெளிவானச் சான்று சங்க இலக்கியத்தில் இல்லை. ஆனால் காதில் அணிகள் அணிந்தமைக்கு,

"கா தொன்ற களைதல்" என்று தொல்காப்பியமும்
(நூற்பா. 1208)

"நகைதாழ்பு துயல் வடுஉம் வகையமை
பொலிங்குழை" (திரு.முரு. 86)

என்று சங்கப்பாடல்கள் எடுத்துரைக்கின்றன. இம்முறையே காது குத்துதல் என்பது பெருவிழாவாக நிகழாவிட்டாலும் அச்சத்தின் பால் கொண்ட மரபின் பொருட்டு நிகழ்ந்திருக்கக் கூடும் என்பது அறியலாகிறது.

## திருமணச் சடங்கின் தோற்றம்

தமிழ் இலக்கியங்களில் திருமணம் தொடர்பான தொடக்கக் காலப் பதிவுகளை வழங்குவதில்

குறிப்பிடத்தக்க இடத்தை வகிப்பது சங்க இலக்கியங்களேயாகும். இவ்வகையே திருமணச் சடங்கின் தோற்றம் குறித்துச் சங்க இலக்கியங்களில் பல பதிவுகள் காணக்கிடக்கின்றன. இனக்குழுச் சமூகத்திற்கு முற்பட்ட காலக்கட்டத்தில் திருமணச்சடங்கு குறித்த புரிதல் மக்களிடையே இருந்ததற்கான சான்றுகள் இல்லை. இனக்குழூச் சமூகம் என்ற குழு அமைப்பு உருவான நிலையில் சமூக ஒழுங்கிற்கான நெறியியல் சார்ந்த விதிமுறைகள் முறைப்படுத்தப்பட்டமையை தொல்காப்பியம் வாயிலாக அறியமுடிகிறது.

**"மேலோர் மூவர்க்கும் புணர்த்த கரணம்**
**கீழோர்க்காகிய காலமும் உண்டே"**

**(தொல்காப்பியம் - 1090)**

என்று தொல்காப்பியர் முன்வைப்பதை நோக்குமிடத்து திருமணத் தோற்றத்திற்கான புரிதலை விரிவாக அறியமுடிகிறது. இந்நூற்பா சொற்பொருள் குறித்த கருத்தாக்கத்தை ‘‘திருமணச் சடங்குகள் தோன்றிய நிலையை விவரிக்கிறது’’ என்பார் சிலம்பு நா. செல்வராசு.

### மண நீராட்டும் சடங்கு

மணம் செய்வதற்கு முன்பாக மணத்திற்குரிய பெண்ணை மங்கல நீராட்டுவது வழக்கமாகும். இவ்வழக்கம் பண்டைக்காலந் தொட்டு இருந்தமையை அகநானூற்றுப் பாடல்கள் உரைக்கின்றன.

**"வதுகை மண்ணிய மகளிர் விதுப்புற்றுப்**
**பூக்கணும் இமையார் நோக்குபு மறைய"**
**(அகம். 136:8-9)**

**"உச்சிக் குடத்தர் புத்தகல் மண்டையர்**
**பொதுசெய் கம்பலை முதுசெம் பெண்டிர்**
**முன்னவும் பின்னவும் முறைமுறை தரத்தரப்**
**புதல்வற் பயந்த திதலையவ் வயிற்று**
**வாலிழை மகளிர் நால்வர் கூடிக்**
**கற்பினின் வழாஅ நற்பல வுதவிப்**
**பெற்றோர் பெட்கும் பிணையை யாகென**
**நீரொடு சொரிந்த ஈரிதழ் அலரி**
**பல்லிருங் கதுப்பி னெல்லோடு தயங்க"**

**(அகம். 86:8-16)**

என்னும் பாடல் வரிகளில், மங்கல மகளிர் பலர் தங்கள் தலையில் புதிய மண் கலங்களில் தண்ணீரைக் கொணர்வர். அந்நீரைத் தங்கள் அகவைக்கேற்ப முறைப்படுத்தி அவற்றுள் மக்களை ஈன்றெடுத்த மகளிர் நால்வர் கூடி அப்பெண்ணுக்கு வாழ்த்துக்கூறி குளிர்ந்த மலரையும் நெல்லினையும் கலந்த மஞ்சள் நீரைக் கொண்டு மணப்பெண்ணை நீராட்டுகின்றனர். இதன் மூலம் மணநீராட்டுச் சடங்கு அக்காலத்தில் வழக்கில் இருந்துள்ளமையை அறியமுடிகிறது.

### சிலம்பு கழீ சடங்கு

சிலம்பு என்னும் அணி சங்ககால மகளிர் அணியும் அணிகலன்களுள் ஒன்றாகும். இவ்வணி சங்ககாலத்தில் மகளிர்க்கு சிறுபருவத்திலேயே அணியப்பட்டதை அகநானூற்றுப்பாடல் (219) சான்று பகர்கிறது. இதன் பொருட்டு ‘‘பாலுண் பருவத்தின் சிலம்பு இடும் வழக்கம் இருந்தது என்பதை அறியலாம்’’ என்று கூறும் ந. சுப்புரெட்டியார் கூற்று இங்கு கருதத்தக்கது. இவ்வாறு அணியப்பட்ட சிலம்பு திருமணத்திற்கு முன் கழித்தல் என்பது ஒருவகை மரபாக இருந்ததை ‘‘மணம் புரிவதற்கு முன் மணமகளது காலில் பெற்றோர்களால் அணியப்பட்டச் சிலம்பை நீக்குவதற்கு ஒரு சடங்கு செய்யப்படும் அது ‘சிலம்புகழி நோன்பு’ எனப்படும்’’ என்று உ.வே.சா. குறிப்பிடுகிறார்.

### முடிவுரை

சங்க இலக்கியத்தில் வழிபாட்டுச் சடங்குகள் என்று அணுகும்போது அவற்றுள் பல வழிபாட்டுப் பதிவுகள் உள்ளன. இவ்வழிபாட்டுச் சடங்குகள் இறைத்தன்மையை நோக்கி நகர்வதை அறியமுடிகிறது. தொடக்கக்கால மனிதவாழ்வு இயற்கைச் சூழலையே மையமிட்டு அமைந்துள்ளது. அச்சூழலில் ஏற்பட்ட அச்சமே ‘வழிபாடு’ என்ற ஒரு நிலைக்கூற்றை மனிதச் சிந்தனையில் ஏற்படுத்தியது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. மனிதன் தன் வாழிடச் சூழலிற்கேற்ப வழிபாட்டு முறைகளை அமைத்துக் கொண்டான். இவ்வகைமையின் வெளிப்பாடாக வெறியாடி வழிபடல், நோன்பிருந்து வழிபடல், பலியிட்டு வழிபடல் ஆகிய வழிபாட்டு முறைகளை குறிப்பிடலாம். சங்ககால வழிபாடு அச்சத்தின் பொருட்டு தங்களைப் பாதுகாத்தல் என்ற கருத்தாக்கங்களின் அடிப்படையிலும் இறைவனை திருப்திப்படுத்துதல் எனும் அடிப்படையில் சடங்குகள் மேற்கொள்ளப்பட்டமையை உணர முடிகிறது.

சங்ககால வழிபாட்டுச் சடங்குகளை மானுடவியல் ரீதியாக நோக்கும்போது பண்டையக்காலப் பண்பாட்டுத் தொன்மையினை அறியமுடிகிறது. அதோடு மட்டுமல்லாது பண்டையக்கால மரபுச் சமகாலத்தில் மாற்றுரு பெற்றுத் திகழ்வதையும் அறியமுடிகிறது.

பண்டையக்கால மரபின் எச்சங்களையும் அறிந்துணர முடிகிறது. நம்முடைய காலம் வளர்ச்சிப் பாதையை நோக்கிச் சென்றாலும் பழந்தமிழரின் எச்சக் கூறுகள் ஆங்காங்கே தென்படுகின்றன. பழைய பண்பாட்டு மரபுகள் சமகாலத்தில் மாற்றுவடிவம் பெற்றாலும் ஒவ்வொரு சடங்கியல், வழிபாட்டு முறைகளிலும் தொன்மையின் எச்சப்பதிவுகள் உள்ளன என அறுதியிட்டுக் கூறமுடிகின்றது. இவ்வழிபாட்டுச் சடங்கின் பொருட்டு விளக்கம் பெறும் கருத்துக்களான வழிபாடும், வழிபாட்டுச் சடங்கும், பண்டைக்காலம் தொட்டு இன்று வரை அச்சத்தின் பொருட்டும் வளமையின் பொருட்டும் நிகழ்கின்றன என்பது மறுக்கவியலாத உண்மை எனக் கொள்ளலாம்.

●

**கட்டுரையாளர்: உதவிப் பேராசிரியர், தமிழாய்வுத் துறை, தனலட்சுமி சீனிவாசன் மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி (தன்னாட்சி), பெரம்பலூர்.**




# சூழலியல் விழிப்புணர்வு நாவல்

முனைவர் ச. கண்ணதாசன்

சுப்ரபாரதி மணியன் திருப்பூரை பூர்விகமாகக் கொண்ட தமிழ்ப் படைப்பாளர். சிறுகதைகள், நாவல்கள், கட்டுரைகள் எனப் பல தளங்களிலும் கடந்த முப்பது ஆண்டுகளாகப் பயணித்து வருபவர். குடியரசுத் தலைவரால் வழங்கப்பட்ட கதா விருது, தமிழக அரசு வழங்கிய சிறந்த நாவலாசிரியருக்கான விருது எனப் பல விருதுகளையும் பரிசுகளையும் பெற்றவர். மண்சார்ந்த மக்களுக்கு ஏற்படும் இன்னல்களைக் களைய தமது எழுத்துகளின் மூலமாகப் களப்போராளியாக நின்று போராடும் ஒரு சமூகப் படைப்பாளி. இயற்கையைப் பாதுகாத்து மீட்டெடுக்கும் முனைப்பு கொண்ட சூழலியல் பாதுகாப்பாளராகவும் இதழாசிரியராகவும் யாவராலும் அறியப்பட்டவர். அதற்குத் தக்க சான்றுகளாக இருப்பவை; அவரது படைப்புகளான புத்துமண், தறிநாடா, சாயத்திரை, யுத்தம், குப்பை உலகம், மேகவெடிப்பு, நீர்ப்பாலை போன்றவைகளாகும்.

அண்மைக் காலமாகச் சுற்றுச்சூழல் குறித்த விழிப்புணர்வினை மக்களுக்குக் கொடுக்க வேண்டிய கட்டாயநிலை ஏற்பட்டுள்ளது. அவ்விழிப்புணர்வு அரசாங்கம், தொண்டு நிறுவனங்கள், சமூக ஆர்வலர்கள், ஊடகங்கள் மூலமாகக் கொண்டு செல்லப்படுகின்றன. ஐம்பெரும் பூதங்களான இப்பிரபஞ்சம் இன்று பல நச்சுக் கலவைகள் கலந்து போனதால் விழிப்புணர்வு கொடுக்கவேண்டிய கட்டாய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. புத்துமண் நாவலின் படைப்பாளியான சுப்ரபாரதி மணியன் தமது படைப்பின்வழி கதை நெடுகிலும் சூழலியல் விழிப்புணர்வினைக் கொண்டு செல்கிறார்.

புத்துமண் சுற்றுச்சூழலை மையமாகக் கொண்ட படைப்பு. மணியன் என்ற சமூக ஆர்வலர் தமது வாழ்வில் சமூக அக்கறையுடன் போராடும் போராட்டத்தையும்; தொழிலாளர் சுரண்டல், சுற்றுச்சூழல் பேரழிவு, சாதிய ஆதிக்க சக்திகளின் வெறியாட்டம், வறட்சியுற்ற மனிதாபிமானம் போன்ற பொருண்மைகளை மையமாகக் கொண்டு 29 தலைப்புகளில் படைப்பிற்கு உயிரோட்டம் தந்துள்ளார். நாவலை வாசிப்போருக்கு, படைப்பாளர் சுப்ரபாரதி மணியனின் நிஜவாழ்க்கையின் நிழலாக மணியன் என்ற கதாபாத்திரம் படைக்கப்பட்டுள்ளது என்ற எண்ணம் துளிர்விடும்.

ஒரு சமூகப் போராளி என்பவன் உலக மக்கள் மற்றும் தன்னைச் சுற்றியுள்ள அனைவரும் எவ்வித இன்னல்கள் இல்லாமல் வாழவேண்டும் என்ற பரந்துபட்ட சமத்துவ உணர்வு,

பகுத்தறிவுச் சிந்தனை போன்ற குணாதிசயங்களை இயல்பாகவே பெற்றிருப்பான். நாவலில் மணியன் கதாபாத்திரம் முற்றிலும் அதற்குப் பொருத்தமுற அமையப்பெற்றுள்ளது. கதையின் துணை மாந்தர்களான மணியனின் மனைவி சிவரஞ்சனி, மகள் தேனம்மை, ஆய்வு மாணவி ஜூலி முதலான கதாபாத்திரங்கள் பேசுவதுபோல கதை பின்னப்பட்டுள்ளமை கதைக்கு மேலும் வலு சேர்க்கிறது.

மலைப்பகுதிகளில் வாழும் பூர்வீகக் குடிகளால் வனப்பகுதி பாதுகாக்கப்படுகிறது. அதேசமயத்தில் சமூக விரோதிகளால் அழிக்கப்படுகிறது. வாழிடங்கள் அழிக்கப்படுவதை நாவலுள் பதிவிடப்பட்டுள்ளது. "அய்ந்து இட்லிக்கு விலை ஆறு ஏக்கர், இருளனிடம் கைப்பற்றிய நிலத்தில் செங்கல் சூளை அமைக்கிறார்கள் கரியன் செட்டிகள், மண்ணைப் பிரிய மனம் இல்லாத இருளன் அதே சூளையில் ரத்தம் சுண்ட மண் சுமக்கிறான்" விளைநிலமாக இருந்த இருளனின் நிலம் செங்கல் சூளையாக மாற்றப்படுகிறது.

மரங்கள் வெட்டப்படுவதால் மண்ணரிப்பு ஏற்படுகிறது. அடர்ந்திருந்த வனப்பகுதிகள் அழிக்கப்படுகின்றன. அணைகளின் கரையோரங்களில் இருந்த மரங்களின் அழிவினால் மண்ணரிப்பு உண்டாகி, பருவமழைக் காலங்களில் வெள்ளப் பெருக்கு ஏற்படுவது வழக்கமாகிப் போகிறது. இக்காலக் கட்டங்களில் கரையோரங்களில் வசிக்கும் மக்களின் குடிசைகள் அடித்துச் செல்லப்படுகின்றன. அவ்வாறு ஒருமுறை ஜம்பனை ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டபோது மணியனின் உறவினர்களை அடித்துச் செல்கிறது. சற்றே பெருத்த மழை பொங்கிவந்த வெள்ளம் கரையோர குடிசைகளையும் கால்நடைகளையும் அடித்துச் சென்று விட்டது. இதுபோன்ற சம்பவங்கள் நிகழும்போது மணியனுக்கு அழைப்பு வந்துவிடும். மணியனும் களத்திற்குச் சென்று ஆதரவுக் கரம் நீட்டுகிறார்.

ஒருமுறை மணியன் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கிடைக்க வேண்டி, காவல் துறைக்குக் கடிதம் எழுதுகிறார். அக்கடிதத்தில், "பழங்குடி மக்கள் தாங்கள் வசிக்கும் பகுதியிலுள்ள நீர்நிலைகள், நீர்நிலைகளில் வாழும் உயிரினங்கள், பிற விலங்குகளைக் கொன்று குவிப்பது இல்லை. ஆனால் கீழிருந்து வருபவர்கள்தான் இத்தகைய பாதகச் செயலைச் செய்கின்றார்கள்." எனக் குறிப்பிட்டு எழுதுகிறார். இவ்வாறு பழங்குடி மக்களுக்கு எது நடந்தாலும் அதை அகிம்சை வழியில் போராடிப் பெற்றுத் தரும் அகிம்சைவாதியாகவும் வாழ்ந்து வருகிறார் மணியன்.

நீர்நிலைகள் மாசுபடுதலையும் அதற்காகப் போராட்டங்கள் பலவும் நடத்துகின்றார் மணியன். அதில் குறிப்பாக நொய்யலாற்றில் சாயப்பட்டறைக் கழிவுகள் கலப்பதை எதிர்த்து போராட்டம் நடத்துகின்றார். போராட்டத்திற்கு வந்த இளைஞன் ஒருவன் "நீங்க ஜோல்னா போட்டுக்கொண்டு வெறுமனே திரிவதாக நான் நினைத்துக் கொண்டிருந்தேன். அந்த ஜோல்னாவில் கொஞ்சம் நெருப்பையும் அள்ளிப் போட்டுக்கொண்டு திரிகிறீர்கள் என்பது தெரிகிறது" என்றான். மணியன் சூழலியல் பாதுகாப்பிற்காகப் பாடுபடுவதினால்தான் அந்த இளைஞனால் மணியன் பாராட்டப்படுகிறார்.

மலைப்பகுதியில் வாழும் மக்களுக்கு அடிப்படை வசதிகளை எதையும் அரசாங்கம் செய்து தருவதில்லை. ஆனால் அவர்களின் வாழ்வாதாரத்தை அழித்து, கீழே இருப்பவர்களுக்கு மின்சார வசதியை செய்து கொடுக்கிறார்கள். அவ்வாறு தங்களுக்கு அடிப்படை வசதி கிடைப்பதில்லை என்பதை, "மின்சாரம் தடைபட்டால் கேனையாடு போல கத்துகிறீர்கள். மின்சாரம் வேண்டுமென்று கேட்டால் காடும் மிருகங்களும் அழிந்துவிடும் என்கிறீர்கள். ஆனால் காட்டையும் மிருகங்களையும் அழித்துதான் பில்லூர் அணையை எங்கள் குடியிருப்புப் பகுதிகளில் கட்டிவிட்டு, எங்களுக்கு மின்சாரம் இல்லாமல் கஷ்டப்படுகிறோம்" எனும் பழங்குடி மக்களின் புலம்பலைப் படைப்பாளர் தமது படைப்பினுள் பதிவிட்டுள்ளார். மணியன் சூழலியல் விழிப்புணர்வாளராக மட்டும் இல்லாமல், சட்ட விழிப்புணர்வினையும் சமூக விழிப்புணர்வினையும் மக்களிடத்தில் கொண்டு செல்கிறார்.

"சுமங்கலித் திட்டம் என்பது கொத்தடிமைத்தனம். ஸ்பின்னிங் மில்களில் இருந்த இத்திட்டம் இப்போது கார்மெண்ட்ஸ் செக்டார்களிலும் வந்துவிட்டது. பயிற்சிக் காலம் என்ற சட்ட ஓட்டையை வைத்துக்கொண்டு விளையாடுகிறார்கள். இது சட்ட விரோதமானது. கேம்ப் கூலித்திட்டம், கண்மணித்திட்டம் என்று வெவ்வேறு பெயர்கள் வந்து விட்டன. இதை ஒழித்தாக வேண்டும். இத்திட்டத்திற்கு வந்துசேரும் பெண்கள் கிராமப்புரத்தைச் சேர்ந்தவர்களாக, பெரும்பாலும் தாழ்த்தப்பட்ட சாதியை சேர்ந்தவர்களாக இருகின்றார்கள். அவர்கள் இருக்கும் இடத்திற்கே சென்று பிரச்சாரம் செய்ய வேண்டும்"என்ற எண்ண ஓட்டம் மணியனின் மனதினில் தோன்றுவதைப் படைப்பாளர் சுட்டிக்காட்டுகிறார்.

மணியனை நலம் விசாரித்து, பசுமை இயக்கப் போராளி வெ.ஜீவானந்தம் கடிதம் எழுதுகிறார். அக்கடிதத்தின் சாராம்சம் சூழலியல் பிரச்சினைகளும் அதை எதிர்கொள்ளும் முறைகளைப் பற்றியதாக அமைகிறது. "குளிர் நீரில் நீந்தும் மீனுக்கு சூரிய வெப்பத்தில் மெல்லச் சூடேறி இதம் தரும் தண்ணீர் நீடித்த வாழ்வு தரும். ஆனால் பற்றவைத்த அடுப்பின் மீது வைக்கப்பட்ட பாத்திரத்தில் நீந்தும் போது நீரின் துவக்க இதத்தில் மகிழும் மீனின் சுகம் நீடிக்குமா? எத்தனை காலம்? இந்தக் கேள்விதான் நம்முன்.

நாம் சூரிய ஒளியில் மெல்லச் சூடேறும் குளத்துநீரில் நீந்தும் மீனாகப் போகிறோமா? அல்லது அடுப்பின் மீது வைக்கப்பட்ட பாத்திரத்தில் நெருப்பில் சூடேறும் நீரில் நீந்தும் மீனாக அற்ப சுகத்தில் முடியப் போகிறோமா? நாம் எந்த மீனாக முடிவெடுக்கப் போகிறோம் என்பதுதான் மனித குலத்தின் முன் உள்ள மாபெரும் வளர்ச்சிப் போக்கு பற்றிய கேள்வி.

இந்தக் கேள்வியைத்தான் பிளாஸ்டிக் ரசாயனக் கழிவுகளும், பசுங்குடில் வாயுக்களும், பருவ நிலை மாற்றமும், பூமி சூடாதலும், நம்முன் வைக்கின்றன. காலம் தாழ்ந்துவிடவில்லை. முடிவு நம் கைகளில்தான். நாம் பாத்திரத்து மீனா? குளத்து மீனா? நிதானமான சூரிய ஒளியின் நீடித்த இதமான வெப்பமா? மீனுக்கு முடிவெடுக்கும் சுதந்திரம் உள்ளது.

சுனாமியும், விலையுள்ள அக்வாஃபினா மினரல் வாட்டரும், மானியத்தில் கிடைக்கும் அம்மா வாட்டரும், வறண்டுபோன பாலாறும், செத்துப்போன நொய்யலும், போஸ்கோ போராட்டமும், சிப்கோவும், வால்ஸ்ட்ரீட்டும், ஓசூர் சிப்பாட்டும், இடிந்தகரையும் நமது தண்ணீரின் சூடு தாக்குப்பிடிக்கும் நிலையைத் தாண்டிக் கொண்டுள்ளது என்பதை எச்சரிக்கின்றன. வளர்ச்சி நெருப்பை கட்டுப்படுத்தி வாழ்வோமா? வளர்ச்சியில் கொத்து கொத்தாய்ச் சாவோமா? முடிவு நம் கையில்..." மண்ணையும் மரத்தையும் அழித்து அதனால் விளையும் கேட்டை நாம் எதிர்கொள்ளப் போகிறோமா? அல்லது மரங்களை வளர்த்து மண்ணை வளப்படுத்தப் போகிறோமா? என்பதை ஜீவானந்தம் தம் கடிதத்தின் வாயிலாக தமது ஆதங்கத்தைத் தெளிவுபடுத்துகின்றார். இப்படிச் சுற்றுச்சூழல் ஆர்வலர் ஜீவானந்தத்தின் கடிதமும் கதையை நகர்த்தி உயிரோட்டம் தருகிறது.

மணல் கொள்ளையால் இன்று தமிழகத்தின் அனைத்து ஆறுகளும் வறண்டு கிடக்கின்றன. அதனால் நதிகளில் நீருமில்லை, மணலும் இல்லை. கதையில் மணல் கொள்ளை நடக்கும் சம்பவம் ஒன்றும் அறங்கேற்றப்பட்டுள்ளது. மணல் கொள்ளையைத் தடுத்த சிறுவன் கொடூரமான நிலையில் கொல்லப்பட்டான் என்ற செய்தியறிந்த மணியன் களத்திற்கே செல்கிறார். அங்கு "வீரண்ணன் மணலை அள்ளுவதற்கு எதிராகப் போராடிக் கொண்டிருந்தான். இன்னும் பெரிய அமைப்பு எதையும் உருவாக்கவில்லை. ஆற்று மணலை அள்ளிக்கொண்டிருந்த லாரி முன் கைகளை விரித்துக் கொண்டு நிற்கிறான். லாரி ஓட்டுனரும் கூட இருந்த இருவரும் மிரட்டி அவனைத் தூரத் தள்ளிப்போகச் சொல்லி தள்ளியிருக்கிறார்கள். மணலில் விழுந்தவன் எழுந்து மறுபடியும் லாரி போகாதபடி கைகளை விரித்துக் கொண்டு நிற்கிறான். லாரி அவனை அடித்து வீழ்த்திக்கொண்டு போய்விட்டது.

"தாசில்தார், கலெக்டர், போலிசுன்னு தட்டிக் கேட்ட பல பேரை இப்படித்தான் கொன்னிருக்காங்க பையனுக்கு விவரம் பத்தாது. வீணா உசிரக் கொடுத்திட்டான்." மணற் கொள்ளையைத் தடுக்கச் சென்ற சிறுவனின் பரிதாப நிலையும் சமூக அக்கறை உடையோருக்கு மரணம்தான் பரிசு என்ற அவல நிலையையும் படைப்பாளர் படம்பிடித்துக் காட்டுகிறார். இப்படி இயற்கை வளங்கள் கொள்ளையடிக்கப் படுவதால் சுற்றுச்சூழல் மாசடைந்து, அதனால் மனித சமூகம் இன்னலுறுவதைக் கதைக்களம் விவரிக்கிறது.

பிரபஞ்சத்தின் உயிர்க்கோளமான பூமிப்பந்தைப் பாதுகாப்பது நமது ஒவ்வொருவரின் கடமை என்பதை நாவல் நினைவூட்டுகிறது. தொழிற்சாலைக் கழிவு நீர்நிலைகளில் கலத்தல், விளை நிலங்களில் எரிவாயுக் குழாய்ப் பதித்தல், மணல் கொள்ளை, வனப்பகுதி அழிவு, வளர்ச்சி என்ற பெயரில் சுற்றுச் சூழலை நாசமாக்குவது போன்ற சுற்றுச்சூழலின் அழிவும் அவற்றை எப்படி மீட்டெடுப்பது, அதற்காகத் தனியொரு மனிதனாகப் போராடும் மணியன் போராட்ட குணம் போன்றவை கதையினுள் காட்சிப் படுத்தப்பட்டுள்ளது. புத்துமண் போன்ற படைப்புகள் தற்கால இளைய சமூகத்திற்கும் ஒட்டுமொத்த மானுட சமூகத்திற்கும் சென்றடைய வேண்டும். அதுமட்டுமல்லாது சுற்றுச்சூழலைப் பாதுகாப்பது அனைவரின் கடமை என்பதை நினைவூட்டுகிறது புத்துமண்.

●

**கட்டுரையாளர்: உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,**
**தருமமூர்த்தி இராவ்பகதூர் கலவலகண்ணன் செட்டி**
**இந்துக் கல்லூரி, பட்டாபிராம், சென்னை.**

கட்டுரை



# சங்க இலக்கியம் காட்டும் தலைவியின் வாழ்வு

பொ. அபிராமி
&
முனைவர் ச. இராமலட்சுமி

சங்க இலக்கியங்கள் வாழ்வியலை அடிப்படையாகக் கொண்டதாகும். ஆகவே சங்க இலக்கியங்களில் உளவியல் பாங்கு அதிகம் காணப்படுகின்றன. வார்த்தைகளை அதிகம் உபயோகப் படுத்த முடியாத நிலையில் தன்னிரக்க உணர்ச்சியும் அதிகமானவுடன் தலைவி தன்னுடைய நிலையினை எண்ணி வருந்தி சத்திமிட்டு கத்துகின்றாள். சங்க இலக்கியத் தலைவிகள் பேசுவதற்குக் கூட வரைமுறைகள் வகுக்கப் பட்டுள்ளன. குழந்தைப் பருவத்தில் மகிழ்ந்து தெருவில் விளையாடும் சிறுமியாக இருந்து, பின்னர் தன்னுடைய விருப்பம் போலவோ அல்லது தன்னுடைய பெற்றோரின் விருப்பத்தின் பேரிலோ திருமணமானது நடைபெறுகின்றது. திருமணத்திற்குப் பிறகு பொறுப்புள்ள குடும்பத் தலைவியாகவே மாறுகின்றாள். தலைவன் குடும்பத்தின் நல்லொழுக்கங்களைப் போற்றி பின்பற்றி நடக்கின்றாள். தீயொழுக்கங்கள் ஏதேனும் இருப்பின் அதனைப் பிறருக்குக் காட்ட விரும்பாதவளாகவும், தன்னுடைய இல்லத்தில் நடப்பவைகளைப் பிறர் அறியா வண்ணமும் இல்லற ஒழுக்கமுடன் திகழ்கின்றாள். பிள்ளைப் பேற்றிற்குப் பின்னர் தன்னுடைய குழந்தைகளை வளர்ப்பதில் கவனம் செலுத்துகின்றாள். வயது முதிர்ந்த பின்பும் மற்றவர்களுக்கு முன்னுதாரணமாக இருந்து மறைகின்றாள்.

இவ்வாறாகத் தலைவியானவள் தனக்காக மட்டும் வாழாமல் தன்னைச் சார்ந்தவர்களுக்காக வாழ்கின்ற நிலையினைப் பற்றி காணலாம்.

### சங்க காலப் பெண்களின் இளமைப் பருவம்

பெண் குழந்தையாக இருப்பினும் ஆண் பிள்ளைகளைப் போலவே தைரியத்துடன் வெளியே செல்வதற்கு அனுமதிக்கப் படுகின்றாள். அப்பொழுது கட்டுப்பாடுகள் எதுவும் போடப் படுவதில்லை. தன்னுடைய வயதினை ஒத்த சிறுமிகளுடன் இணைந்து அந்தந்த நிலப்பகுதிக்குரிய விளையாட்டுக்களை விளையாடுகின்றாள்.

குறிஞ்சி நிலத் தலைவி தினைப்புனத்தினைக் காவல் காப்பதற்குத் தோழிகளுடன் செல்கின்றாள். அதன் அருகிலுள்ள சுனைகளிலோ அல்லது அருவிகளிலோ விளையாடி மகிழ்கின்றாள். பின்னர் அங்குக் கிடைக்கின்ற பூக்களையும், தழைகளையும் எடுத்து ஆடைகளாகக் கட்டிக் கொள்கின்றாள் என்பதனைக் குறிஞ்சிப் பாட்டு என்னும் நூலின் மூலம் கபிலர் விளக்கிக் கூறியுள்ளார்.

முல்லை நிலத்தின் தொழில் ஆநிரைகளைப் பாதுகாப்பது என்பதாகும். அதனால் முல்லை நிலத் தலைவியானாவளுக்கு அவள் பிறக்கின்ற பொழுது இளங்காளையும் கொண்டு வரப்படுகின்றது. அக்காளையினை வளர்த்து அதனை அடக்குபவரைத் திருமணம் செய்வேன் என்று சபதம் மேற்கொள்பவளாகக் ஒருங்கு விளையாட அவ்வழி வந்த" (கலித்தொகை -111), மற்றும் குறுந்தொகை, நற்றிணை, முல்லைப் பாட்டு போன்ற நூல்களில் காட்டப் படுகின்றாள்.

முதன்முதலில் விளையாட்டுக்கள் மருதநிலத்தில் தான் தோன்றின. நிலங்களில் வருகின்ற இலாபத்தில் இன்பமான வாழ்க்கையினை வாழ்ந்தவர்கள் மருத நில மக்கள். தங்களுடைய பொழுதினைப் போக்குவதற்காக சொல் விளையாட்டுக்கள் நடத்தினர். மருத நிலத் தலைவியானவள் கூட்டாஞ் சோறு சமைத்து தெருக்களில் விளையாடுபவளாகவும், சொல் விளையாட்டுக்கள் விளையாடுபவளாகவும் இருக்கின்றாள் என்பதனை அக இலக்கியப் பாடல்கள் பறைசாற்றுகின்றன.

கடல் சார்ந்த பகுதியாகிய நெய்தல் நிலத் தலைவி மீன்களைப் பிடித்தும், உப்பினை விற்றும் தங்களுக்குத் தேவையான வருமானத்தை ஈட்டிக் கொள்வதோடு மட்டுமல்லாமல், கடறகரையோரப் பகுதிகளில் உள்ள நிலப்பரப்புகளில் புன்னைக் காய்களை வைத்து விளையாடி மறந்த விதையொன்று மரமாகி நிற்கின்றது. அம்மரத்தின் கீழிருந்து தங்களுடைய பொழுதினைப் போக்கியுள்ளனர். அதனைக் கண்ட தலைவியின் தாய், அது உன்னுடைய தமக்கை என்று கூறுவதாகப் பாடல் அமைக்கப் பட்டுள்ளது.

பாலை நிலத் தெய்வமாக் கொற்றவை திகழ்கின்றாள். வெப்பமும், குளிரும் அதிகமாகத் தாக்கும் பகுதியாக விளங்கும் பாலை நிலத்தில் மனிதர்களின் நடமாட்டம் குறைவாகவே காணப் படும். அப்பகுதி மக்கள் வாழக் கூடிய தன்மையற்றதாக விளங்குகின்றது. கொடிய விலங்குகளும், பறவைகளும் மட்டும் திரிகின்ற இடமாக விளங்குவதாகச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன. பாலைத்திணை பற்றிய பாடல்கள் மட்டும் பிரிவினை உணர்த்திக் காட்டப் படுகின்றன. அங்குள்ள தலைவி பற்றி குறிப்புகள் காட்டப் படுவதில்லை.

### பருவமடைந்த தலைவி

தலைவியின் நடவடிக்கைகளில் மாற்றம் ஏற்படுத்தக் கூடிய பருவம் பருவமடைந்த பருவமாகும். எந்த இடத்திற்கும் தனியாகச் சென்று வருகின்ற நிலையானது மாறி துணையில்லாமல் வெளியில் செல்லக் கூடாது என்ற கட்டுப்பாடுகள் நிரம்பியதாகக் காணப்படுகின்றது. தோழிகளுடன் இணைந்து சென்று வருகின்றாள் என்பதனை மணிமேகலையின் மூலமாக அறிந்துக் கொள்ள முடிகின்றது. காவல் காப்பற்காகவோ அல்லது வேலையின் காரணமாகவோ, விளையாடுவதற்கோ, ஆநிரைகளை மேய்ச்சலுக்குக் கொண்டு செல்லும் பொழுதோ தலைவனைக் காண்கின்றாள். தன் மனமொத்த காரணத்தினால் தலைவனின் மேல் அன்பு செலுத்துகின்றாள். தோழியே, அவர்களுக்குத் துணை இருந்து உதவுகின்றாள். தலைவியின் நடவடிக்கைகளில் மாற்றத்தினைக் கண்ட செவிலித்தாயானவள். அதிகமான கட்டுப்பாடுகளைத் தலைவிக்கு விதிக்கின்றாள்.

அத்தகைய சூழலில் தலைவனைக் காணாத தலைவியின் உள்ளமானது கூக்குரலிட்டு அழுகின்றது. உள்ளத்தில் ஏற்பட்ட மாற்றத்தின் காரணமாக உடலிலும் மாற்றம் ஏற்படுகின்றது. உடல் மெலிந்து, நெற்றியில் பசலையுடன் காணப்படுகின்றாள். அவளுக்கு ஏற்பட்டுள்ளது உள்ளநோய் என்பதனை அறியாத நற்றாயும், செவிலித்தாயும் வெறியாட்டு நடத்துவதற்கு ஏற்பாடு செய்கின்றனர். மேலும், குறி கேட்டல் போன்றவையும் செய்கின்றனர். அந்நிகழ்வுகளின் பொழுது தலைவியின் துன்பத்தைக் கண்ட தோழி தலைவியின் எண்ணத்தினை இலைமறைக் காயாக வெளிப்படுத்துகின்றாள். தலைவியின் குடும்பத்திற்கு ஏற்றவனாகத் தலைவன் விளங்கினால் அவனை ஏற்றுக் கொள்கின்றனர். தங்களின் குடும்பத்திற்கு உகந்தவனாக இல்லாத

போது அவனை மறுக்கின்றனர். அந்நிலையில் தலைவி ஏதேனுமொரு முடிவினை ஏற்க வேண்டிய நிர்பந்தத்திற்கு ஆளாகின்றாள். தலைவனையும் விட்டுக் கொடுக்க முடியாமல், தன்னுடைய தாய், தந்தையையும் எண்ணிக் கலங்குகின்றாள். உடன்போக்கு செல்வது குறித்து முடிவாகின்றது. இரவில் தன்னுடைய இல்லத்திலிருந்து செல்ல எண்ணுகின்ற போது தன்னுடைய சலங்கையினைக் கழட்டி வைத்து விட்டு கிளம்புகின்றாள். ஏனெனில் சலங்கை சத்தம் யாரையும் எழுப்பி விடக் கூடாது என்றெண்ணத்தினாலும், சத்தம் கேட்டு எழுந்தால் தன்னுடைய உடன்போக்கு தடைபடக் கூடும் என்றும் எண்ணுகின்றாள். சலங்கை கழட்டுதல் என்னும் விழா நடைபெறாமல் தன்னுடைய பெற்றோர் அணிவித்த சலங்கையைக் கழட்டுவதனை எண்ணி கலங்கித் தன்னுடைய பெற்றோர் தன்னைப் புரிந்து கொள்வார்கள் என்ற எண்ணத்துடன் தலைவனுடன் செல்கின்றாள். இவ்வாறு செல்வது மட்டுமல்லாமல் தந்தையின் எண்ணத்தினை நிறைவேற்றுபவளாகவும் திகழ்கின்றாள்.

தாய், தந்தையின் நிழலில் தவச்செல்வியாக இருந்து தன்னைக் காத்து நிற்கிற்வளாகவும் திகழ்கின்றாள். தன்னைப் பெண் கேட்டு வருகின்றவர்களைத் ஐயன் (தந்தை) மறுக்கின்ற போது தந்தைக்கு உடன்பட்டவளாகவும் இருக்கின்றாள் என்பதனை,

“வேட்ட வேந்தனும் வெஞ் சினத்தனே” (புறநானூறு – 336) என்ற புறநானூற்றுப் பாடல் மகட்பாற் காஞ்சி திணையினைப் பற்றி கூறுகின்றது. இதற்கு முன்னோடியாகத் தொல்காப்பியமும் மகட்பாற் காஞ்சி பற்றி எடுத்துரைத்துள்ளது. இவ்வாறாகப் பெண்களின் பருவமடைந்த தலைவியின் வாழ்க்கை செல்கின்றது.

## இல்லறத் தலைவியின் கடமைகள்

சிறுவயதிலும், இளமைப்பருவத்திலும் மகிழ்ச்சி மட்டும் தனக்குரியதாகத் தலைவி வாழ்ந்தவள். தலைவனுடன் இணைந்து இல்லற வாழ்க்கை மேற்கொள்கின்ற பொழுது எதிர்க் கொள்கின்ற சிக்கல்களும், இன்பத்துன்பங்களும் அவளைப் பக்குவப்படுத்துகின்றன. தன்னுடைய தந்தை இல்லத்தில் வறுமை என்பதனை அறியாதவளாக விளங்குகின்றாள். கணவனின் இல்லம் வறுமையில் இருக்கின்ற பொழுது தன்னுடைய தந்தையிடம் சென்று பொருள் கேட்பதனை விரும்பாமல் இருக்கின்றாள். தந்தையாக அவளுடைய நிலை அறிந்து உதவுவதற்கு முன் வருகின்ற போது அதனை மறுத்தும் விடுகின்றாள். இல்லறக் கடமையில் சிறந்தவொன்று விருந்தோம்பலாகும். தன் இல்லத்திற்குப் புதிதாக வருகின்றவர்களை உபசரித்து அவர்கள் உணவு உண்ட பின்னர் தான் உண்டு வாழ்கின்ற முறையினைக் கடைப்பிடிக்கின்றாள்.

> **"அறவோர்க் களித்தலும் அந்தணர் ஓம்பலும்**
> **துறவோர்க் கெதிர்தலும் தொல்லோர் சிறப்பின்**
> **விருந்தெதிர் கோடலும்" (சிலப்பதிகாரம் – கொலைக்களக் காதை – 73-75)**

இவை இல்லறப் பெண்களின் தலையாயக் கடமையாகும் என்பதனைச் சிலப்பதிகாரம் விளக்கி உரைத்துள்ளது.

## தாயின் பொறுப்பும் வளர்ப்பும்

தன்னுடைய குழந்தையை எண்ணி தன்னுடைய வாழ்வினை அக்குழந்தைக்காக அர்ப்பணிப்பவளாக விளங்குகின்றாள். குழந்தைக்குப் பாலூட்டி, சோறூட்டி மகிழ்கின்றாள். விளையாடுகின்ற அழகினைக் கண்டு தானும் ஆனந்தமடைகின்றாள். வீரமான ஆண்மகனாகத் திகழ வேண்டுமென எண்ணுகின்றாள். தன்னுடைய மகன் வெளியில் சென்றிருப்பதனைக் கூடப் பெருமையுடன் பேசுகின்றாள். “புலி சேர்ந்து போகிய கல்அளைப் போல” (புறநானூறு – 86), புறநானூறு 277, 278, 279,295, 310 போன்ற பாடல்களும்,

> **"ஈன்ற பொழுதில் பெரிதுவக்கும் தன்மகனைச்**
> **சான்றோன் எனக்கேட்டத் தாய்" (திருக்குறள் – 69)**

பாடல்களும் வீரமாகப் பிள்ளையினைத் தாய் வளர்ப்பதற்குச் சான்றாகத் திகழ்கின்றன. வீரத்தில் மட்டுமல்லாமல், சான்றோனாக வளர்க்கவும் விரும்புகின்றாள். சிறுகுழந்தையாக இருக்கும் போது தாய் சிறு கோலைக் கொண்டு மிரட்டி தன் குழந்தைக்குப் பாலூட்டியதை எண்ணியும், பின் தன்னுடைய மகன் களிறினை வேல் கொண்டு எதிர்த்து நின்றதை எண்ணிப் பெருமிதம் கொள்கின்றாள். தன் தலைவனின் மேலுள்ள கோபத்தினைக் கூட தன் குழந்தைக்காக மறந்து ஏற்றுக் கொண்டு வாழ்கின்றாள். இவ்வாறு குழந்தை வளர்ப்பில் சிறந்தவளாகப் போற்றப்படுகின்றாள்.

பெண்ணின் கடமையினை நிறைவேற்றி சிறந்த வாழ்வினை வாழுகின்ற பெண்ணே அனைத்திலும் உயர்ந்தவள் என்பது உளவியலும் கூறுகின்ற கருத்தாகும்.

## முதுமையில் காக்கப்படும் பண்பு

தலைவியின் பெருமை முதுமையிலும் போற்றுதலுக்குரியதாக விளங்குகின்றது.திருமணம்

முடிந்த தன்னுடைய பிள்ளைகள் இல்லறம் நடத்துகின்ற அழகினைக் கண்டுமகிழ்கின்றாள். தனக்கான வாழ்வினை விட மற்றவர்களுக்காக வாழ்கின்ற வாழ்க்கைமுறையினை வாழ்ந்து காட்டுகின்றாள். தன் வீட்டிற்கு வந்த பெண்ணிற்குக் குடும்பத்தைவழிநடத்தும் முறையினை எடுத்துரைக்கின்றாள். தன் இல்லத்தின் பெருமையினைக் கூறிஅதன் வழி நடப்பதற்குத் துணையாக நிற்கின்றாள். அவர்கள் இல்லறம் நடத்துகின்றபாங்கினைத் தூர இருந்து கண்டு களிக்கின்றாள்.வாழ்வின் நிலையில் தன் வாழ்வின் பங்கினை விட பிறருடைய வாழ்வைப்பெரிதாக எண்ணி வாழ்கின்ற வாழ்வாகப் பெண்ணின் வாழ்வானது திகழ்கின்றது. பெண்ணின் பெருமையைப் பறைசாற்றி நிற்கின்ற தன்மை இனிவரும் காலத்திலும்பெண்கள் பாதுகாத்து வைத்துக் கொள்ள வேண்டியதாகும். நம் பண்பாட்டின்பெருமையினைப் பெண்கள் தான் வழிநடத்துகின்றாள். உளவியலின் மூலமாகவும்,தங்களுடைய செயல்பாட்டின் மூலமாகவும் என்பதனைப் பற்றி அறிய உதவுகின்றது.

**முடிவுரை**

பிறப்பு முதல் இறப்பு வரை தன்னுடைய சுகதுக்கங்களை விட பிறரின் வாழ்வினை எண்ணுகின்றவளாகப் பெண் திகழ்கின்றாள். தன்னுடைய உள்ளத்தில் எழுகின்ற கருத்திற்கு முக்கியத்துவம் அளிப்பதை விட மற்றவர்களின் வாழ்வினை முன்னேற்றுவதே வாழ்வின் இலட்சியம் என்பதாக எண்ணங் கொண்டு விளங்குகின்றாள். அறிவில் சிறந்து விளங்கி தன்னுடைய இல்லத்தினையும், விருந்தினர்களைப் போற்றுகின்றாள். இதுவே பெண்ணின் வாழ்வாகச் சங்க இலக்கியங்கள் காட்டுகின்றன.

**சான்றாதாரங்கள்**


1. *சங்க இலக்கியம் மூலமும் உரையும் ( 2012), ஆசிரியர் குழு, சாரதா பதிப்பகம், (ஐந்து தொகுதிகள்) எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள்.*
2. *சிலப்பதிகாரம் ( 2005), புலியூர் கேசிகன், கௌரா பதிப்பகம், சென்னை.*
3. *தொல்காப்பியம், பொருளதிகாரம்(2014), மின்னூலகம், மாணவர் பதிப்பகம், சென்னை.*


●



**கட்டுரையாளர்கள்:**

**பொ. அபிராமி**
பகுதி முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழாய்வுத்துறை
காவேரி மகளிர் கல்லூரி (தன்னாட்சி), திருச்சிராப்பள்ளி.


**முனைவர் ச. இராமலட்சுமி**
துணை முதல்வர் மற்றும் துறைத்தலைவர், தமிழாய்வுத்துறை
காவேரி மகளிர் கல்லூரி (தன்னாட்சி), திருச்சிராப்பள்ளி.




நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் புதிய வெளியீடுகள்



₹ 200/-




₹ 120/-



₹ 120/-

Article



# PROFESSOR Y.SUBBARAYALU

## FELICITATION TO HIS CONTRIBUTION TO SOUTH INDIAN HISTORY

Prof. K.R.Sankaran
&
N.Kathiravan

An unassuming, unassailable South Indian Historian has been none other than Professor Y.Subbarayalu (YS). He, a well-trained epigraphist and archaeologist, got research degrees from the University of Madras, his Alma matter. No researcher of South Indian history, without consulting his master piece Political Geography of the Cha Country (hereafter PGCC), would become worth. He has been candid enough to read, estempage and edit the epigraphs of the Dravidian languages, paleographically of any sort. He clinically utilised the evidences culled out from the Dravidian epigraphs to study South Indian history. His thrust area has been the STATES of medieval south India, especially of the Cha-s of Vijayalya (846-870) line. Though resting upon the works of Prof.K.A.Nilakanta Sastri, the doyen of South Indian historiography, YS holistically and technically deviated from the pioneer historians in delineating the ideas of the Cha state. The statistical analysis of the epigraphs en mass guided him to recognise the evolvement of the Cha state from micro-level to the macro-area of the Cha trans-oceanic empire.

**Methodology**

The method he applied in studying PGCC attests to his cognition and comptrolling capacity of the empirical evidences with the layout of the topo-sheets. This work certainly enumerated the characteristics of the Cha polity and administration with addition of about 11 maps and several appendices dealing with the geographical and political locations of the settlements of different patterns, political divisions viz., nu, vaanu, maalam and others.

**Chola state and Political divisions**

His identification of Taniyr, a unique Brhmaical settlement, its function and components clearly explains how such type of settlement got a special treatment conferred on by the Cha authorities. In a line he speaks of the thesis of PGCC as 'Nus were self-sufficient independent institutions'. The differences between K-nu, K-nu the two political divisions from Pudukkai region, typical semi-wet, semi-dry zone, endure from the aam age coeval to Iron age is deftly treated in teasing out the natures of the Nu divisions. This work (PGCC) apparently led him to find out what model of the state the Cha-s had. Critical analysis of the data that he collected from the published and unpublished inscriptions enabled him to find out the driving forces for the existence of the Cha state and society. They are: (1) maintenance of water resources at local and supra-local level (2) paying of tribute by many villages across the Cha country to the Grand-temple, Thañjvr (royal religious centre) (3) side-lined nrs and periyanrs held political role in peripheral areas, not in core. That was too in 12th and 13th centuries (4) the amalgamation of nu into vaa-nu, a scheme, and the superimposition of some nu in logistical locations resulted in different political impact.

In analysing the authority of the Cha kings, he finds that only in 50% of the epigraphs, the royal execution is known. The rest might have been meted out by the royal or religious ceremonies as said by Burton Stein (italicised is mine). It seems that the kings had a limited role in imposing the power. The repeated occurrence of the names of the taxes vei and eccu in first and fourth sub-periods of the Cha reveals, that he found in the epigraphical studies would show, that in these two periods keen care was taken to manage and maintain irrigation system, a unique hydrological mechanism of Kvry delta. Taxes varied from region to region and it was determined by the availability of water and fertility of the soil. In dry-zone, taxes were paid in cash. In contrast, it was paid in kind in wet-zone.

**Expansion of the Empire**

YS diligently delineated the salient features of the Cha state which he treated in two articles. Though objective of these articles was to treat the Burton Stein's theory of Segmentary State, he strenuously teased out the salient points of the Cha state. The successful endurance of the Cha state about 400 years lays in the fact that it brought the existence of the autochthonous groups into the conclave of hierarchy based Cha society which earlier enjoyed collective land holding, prompted private ownership later, he said. It tactically broke the bondage among the clan groups of different status, elevating king to the centre stage pyramidal. The periodical land survey, reformation in taxation, creation of irrigation facilities, structured bureaucracy set on the state firm. But, after the second half of the 12th century Cha kings were in the condition of seeking assistance from the locality leaders. Here, it is to be mentioned that the Cha rulers appropriately utilised the psyche of their subjects. The virulent and vibrant warrior groups were pressed into battleground wherein considerable strength of them would have been lost. By this way, the inherent rebellious intent of such warrior groups would have been neutralised considerably. As mostly they were from the peripheral area, population in the core could be unaffected. In another way, in arts and ceremonies entertained in temple premises the aesthetic troupes spent the time and energy. Here it is to be recalled that Rjarja I (985-1014) resuscitated from temple in Chidamparam the texts of Dvrm hymns that naturally drew the map of Tamil nationalistic fervour fuelling his intensity of expanding the empire by way of overseas campaign. His ambition evolved into the erection of Grand-temple, Thañjvr.

Water management facilitated the sustenance of the Cha state and society. It is explicitly spoken of in the inscriptions that almost all the agricultural villages have been bordered with water resources. In Tamil country, it has been unbreakable continuum from the time-immemorial. It is true, in case of nu, vaa-nu also. The function of talayvyccr who were in-charge of managing the water distribution explains that the care was taken by the Cha society in water-management. It was the basic 'fertility of the Cha state'.

Cha-s executed two different schemes to expand the territory: matrimonial alliance; war. At the beginning, they maintained matrimonial lock with the local chiefly families in the outskirts of the Kvry delta region. Emerging as the potent state, they extended the same scheme with dynasties like Chukya-s and others. The second scheme greatly helped them to promote maritime trade so as to establish the trans-oceanic state.

The occurrence of the term ugaam consisting of Bhrmas not found in the inscriptions from western portion of Tamil country gives us a view that Kogu upland was typically different from the rest because of the less fertility.

Prof.K.A.Nilakanta Sastri classed the Cha state, a centralised one. Burton Stein, theoretically countered it. The ideas of both of them have been reviewed and it has been recognised as one of the models of the early state, YS says.

**Personal Names in Chola Inscriptions**

Teaming with Noboru Karashima and Toru Mastui YS statistically analysed the male names out of 3543 of published Cha inscriptions from 7 districts chronologically and spatially. Excluding 400 female dancers and 689 shepherds registered in Thañjvr inscriptions, names with honorific and official title holders were analysed. The prominent titles like Uday, Mvndav, Brahmarya, Ndva, Nakka and a group of feudatory titles

they studied. By which this team delineated some points related to political and social changes through the four sub-periods of the Chas. [Chola sub-periods: I ca.850-CE to 985CE; II 986-1070; III 1010-1178; IV 1179-1279] Due to private ownership, uday title holders in Kvry delta increased over the centuries. Talking about Mvndav and Brahmarya titles that they pointed that the latter title had less frequency than Mvndav. Totally, 307 times Mvndav title occurred in all four periods. Of them, 288 times, it had association with king's titles. Uday title had 188 times associated with king's titles; Brhamarya had 83 times. Comparatively 24%. It meant 76%, uday title holders exercised their power in Cha polity.

Prominently, names of two kings viz., Madurntaka, Rjendara Cha had a close association with the titles of Mvndav and Brahmarya. It seemed that these two titles were bestowed on to the administrative officers. However, one third of the Mvndav had uday titles. Mvndav associated with revenue department. But, only Brahmarya title holders enjoyed snpati title. Nakka is one of the eponyms of god iva, occurring in Chamaalam in highest proposition in I and II sub periods; it got reduced in rest. This would attest the waxing of aivism in the latter period.

28 feudatory titles are identified. Of them, araya, mrya and daraya are the variants of each other. Though the titles Brahma, Pallava and Viuppa seemed to have the same character, the first one had a close association with king's titles and those had been borne out by the officials viz.,lai (scribe), adikri (officer) and spati (military chief). This would point their prime activation in administration. Similarly, pallavaraya and viupparaya title holders had been the part of the revenue department. These titles were conferred on to the independent locality leaders. A feudatory title ilangvl also had similar character. The two other titles sambu and Malayakula appeared to occur in latter half of the Cha period.

The two official titles nv and madhyatha had distinct distribution. Nv title, certainly of the local chief or land lord increased upwardly in number from II sub period onwards. Contrarily, madhyatha mostly the Brahmins working in sabhs decreased in number downwardly. The increase of nv might have crumbled the function of the village committees leading to the upcoming feudal society. This exemplary study teaches how the analysis of the concordance of the personal names would help to understand the political and social trends under the Chas.

**Maritime Trade**

YS extended his study area from south India to south-east Asia through fieldwork visiting some museums and religious centres to collect the available epigraphs. The objective of this project was to trace out the spread of trade network in the medieval history of south-east Asian countries. He teaming with scholars like Noboru Karashima, P.Shanmugam, S.Padmanabhan and others from the fieldwork collected few numbers of inscriptions relating to trade network. Some are bilingual (Sanskrit and Tamil) and few are in Tamil. The scripts are Grandha and Tamil. Primarily, they deal with guilds viz., ainuvar, tisai-yirattu-ainuvar, patie-pmi-visayattr and others. Trade groups are differently described as cei-puttira, kavarai, ktripa, kmaswami, an, pvaaivra, vrantavaa-chei, u-pasumpaikkra,etc. On the basis of eye copy of Tamil inscription preserved in a museum in Vietnam, this team studied that inscription. It belongs to 1089 C.E., The striking terms which are registered in that inscriptions are nakara-snpati, nu-cheika, patie-pmi-tsi-appar, marakkala-nya and others. This speaks of some donation offered by a trade guild. Similar facts are spoken of in an inscription from Sri Lanka. It has a pattern of eulogy specially crafted on trade guilds.


In a comparative study of such inscriptions from Tamil Nadu and Karnataka region, this team found striking similarities between them. The term nu-chei found in Tamil inscriptions can be found equal to mumuri-daan from Kannada inscriptions, the team said. They are designated as warriors, the guards of the merchant groups. This warrior group can be identified with munai, muni-vra, vra, vra-cheiyr of Tamil inscriptions. The inter-link among state, religion and trade guild under the Chas is clearly expressed in Tamil inscription found on the pedestal of Buddha image of Ngapaiam. It is dated to 1090 C.E., It is said in the inscription that a private party called nlangunakra-uaiyr of a village called Ciuthvr donated that Buddha image for procession to a monastery Rjendara Chap-perumpai. These are the result of YS's involvement in the sense of collegiality to scrutinise the data for analysis leading to find the facts.

In his own studies analysing the personal names on rock inscriptions and pottery inscriptions comparatively, he identified much more influence of Prkrit on pottery inscriptions. This might have been the influence of Prkrit knowing traders,he says. He has recognised 11 non-Tamil graphemes in pottery inscriptions; only 2 in rock inscriptions; only one is common. A marking point from such study is that the star-based names are mostly from pottery inscriptions. It is a cultural trait from north. Another point is lunar asterism-based names. And they are representing later period of Iron Age, he says. He is likely to say that the spill over of the idea of state from Magadha, established Stavkan state, enormous presence of Buddhist monks, laymen and their activities echoed on south including Tamil Nadu. These are the result of YS's interest in the study of south-east Asian history. The above given observations in nutshell are the marks of honouring him.

●

**Prof. K.R.Sankaran**
*Tamil University, Thanjavur,*
**N.Kathiravan**
*A.V.C.College (Autonomous), Mayladuthurai*

# நெஸ்லிங் வெளியீடாக உலகப் புகழ்பெற்ற சிறார் கதைகள்





₹ 90/-




₹ 140/-




₹ 99/-





₹ 99/-




₹ 99/-




₹ 99/-





₹ 50/-





₹ 110/-




₹ 105/-




₹ 95/-




₹ 50/-




₹ 65/-

**நெஸ்லிங் புக்ஸ் பப்ளிஷிங் அன்ட் டிஸ்ட்ரிபியூட்டர்ஸ் (பி) லிட்.,**

41-பி, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600 050. ☎ 044 - 26251968, 26258410, 48601884 | www.ncbhpublisher.in | email: nestlingbooks@gmail.com



Published by **Shanmugam Saravanan** on behalf of **New Century Reader's Sangam** at 16 (142), Jani Jhan Khan Road, Royapettah, Chennai - 600 014 and Printed by **A.Sivakumar** at **Pavai Printers (P) Ltd.,** 16 (142), Jani Jhan Khan Road, Royapettah, Chennai - 600 014. Editor: **T.Stalin Gunasekaran**

New Centurian Ungal Noolagam (Tamil English - Bilingual Monthly) Registered with RNI No :TNBIL/2009/28728. Postal Regn No. TN/CH(C)/601/2022-2024. WPP No: TN/PMG(CCR)WPP-673/2022-2024
Date of publication 1-7th of every month Posted at Egmore RMS / 1 Patrika Channel
If undelivered, please return to: New Centurian Ungal Noolagam,
16 (142), Jani Jhan khan road, Royapettah, Chennai - 14.

# நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின்

## முன் வெளியீட்டுத் திட்டம்

# தோழர் தமிழ்ஒளி ஆக்கங்கள்




## தோழர் தமிழ்ஒளி (1925 – 1965) நூற்றாண்டுச் சிறப்பு வெளியீடு

**2400 பக்கங்கள்**

விலை ~~ரூ.3000/-~~

முன் வெளியீட்டுத் திட்டத்தில்

**ரூ.1500/- மட்டுமே!**

(தபால் செலவு உட்பட)

1/8 டெம்மி அளவு தரமான தாள்
கெட்டி அட்டை வடிவமைப்புடன்

**டிசம்பர் 1 முதல் டிசம்பர் 31 வரை**
முன்வெளியீட்டுத் திட்டத்தில் பணம் செலுத்திப் பதிவு செய்துகொள்ளலாம்

**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,**
41-பி,சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600 050.
☎ 044 - 26251968, 26258410, 48601884 www.ncbhpublisher.in | email: info@ncbh.in